20 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
☎ 416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978


RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
DENTAL OFFICE
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

நதி 20 பாலம் 02 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JANUARY 15, 2010

# ஹெய்ட்டியில் நிலநடுக்கம்

ஜனவரி 12, ஆம் திகதி பிற்பகல் ஹெய்ட்டியின் தலைநகரான Port'au - Prince க்கு 16 கிலோமீற்றர் மேற்கில் ஏற்பட்ட றிச்சட் அளவில் 7.0 அலகு நிலநடுக்கத்தில் ஒரு




இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. ஹெயிட்டியின் சரித்திரத்தில் கடந்த 200 வருட காலத்தில் இப்படியொரு நிலநடுக்கம் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. இதனால் அங்கு கட்டப்பட்டுள்ள எந்த ஒரு கட்டிடமாவது ஒரு சிறிய நில நடுக்கத்தையாவது தாங்கக்கூடியதாக கட்டப்படவில்லை. இதனால் அங்கு நாடாளுமன்றம், வருமானவரித் திணைக்களம், பாடசாலைகள், வைத்தியசாலைகள் எல்லாமே இடிந்து விழுந்துள்ளன. ஐக்கியநாடுகள் சபையின் ஹெயிட்டிக்கான தலைமையகமும் இடிந்து விழுந்துள்ளது. கடமையில் இருந்த ஐக்கியநாடுகளின் உத்தியோகஸ்கர்கள் 16 பேர் இறந்தும் 56 பேர் காயமடைந்தும் 100 க்கும் மேற்பட்டவர்கள் பற்றிய தகவல் எதுவுமில்லை. ஹெய்ட்டிக்கான ஐக்கிய நாடுகள் சபையின் தலைமை அதிகாரி கொல்லப்பட்டுள்ளதாக ஹெய்ட்டியின் அதிபர் அறிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் பணியகத்தில் கனேடியர்கள் 55 பேர் நகர்காவலர்களாக பணிபுரிந்து வந்துள்ளனர். ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட கனேடியர்கள் அங்கு வாழ்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களில் எவராவது காயப்பட்டதோ அல்லது இறந்ததோ பற்றிய எதுவித தகவல்களும் தமக்குக் கிடைக்க வில்லையென கனேடிய வெளிவிவகார அமைச்சர் லோறன்ஸ் கனொன் தெரிவித்துள்ளார்.

கனடா ஏற்கனவே ஐம்பது இலட்சம் கனடிய டொலர்களை அவசர சேவைக்காக ஹெய்ட்டி அரசுக்கு வழங்கி உள்ளது. அத்துடன் புதன் காலை மீட்புப்பணிகளுக்காக கனடிய இராணுவம் அடங்கிய ஒரு குழுவை அனுப்பி வைத்துள்ளது. அடுத்த சரக்கு விமானக்கப்பல் உலங்கு வானூர்திகளுடன் ஒருகுழுவை தேடுதல், மீட்டுப்பணிக்காக வியாழக்கிழமை அனுப்பியது.

## 2010 ஜனாதிபதி தேர்தல் முடிவு தமிழர் கைகளில்

சிங்கள வாக்காளரிடையே பிளவு ஏற்பட்டநி-லையில் இலங்கையின் ஜனாதிபதி யார் என்பதை தீர்மானிக்கும் சக்தி தமிழர் கைகளில் விடப்பட்டுள்ளது.

புலிகளை தோற்கடித்த வெற்றிக்களிப்பில் சிங்களச் சமூகம் இன்னமும் உள்ளதாக சுட்டிக்காட்டும் "uhta' ஆசிரியர் விக்டர் ஐவன், இரு பிரதான வேட்பாளர்களில் யாரை ஆதரிப்பது என்பதில் அவர்கள் பிளவுபட்டுள்ளனர் என்கிறார்.

கடந்த 30 வருட காலத்தில் முதற் தடவையாக விடுதலைப்புலிகளின் பிரசன்னம் இல்லாத நிலையில் தமிழ் சிறுபான்மை சமூகம் வாக்களிக்கவுள்ளது என மேலும் தெரிவித்த அவர் அடுத்த ஜனாதிபதியைத் தமிழர்களே தீர்மானிக்கலாம் என்றார். எனினும், தமிழர்களில் எவ்வளவு பேர் இம்முறை வாக்களிப்பதற்கான உரிமையைப் பெறுவர் என்ற முக்கிய கேள்வி காணப்படுகின்றது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களில் பெருமளவு மக்கள் இன்னமும் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களில் மிகக் குறைந்த எண்ணிக்கையானவர்களே வாக்களிப்பர் என ஜனநாயகத்திற்கான இயக்கத்தைச் சேர்ந்த நிமல்கா பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்

"புலிகளை ஒடுக்குவதற்கான அரசியல் தீர்மானத்தை எடுத்தவர் தற்போதைய ஜனாதிபதியே எனப் பெரும்பாலான தமிழ் மக்கள் கருதுவதால், அவருக்கு எதிராகத் தமிழ் மக்கள் வாக்களிக்கலாம்" என புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஏ.எவ்.பி. செய்திச்சேவைக்குத் தெரிவித்திருக்கின்றார். மேலும் அடுத்த ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிப்பவர்களாக யுத்தத்தினால் காயப்பட்டுள்ள தமிழர்களே விளங்குவார்கள் என்றும் குறிப்பிட்டுள்ள ஏ.எவ்.பி. செய்திச்சேவை மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

பல தசாப்த காலமாக சுதந்திர இன ரீதியிலான தனிநாடொன்றிற்காக இலங்கையில் விடுதலைப்புலிகள் போரிட்டனர். அவர்கள் கடந்த வருடம் மே மாதத்தில் தோற்கடிக்கப்பட்டனர். எனினும், இலங்கையின் அடுத்த ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிப்பதில் தமிழ் வாக்காளர்களே தீர்க்ககரமான சக்தியாக விளங்கப் போகின்றனர் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

பெரும்பான்மை சிங்களவர்களின் வாக்கு மஹிந்த ராஜபக்ஷவிற்கும், முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கும் இடையில் பிளவுபட்டுள்ள நிலையில் மிகக்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்



**விளம்பரம்** எழுத்தாளர்கள், வாசகர்கள், விளம்பரதாரிகள், நண்பர்கள் மற்றும் அனைவரிற்கும் விளம்பரம் செய்தி இதழின் பொங்கல் நல் வாழ்த்துக்கள்.

உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
RBC Royal Bank®
Gteat Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers. • Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்
Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com

RBC Royal Bank
Switch your Mortgage to RBC
And Consolidate Your Debts for FREE!
• No Lawyers Fee • No Appraisal Fee • No Discharge Fee
•1st Time Home Buyers •Pre-Approvals
•Debt Consolidation
•Home Equity Line of Credit
•New Immigrant & Self-Employed Programs
•Over 20 years of experience with RBC
•Fast and Efficient Service
Always with a Smile!!!
Nala Brodie
Mortgage Specialist
(416) 409-4900
Nala.Brodie@Rbc.com
Markham&14th Ave
Greater Toronto Region
Let Me Optimize Your Mortgage Payments and other Debt Payments

Sales & LEASING
MARKVILLE TOYOTA
>KUMAR JEGASOTHY<
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி<
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

SATHYA SAIRAM DRIVING SCHOOL
• உங்களுக்கு பாஷை ஒரு பிரச்சினையா?
• பரீட்சை கேள்விகள் விளங்காததனால் வாகன எழுத்து பரீட்சையில் அல்லது வீதிப்பரீட்சையில் சித்தியடைய முடியவில்லையா? கவலை வேண்டாம்.
• உங்கள் வாகனம் சம்பந்தப்பட்ட எந்த பரீட்சையிலும் சித்தி அடைய வேண்டுமா?
அழையுங்கள் - 416-831-5217

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated

துரித பணமாற்றுச் சேவை
MONEY TRANSFER
• 52 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 19 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

வீடு வாங்கவும் விற்கவும்...
HOMELIFE
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife / Today Realty Ltd., Brokerage.
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

# எமது எண்ணம்

இந்த ஆண்டின் ஒக்ரோபர் 25ஆம் திகதி ஒன்ராரியோவில் மாநகர சபை, நகரசபை, உள்ளூராட்சி சபை அங்கத்தவர்களுக்கும் மற்றும் பாடசாலை அறங்காவலர்களுக்கு மான தேர்தல் நடைபெற உள்ளது. இதேதிகதியில் ரொறொன்ரோ மாநகர-சபைக்கான நகரபிதாவையும் (Mayor) 44 நகரசபை உறுப்பினர்களையும் (City Councillors) மற்றும் பாடசாலை அறங்காவலர்களையும் (Trustees) தெரிவு செய்வதற்கான தேர்தலும் நடைபெற உள்ளது. இதனைப்பற்றிய விடயங்கள் பத்திரிகைகள் வானொலிகள், தொலைக் காட்சிகளில் வரத் தொடங்கியுள்ளன. ஏற்கனவே இவ்வாறான பல தேர்தல்களில் பல தடவை எம்மவர்கள் போட்டியிட்டு சிலர் வெற்றி பெற்றும் பலர் தோல்வியடைந்தும் உள்ளனர். இதுபற்றிய தகவல்களையும் தரவுகளையும் கடந்த காலங்களில் எமது பத்திரிகை மூலம் இயன்றளவு தெரியப்படுத்தி வந்திருகின்றோம்.

இன்று எமது எண்ணத்தை தெரியப்படுத்த வேண்டி இருப்பதனால் இதனை எழுதத் தோன்றியது. திரு. நீதன் சண், தான் ஸ்காபரோ ரூச் தொகுதி 42 இல் நகரசபை உறுப்பினர் பதவிக்கு போட்டியிடுவதற்கான வேட்புமனுவை தாக்கல் செய்துள்ளார். அவர் தன்னுடைய அறிக்கையை எமது பத்திரிகைக்கு அனுப்பி அதனைப் பிரசுரிக்குமாறும் கேட்டிருந்தார்.

இதே தொகுதியில் கடந்தமுறை தேர்தலில் போட்டியிட்ட திரு. குமார் நடராஜா அவர்களும் அதே தொகுதியில் மீண்டும் நகரசபை தேர்தலில் நிற்க விரும்புவதாக ரொறென்ரோவில் இருந்து வெளிவரும் இரு தமிழ் பத்திரிகைகளிலிருந்து நாம் அறிந்து கொண்டோம். எம்மவர் தேர்தல்களின் நிற்பது அரசியலில் முதிர்ச்சியை காட்டுவ தாக கொள்ளலாம். ஆனால் இருவரும் ஒரே தொகுதியில் போட்டியிடுவது கவலைக்குரிய விடயம். இவ்வாறான நிலைமை எந்த ஒரு நல்ல முடிவையும் எவருக்கும் தரப்போவதில்லை?

இருவரும் குறிப்பிட்ட ஒரே தொகுதியில் போட்டிடுவதால் தமிழ் மக்களின் வாக்குகள் இரண்டாகப்பிரிபடக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டு. இதனால் இருவருமே வெற்றி வாய்ப்பை இழக்க நேரிடலாம் என்பது எமது எண்ணம். இவ்வாறான பல போட்டிகளில் எம்மவர் பலர் தோல்வியடைந்ததை ஏற்கனவே நடைபெற்ற தேர்தல்களில் நாம் கண்டுள்ளோம். இரு ஒரு ஆரோக்கியமான விடயமல்ல. நமது சமுதாயத்தை நேசிப்பவர்கள் என்ற நல்லநோக்கத்தில் இதனை எழுதத்தோன்றியது. இரு போட்டியாளர்களும் ஆலோசித்து, சந்தித்து கலந்துரையாடி இதற்கு ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டும் என்பதனை இதன் மூலம் தெரியப்படுத்துகின்றோம். அத்துடன் நீங்கள் இதற்கு ஒரு முன்னோடியாக இருத்தல் வேண்டும் என்பது எமது எண்ணம்.

- ஆசிரியர் குழு
விளம்பரம் பப்பிளிக்கேசன் இங்.

# வாசகர்களின் எண்ணங்கள்



விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிட இருக்கின்றோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம், அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram, 5215 Finch Ave. E. #201, Scarborough, ON M1S 0C2
2. Fax: 416.282.8059
3. email: vlambaram@sympatico.ca

என் கேள்விக்கு என்ன பதில்? என்ற புதுப்பகுதி சேர்க்கப்பட்டுள்ளது. உங்களுக்கு ஏற்படும் கேள்விகளை எங்களுக்கு எழுதி அனுப்பிவையுங்கள் அந்தக் கேள்வியை எந்த துறையில் தேர்ச்சி, அனுபவம், முதிர்ச்சி பெற்றவரிடம் பதில் பெற்று பிரசுரிக்கப்படும் என்பதையும் தெரியப்படுத்துகின்றோம்.

•••••••••••••

ஜனவரி 01, 2010இல் தங்களது பத்திரிகையில் வெளிவந்த 'மனைவி-குடும்பத்தின் காயத்ரி மந்திரம்?' என்ற தலையங்கம் கொண்ட ஆக்கத்தினைத் தந்தவரின் பெயர் தரப்படவில்லை. இதுபோன்ற தவறுகளை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.
-அன்பர், ரொறொன்ரோ.

உங்களுடைய தொலைநகலிற்கு நன்றி. தவறுதலாக நடந்துவிட்டது. இந்த ஆக்கத்திற்குரியவர் உங்கள் எல்லோராலும் மதிக்கப்படும் குறமகள் என அழைக்கப்படும் திருமதி. வள்ளிநாயகி இராமலிக்கம் ஆவர்.

# கனவுகள்

## கட்டுரை ஆசிரியனைப் பற்றி சில வரிகள்

தினமும் பலரின் கனவுகளைக் கேட்கின்றேன். என்ன ஆச்சரியம். பலரின் கனவுகள் ஒரே மாதிரியாகவே அமைந்துள்ளன. உதாரணத்துக்குச் சில

- இளம் வயதில் சொந்த வீடு, வாகனம் வாங்க ஆசை, கனவு.
- அதற்கும் முன்னதாக பதின்ம வயதில் (Teen Age) வாழ்க்கைத் துணையைப் பற்றிய கனவு, தகுந்த வாழ்க்கைத் துணை கிடைக்கும் வரை அக்கனவு தொடங்கின்றது. (சிலருக்கு அதற்கு பின்னாலும் தொடர்வது வேடிக்கை)
- நல்ல திருப்தியான வேலை அல்லது சொந்தத்தில் வெற்றிகரமான ஒரு தொழில்.
- பிறகு குழந்தைகளுக்கு நல்ல கல்வியைக் கொடுக்கக் கனவு.
- எதிர்பாரா நிகழ்வுகளுக்கும், ஓய்வு காலத்துக்கும் பணத்தைச் சேமிக்க ஆர்வம்.
- வாழ்வின் நடுவயதைக் கடந்த பிறகு பலருக்கு ஆன்மீகம் அல்லது இறையுணர்வில் ஏதோ ஒருவகை பற்று.

இப்படிப் பலரின் கனவுகளை ஒருவகைப்படுத்த முடிகின்றது. இதுதான் பல ஆண்டுகள் நிதித்துறையில் மக்களோடு கலந்து உறவாடியதில் நான் பார்த்த பொதுவான கனவுகள். இந்தக் கனவுகளை நனவாக்க பல சமயங்களில் நல்ல ஆலோசகனாக, நல்லாசிரியனாக இருந்திருக்கின்றேன்.

மொத்தத்தில் எல்லோரும் வேண்டுவது நல்ல வாழ்க்கை, நிம்மதியான வாழ்க்கை, மகிழ்வான வாழ்க்கை. வாழ்க்கைக்கு முன்னால் வரும் அடைமொழிகளனா 'நல்ல, நிம்மதியான, மகிழ்வானவற்றிற்கு பெரும்பாலும் நடைமுறை வாழ்க்கையில் தேவையாயிருப்பது பொருள். ஆனால் பொருள் ஒன்றுமட்டுமே போதுமா? என்றால் 'இல்லை' என்றுதான் சொல்ல வேண்டும். முன்கட்டுரையில் குறிப்பிட்டபடி அருளும் அதனால் வரும் நல்லொழுக்கங்களும் கூட தேவையாகின்றது.

இருந்தாலும் இவ்வுலக வாழ்க்கையில் முதன்மையாயிருப்பது பணமே. பணத்தைப் பற்றிய கனவு இல்லாதவர் யாருமேயில்லை. பரிசு சீட்டில் மில்லியன் டொலர் விழாதா என்று ஒரு நொடி நேரமாவது கனவு காண-ாமல் இருந்தவர் யாருமே இல்லை என்றே சொல்லாம். நாம் இங்கு பேசும் கனவு பகற்கனவு அல்ல. நனவாகக் கூடிய கனவுகள். நனவாக வேண்டும் என்று விரும்பும் கனவுகள். ஆனாலும் அந்தக் கனவுகளை எப்படி நனவாக்க வேண்டும் என்பது பல பேருக்குத் தெரிந்திருப்பதில்லை. அதைத் தெரிய வைப்பதே இக்கட்டுரைத் தொடரின் நோக்கம்.

இக்கட்டுரைத் தொடர் ஆசிரியரின் படிப்பு மற்றும் அனுபவ அறிவன் அடிப்படையில் கனவை நனவாக்கும் வழிவகைகளை ஆராய்கின்றது .

சில செய்திகள் யாவருக்கும் பொருந்துவன-வாக இருக்கும். வேறு சில செய்திகளோ கனடா வாழ்மக்களுக்கு மட்டுமே பொருந்துவனவாக இருக்கும். மொத்தத்தில் இக்கட்டுரைத் தொடரில் கனவைப் பூர்த்தியாக்கக்கூடிய பின்வரும் செய்திகளும், கட்டுரைகளும் உள்ளடங்கும்.

## - துறவி -

- தன்னம்பிக்கை
- தளரா முயற்சி
- தனிநபர் நிதியம்
- சிறுதொழில் கடன்கள்
- வீடு, வாகனம் முதலியன
- வரிகள்
- மக்களுக்குப் பயன்படும் நிகழ்கால நிகழ்வுகள்

மேற்குறிப்பிட்ட எல்லாவற்றிலும் இக்கட்டுரை எழுதுவோன் வல்லவனா என்றால் பதில் இல்லை என்பது தான். ஆனாலும் முன்னர் குறிப்பிட்டதைப் போன்று பல்லாண்டுகளாகப் படித்த நூல் மற்றும் அனுபவ அறிவை நம் மக்களுடன் பகிர்ந்து கொள்ள விளையும் ஆர்வமே இக்கட்டுரைத் தொடரை எழுதத் தூண்டுகின்றது. நல்ல கருத்துக்களைப் பரப்ப என்னை ஒரு கருவியாக நான் பார்க்கின்றேன். தவறிருந்தால் தயவு செய்து தெரியப்படுத்துங்கள். உங்களின் நல்ல கருத்துக்களும் என் வழியே பலரைச் சென்றடையும். தயங்காது அவ்வப்போது தொடர்பு கொள்ளுங்கள். தொடர்பு கொள்ள மின் அஞ்சல் முகவரி
vlambaram@sympatico.ca

விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

ஜெனிஷா ரெயிலஸ் & டிசைன்ஸ்
Jenisha Tailors & Designs
Saree Blouses, Salwar Kameez, Party-Frocks,
Saree pleetting, Bridal Dressing, Facial, Threading
போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்ய அழையுங்கள்
குறித்த நேரத்தில்
குறைந்த செலவில் நிறைந்த சேவை
416.298.6917 / 416.802.1039/ 519.748.0553
1560 Brimley Road, #216, Brimley & Ellesmere / 920 Marlmeadow Crt., Kitchener, ON



# கனடாவின் கதை - 13

## பாகம் - 2 ஐரோப்பியர் வருகை

கனடாவின் பூர்வீகக் குடிகள் பல்லாயிரம் ஆண்டுகள் கனடாவில் வாழ்ந்த போதும் அவர்களின் வரலாறு ஐரோப்பியரின் வருகைக்குப் பின்னரே எழுத்தில் வடிக்கப்பட்டது. இவ்வாறான வரலாற்றுக் குறிப்புக்களை வேட்டைக்காரர், வியாபாரிகள், மதம் பரப்புவோர், புதிய தேசங்களை கண்டுபிடிப்போர் எழுதி வைத்தனர். கிறிஸ்தோபர், கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடிப்பதற்கு முன் பிற கண்டங்களிலிருந்து சிலர் பூர்வீகக் குடிகளோடு தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தனர் என அறியப்படுகின்றது. ஐஸ்லாந்து வீரக் கதைகளில் (Icelandic Sagas) ஆதிகாலத்தில் ஐரோப்பியரின் தேசக் கண்டுபிடிப்புக்கள் பற்றி கூறப்படுகின்றது. இவ்வீரக் கதைகளின் படி பிஜானி ஹெர்ஜோல்ப்சன் என்ற முதல் ஐரோப்பியரே கனடாவில் கால் பதித்தவர் ஆவார். 985 இல் அல்லது 986 இல் இவர் ஐஸ்லாந்திலிருந்து கிறீன்லாந்துக்குப் பயணித்துக் கொண்டிருந்த போது காற்றினால் அடித்துச் செல்லப்பட்டு கனடாவின் மேற்குக் கரையோரப் பகுதியை அடைந்தார். இது காடுகள் நிறைந்த பகுதியாக இருந்தது. பின்னர் இவர் வடக்கு நோக்கிப் படகில் பயணித்துப் பின் கிழக்கே சென்று கிறீன்லாந்தை அடைந்தார் எனக் கூறப்படுகின்றது. இதைக் கேள்விப்பட்டு லீப் எறிக்சன் என்பவர் 1000 ஆம் ஆண்டில் 35 பேருடன் கனடா நோக்கிப் புறப்பட்டார். இவர் மூன்று இடங்களைச் சென்றடைந்தார். முதல் இரண்டு இடங்களும் "தட்டைக் கற்களின் நிலப்பகுதி" என்றும் (பபின் தீவாயிருக்கலாம் (Baffin Island) அடுத்து "காட்டுநிலப்பகுதி "(லப்றடோரா இருக்கலாம்) என்று கூறப்பட்டுள்ளது. மூன்றாவதாக தான் "வின்லாந்து" அடைந்ததாகவும் அங்கு திராட்சை மரங்கள் பெருவாரியாக காணப்பட்டதாகவும் கூறியுள்ளார். இவரது பிரயாணத்தைத் தொடர்ந்து பல நோஸ் (Norse) பேசுவோர் அங்கு குடியேற முனைந்த போது பூர்வீகக்குடிகள் இவர்களை விரட்டி வெளியேற்றினர். எனவே எறிக்சன், வட அமெரிக்காவில் கால் வைத்த முதல் ஐரோப்பியர் என்ற பெருமையைப் பெறுகின்றார். புதை பொருளாய்வுகளின் படி நியூபவுண்லாந்திலுள்ள லான்சே மெடோஸ் என்ற இடத்தில் கடற்கொள்ளைகாரரின் வதிவிடமிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்விடம் எறிக்சன் தரையிறங்கிய மூன்றாவது இடமாக இருக்கலாம். ஆனால் அங்கு திராட்சைகள் எதுவும் காணப்படவில்லை.

ஜோன் கபொட் என்ற இத்தாலியரும் கனடாவில் கால் பதித்ததாக கூறப்படுகின்றது. இவர் இங்கிலாந்திலுள்ள



படம் - 1 1660 இல் பூர்வீகக் குடிகளின் குடியிருப்புக்கள் இறடிசன் (Radison) என்பவர் வரும் காட்சி.

பிறிஸ்ரல் நகரிலிருந்து கிழக்கு நாடுகளுக்குச் செல்லக் கூடிய வியாபார வழியொன்றைக் கண்டு பிடிக்குமாறு ஏழாம் ஹென்றி மன்னரின் பணிப்பின் பேரில் புறப்பட்டார். இவர் 1497 இல் பெரும்பாலும் நியூபவுண்லாந்து அல்லது கேப்பிறெற்றன் தீவில் இறங்கியிருக்கலாமெனக் கருதப்படுகின்றது. இது ஆசியாவின் பகுதி என கபொட் நம்பினார். அடுத்த ஆண்டில் இரண்டாவது பிராயணத்தின் போது பபின் தீவிலிருந்து மேறிலான்ட் வரைக்குமான வடஅமெரிக்கக் கரையோரப் பகுதி வரை சென்றார். இதனை அடிப்படையாகக் கொண்டு வட அமெரிக்கக் கிழக்குக் கரையோரப் பகுதிகளுக்கு இங்கிலாந்து உரிமை கோரியது. பின்னர் இதே அடிப்படையில் நியூபவுண்லாந்து, கேப் பிறெற்றின் இதற்கருகே இருந்த பகுதிகளுக்கும் இங்கிலாந்து உரிமை கோரியது. இப்பகுதிகள் மீன் வளமுள்ள நீர்பகுதிகள் என கபொட் எழுதியிருந்தார். 1493 இல் போப்பாண்டவர் இப்பகுதி மீது அனைத்துலக ஆதிக்கம் தனக்கு உண்டெனக் கூறி ஸ்பெயினுக்கும் போத்துக்கல்லுக்கும் அனுமதி வழங்கினார். 1498 இல் ஜோ பெர்னான்டஸ் லவ்றடோர் என்ற தேசங்களை கண்டுபிடிக்கும் ஆய்வாளரும், பெறோ டி பார்சிலோஸ் என்பவரும் கனடாவில் கரையிறங்கி அப்பகுதிக்கு லப்றடோர் எனப் பெயரிட்டனர். மேற்கு ஐரோப்பாவின் றோமன் கத்தோலிக்க நாடுகள் 1497 க்கு பின் ஆண்டு தோறும் இப்பகுதிகளுக்கு வந்து மீன் பிடிக்க ஆரம்பித்தனர். இவற்றின் கப்பல்கள் நீயூபவுண்லாந்தின் தென்கிழக்கு கரையிலும் நோவாஸ்கோசியாவின் கிழக்கேயும் தங்கி நின்று மீன்பிடித்தன. சில கப்பல்கள் சென்லோறன்ஸ் வளைகுடாவுக்குட் சென்று பூர்வீகக் குடிகளிடமிருந்து விலை மதிப்புள்ள மிருதுவான உரோமத் தோல்களைப் பெற்றுக்கொண்டு விலை குறைந்த ஆபரணங்களைப் பெற்றுக் கொண்டனர்.

16 ஆம் நூற்றாண்டு முழுவதும் ஆண்டு தோறும் ஐரோப்பிய கப்பல்கள் கனடாவின் கரைகளுக்கு வந்து ஏராளமான மீன்களைப் பிடித்துச் சென்றன. இக்காலத்தில் பக்க வியாபாரமாக தோல்கள் வாங்குவதும் ஒழுங்கற்ற முறையில் நடைபெற்றது. ஐரோப்பாவில் இத்தோல்களை பதனிடும் முறை விருத்தி அடைந்து பீவர் தோலினால் செய்யப்பட்ட தொப்பிகள் நாகரிகச் சின்னங்களாகப் பிரபலமாயின. இதனால் தோல் வியாபாரத்துக்கு முக்கியத்துவங் கொடுத்து ஐரோப்பிய நாடுகள் கனடாவில் குடியேறுவதை ஊக்குவித்தன.

1583, ஆகஸ்ட் 5 இல் ஹம்பிறி கில்பேட் என்பவர் முதலாம் எலிசபெத் மகாராணியின் உரிமைப் பத்திரத்தோடு நியூபவுண்லாந்தைப் பொறுப்பேற்றார். 1598 இல் லாறோச் என்பவர் அரச ஏகபோக உரிமை பெற்று தோல் வியாபாரத்திற்காகக் கனடா வந்தார். இவர் நோவா ஸ்கோசியாவின் தென்கிழக்கிலுள்ள சேபிள் தீவில் ஒரு சிறிய குடியிருப்பை நிறுவினார். ஆனால் இது வெற்றியளிக்கவில்லை. இதுவே பிரான்சினால் ஆதரவளிக்கப்பட்ட முதலாவது குடியிருப்பாகும். பின்னர் 1600 இல் பிபர் சோவின் என்பவர் ரடோசாக் (Tadoussac) என்ற இடத்தில் ஒரு குடியிருப்பை நிறுவ முயற்சித்தார். அதுவும் தோல்வியில் முடிந்தது. ஆனால் ரடோசாக் என்ற இடம் ஒரு முக்கிய வியாபார இடமாக இருந்தது. சாமுவேல் டி சாம்ப்ளெயின் என்ற பிரெஞ்சு தேச கண்டுபிடிப்பாளர் 1605 இல் கனடாவுக்கு வந்து 1608 இல் போட் றோயஸ் என்ற இடத்திலும் கியூபெக் நகரத்திலும் நிரந்தரமான குடியிருப்புக்களை நிறுவினார். இவையே பிரான்சின் முதலாவது குடியிருப்புக்களாகும்.

- துறையூரான் -

ஆதாரம் - விக்கிபீடியா


STATE FARM INSURANCE
DISCOUNTS UP TO 30% ON CAR INSURANCE
Li Chen, Agent
http://www.licheninsurance.ca
Bus: 416-431-6800
Mano Selvam
Auto Insurance Representative
Bus:416-431-6800
தமிழில் உரையாடுவோம்
1200 Markham Road, Suite# 123, Scarborough, ON M1H 3C3
Intersection: Markham Road & Ellesmere Road
State Farm • Head Office, Aurora, Ontario • statefarm.ca™

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL



# மூலகாரணம்

## நோய் என்ன என்று உண்மை யிலேயே தெரிகிறதென்றால் அதற்கான காரணம் உங்களுக்குத் தெரியும்.



### சத்குரு வாசுதேவ்

காரணம் என்கிற கோட்பாட்டின் அடிப்படையில் தான் புறநிலை வாழ்க்கை நிகழ்ந்து கொண்டிருக்கிறது. நீங்கள் பருகக்கூடாத ஒன்றைப் பருகவோ, உண்ணக் கூடாத ஒன்றை உண்ணவோ செய்தால் ஒரு தொற்று நோய் உங்களுக்கு ஏற்படுகிறது.

நீங்கள் செய்த ஒரு செயலினுடைய விளைவு இந்தத் தொற்று நோய். எனவே நீங்கள் தொற்றுநோயைக் கொல்லக்கூடிய மருந்துகளை உட்கொள்ளுகிறீர்கள். தொற்றுநோயை ஏற்படுத்திய காரணத்தை அந்த மருந்தால் கொல்கிறீர்கள். ஏனென்றால் அது வெளிநிலையில் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் உள்நிலையிலே சில நோய்கள் ஏற்படுகிற போது தொற்றுநோயோடு ஒப்பிட்டால் இன்னும் ஆழமான காரணங்களால் அவை ஏற்படுகின்றன. சமச்சீரற்ற ஒரு தன்மை யினாலோ சக்திநிலையில் ஏற்பட்டிருக்கிற கோளாறுகளினாலோ சில நோய்கள் ஏற்பட்டு, அவை உடல்நிலையிலோ அல்லது மனநிலையிலோ வெளிப்படும்.

தொடர்புகளுக்கு: 416.300.3010
website: www. ishafoundation.org
www. ishayoga.org

இப்போது பரவலாகப் பேசப்படும் ப்ராணிக் ஹீலிங் ஆகட்டும் மற்ற ஹீலிங் முறைகளாகட்டும், விளைவை மட்டுமே அவை அகற்றுகின்றன. உங்கள் சக்திநிலையில் ஓரளவு உங்களுக்கு ஆளுமை வந்விடுகிறது என்றால் காரணத்துக்கும், விளைவுக்கும் இடையிலே நீங்கள் ஒரு திரையைப் போட்டுவிடுகிறீர்கள். எனவே விளைவு கரைந்துபோகிறதே தவிர, காரணம் அப்படியே இருக்கிறது.

இயற்கையைப் பொறுத்தவரை, வாழ்க்கை எனும் சக்திநிலையைப் பொறுத்தவரை, விளைவு என்பதே உள்ளே ஒரு காரணம் இருப்பதை உங்களுக்குக் காட்டிக் கொடுப்பதற்குத் தான். நீங்கள் எதைக் காரணம் என்று அழைக்கிறீர்களோ அது சக்திநிலையை சற்றே சலனப்படுத்தி, தன்னை வெளிப்படுத்திக் கொள்ளப் பார்க்கிறது.

உங்களுக்கு ஆஸ்துமா இருக்கிறதென்று வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் ஆஸ்துமாவை நான் அகற்றிவிடுகிறேன். ஆஸ்மா இல்லாமல் உங்களுக்குள் அதே விதமான சக்திநிலை இருக்கிறபோது உங்களுக்கு வேறுவிதமான சீர்கேடுகள் எந்த விநாடியிலும் ஏற்படலாம். நோயை நீங்கள் அகற்றி இருப்பீர்கள், மாறாக ஒரு விபத்து ஏற்படக் கூடும்.

'ஆஸ்துமா என்பது ஆழ்நிலையில் இருக்கிற ஒரு தொந்தரவு வெளிப்பாடு தான். ஆஸ்துமாவை மட்டும் அகற்றிவிட்டால் அது வேறுவித தீமையாகவோ அசம்பாவிதமாகவோ நிகழலாம். ஏனென்றால் உங்கள் சக்திநிலைகள் இன்னும் அதே சூழலில் தான் இருக்கின்றன. அதன் விளைவுகள் மட்டுமே அகற்றப்பட்டிருக்கின்றன. எனவே இன்னும் ஆழமாக இன்னும் துல்லியமாக அது மற்றொரு விளைவை ஏற்படுத்தி உங்களுக்குக் காண்பிக்கும். அதற்குப் பதில் அந்த நோய்குறித்த விழிப்புணர்வை உங்களுக்குக் கொண்டு வருகிறபோது, அந்த நோய்க்கான காரணத்தோடும் நீங்கள் தொடர்பு கொள்கிறீர்கள். தொடர்பு படுத்தப்படுகிறீர்கள்.

நோய் குறித்த விழிப்புணர்வு என்று நாம் பேசுகிற போது, என்ன இருக்கிறதோ ஏற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்கிறோம் என்றால் நோயிடம் நீங்கள் தோற்றுப் போகிறீர்கள் என்று அர்த்தம் இல்லை. நோய் குறித்த உண்மையான விழிப்புணர்வு உங்களுக்கு ஏற்படுகிறபோது, அந்த நோய்க்கு என்ன காரணம் என்கிற விழிப்புணர்வும் ஏற்படும். உங்கள் உடம்பின் எந்த ஒரு பாகத்திற்கு நீங்கள் சக்திநிலையில் ஒரு விழிப்புணர்வு ஏற்படுத்தினாலும், உடனே அங்கே செயல் தூண்டப்பட்டு சில விஷயங்கள் அங்கே நடக்கின்றன.

இதைப் பரிசோதித்துப் பார்க்கவேண்டுமானால் உங்கள் உடலின் ஏதாவது ஒரு பாகத்தின் மீது முழு கவனத்தை செலுத்தி வெறுமனே இருந்தால், அங்கே சக்திநிலையில் எழுச்சி ஏற்படுவதை நீங்கள் உணர்வீர்கள். ஏனென்றால் உடம்பின் அந்த பாகத்திற்கு ஒரு விழிப்புணர்வை நீங்கள் ஏற்படுத்துகிறீர்கள். அங்கே உயிர் சக்திகள் ஊட்டம் பெறுகின்றன. இப்படி ஒருவர் ஏதோ ஒன்றை சமனப்படுத்தி சக்திநிலைய ஓரளவு மாற்றமுடியும்.

உங்கள் சக்திநிலை ஏன் தொந்தரவிற்கு உள்ளானது? உங்கள் வாழ்க்கை முறை சரி யில்லாமல் இருக்கலாம், எண்ணங்கள் சரி யில்லாமல் இருக்கலாம், உணர்வுகள் சரி யில்லாமல் இருக்கலாம், அல்லது இவையனத்துமே காரணமாக இருக்கலாம். ஒருவிதமான கர்மவினையின் கட்டமைப்பை நீங்கள் ஏற்படுத்தியிருப்பதால், உங்கள் சக்திநிலையில் ஒருபதட்டத்தை ஏற்படுத்தி உடலளவில் தொந்தரவிற்கு ஆளான சக்தியாகவோ அல்ல ஒரு நோயாகவோ அது வெளிப்படுத்கிறது.

இந்த சக்திநிலையை நீங்கள் ஓரளவு ஹீலிங் முறையிலோ, கவனக்குவிப்பின் முறையிலோ, சிறிது விழிப்புணர்வின் நிலையிலோ சமனப்படுத்திவிட்டாலும் கூட, அதை ஏற்படுத்திய கர்மவினை அப்படியே தான் இருக்கிறது. அது உங்களுடய சக்தி உடம்பில் ஒரு மென்பொருள் போல் பதிவாகியிருக்கிறது. ஒருமென்பொருள் செயல்படுகிற அதே விதத்தில் அதுவும் செயல்பட முடியும்.


உங்களுக்குள் இருக்கும் உயிர்சக்திதான் உடலை உருவாக்கியிருக்கிறது. உங்கள் எலும்புகள், ரத்தம், சதை, உங்கள் மூளை உட்பட எல்லாமே இந்த சக்தியால் உருவாக்கப்பட்டவைதான். நீங்கள் பிறந்த போது உங்கள் உடல் சின்னஞ்சிறியதாய் இருந்து இன்று இவ்வளவு பெரியதாய் வளர்ந்திருக்கிறது. வெளியே இருக்கிற யாரும் அதை இழுத்துப் பெரிதாக்கவில்லை. உங்களுக்குள் இருக்கின்ற சக்திதான் அந்த உடம்பை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. இவ்வளவை அது செய்கிறபோது ஒரு சிறிய எலும்பு முறிவையோ, இதயத்திலிருக்கிற துவாரத்தையோ அதனால் அடக்க முடியாதா என்ன?

யாரையாவது, எப்படியாவது ஹீலிங் செய்யவேண்டுமென்று முயற்சி செய்வது கடவுளின் பங்கை கையில் எடுத்துக் கொள்வதாகும். சக்திநிலைகளை முறைகேடாகக் கையாள்வதாகும்.

இங்கே நாம் மனிதர்களுக்கு யோகக் கிரிை-யகள் சொல்லித்தருகிறோம். அதன்மூலமாக ஹீலிங் தானாகவே நிகழ்கிறது. நம்முடய நோக்கம் ஹீலிங் அல்ல. ஆனால் அது தானாகவே நிகழ்கிறது. ஆத்மசாதனையில் ஈடுபடுகிறபோது உங்கள் கர்மவினையே கரைந்து போகிறத. காரணம் கரைந்து போகிற போது அதனுடய விளைவு இருப்பதில்லை.

விற்பனையாகின்றது குறமகளின்
• கூதிர்காலக் குலாவல்கள்
• அகணிதன் அல்லது நதியின் பிழையன்று
என்ற இரு குறுநாவல்கள் அடங்கிய நூல்
கிடைக்குமிடம்: விளம்பரம் பத்திரிகை காரியாலயம்
தொலைபேசி இலக்கம்: 416.282.8059
**GTA Square - 5215 Finch Ave. E., #201**
**Middlaefield & Finch**

**APARTMENTS FOR RENT**



**$250 Move In Bonus**
*Best Building in Scarborough!*
*Clean, family building, FREE parking.*
*Close to schools, bus stop, Tamil store in building.*
**Pl. Call: 416.264.2818**

# உலகிலேயே மிகவும் உயர்ந்த கட்டிடம்




தை மாதம் 4ஆம் திகதி 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற கட்டிட திறப்பு விழாவுடன் உலகிலேயே மனிதர்களால் கட்டப்பட்ட கட்டிடங்களில் மிகவும் உயரமான கட்டிடம் என்ற சாதனையை ஐக்கிய அரபு இராச்சியத்தில் உள்ள டுபாய் நகரில் கட்டப்பட்ட Burj KhaliFa என்ற கட்டிடம் ஏற்படுத்தியுள்ளது.

இக்கட்டிடம் 828 மீற்றர் (2,720 அடி) உயரமானது. இக்கட்டிட வேலைகள் September மாதம் 21 ஆம் திகதி 2004 ஆம் ஆண்டு ஆரம்பமானது. இக்கட்டிடத்தை கட்டிமுடிக்க 150 கோடி அமெரிக்க டொலர்கள் செலவானது. (US$1.5 Billion) இக்கட்டிடம் பல சாதனைகளை முறியடித்துள்ளது. உலகிலேயே அதி உயரமான அவதான நிலையம் (Observatory) இங்குதான் உள்ளது. உலகிலேயே அதி உயரத்தில் உள்ள நீச்சல் தடாகமும் (Swimming Pool) இங்குதான் உள்ளது. 60 இலட்சம் சதுரஅடி (6 Million sqft.) பாவிக்கக் கூடிய இடமாக இக்கட்டித்தில் உள்ளது. இதில் 20 இலட்சம் சதுரஅடி வசிப்பிடங்களுக்கு (Residential Space) ஒதுக்கப்பட்டுள்ளது. இதை விட அலுவலகங்கள், கடைகள், மசூதி, சுகாதார மற்றும் உடற்பயிற்சி நிலையங்கள், உணவு விடுதிகள், களியாட்ட விடுதிகள், தங்குமிட விடுதிகள் என எல்லாமே உள்ளன. இக்கட்டிடத்தில் 12 ஆயிரம் பேர் சீவித்துக் கொண்டு இங்கேயே வேலை செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இக்கட்டிடத்திற்கு பாவிக்கப்பட்ட கண்ணாடியை பரப்பிவைத்தால் அது 17 கால்பந்தாட்ட மைதானங்களை முடுவதற்கு போதுமானதாகும்.

கனேடிய CN Tower கட்டப்பட்ட காலம் முதல் (1976) இதுவரை அதுவே உலகிலுள்ள உயரமான சுயாதீனமாக நிற்கும் கோபுரமாக இருந்தது. இதன் உயரம் 553 மீற்றர். போலந்தில் Gabin நகரில் கட்டப்பட்ட Warsaw Radio Mast எனப்படும் கோபுரமே இதுவரை உலகில் உள்ள உயரமான கோபுரமாக இருந்தது. இது 646 மீற்றர் உயரமானது. தாய்வானிலுள்ள தாய்பெய் (Taipei) நகரில் கட்டப்பட்ட 'Taipei 101 எனப்படும் கட்டிடமே இதுவரை உலகிலேயே உள்ள உயரமான கட்டிடம் ஆக இருந்தது. இதன் உயரம் 509 மீற்றர்.

தற்போது திறக்கப்பட்ட Burj Khalifa என்ற கட்டிடம் மேற்கூறிய மூன்று சாதனைகளையும் முறியடித்து தற்போது உலகிலுள்ள அதி உயரமான கட்டிடம், கோபுரம், என்பதோடு மட்டுமல்லாமல் இதுவரை மனிதர்களால் கட்டப்பட்ட எந்த வகையான செயற்கை அமைப்புக்களிலும் (Structure) இதுவே உயரமானது என்னும் சாதனையை ஏற்படுத்தியுள்ளது.

## நீர்ப்பிராணி காட்சிச்சாலை (*Aquarium*)




நன்றி : National Post

Ripley entertainment என்னும் அமெரிக்க நிறுவனம் கனடாவின் CN Tower இற்கு அருகில் ஒரு நீர்ப்பிராணி காட்சிச்சாலையை கட்ட திட்டமிட்டுள்ளது. இது CN Tower இற்கு அடியில் கிழக்குப் பக்கத்தில் கிட்டத்தட்ட 2 இலட்சம் சதுர அடிப்பரப்பில் கட்டப்பட உள்ளது. இதே நிறுவனம் CN Tower இற்கு அடியில் மேற்கு பக்கத்தில் 50 ஆயிரம் சதுர அடியில் பல உணவகங்களைக் கொண்ட ஒரு கடைத் தொகுதியையும் (Restaurant Complex) கட்ட திட்டமிட்டுள்ளது. கனடாவில் அதிகூடிய சுற்றுலா பயணிகள் வரும் இடமாக CN Tower இருப்பதாலேயே இதன் அருகிலேயே இந்த நீர்ப்பிராணி காட்சிச்சாலையை கட்டுவது என்ற முடிவை தாங்கள் எடுத்ததாக Ripley Entertainment நிறுவனம் அறிவித்துள்ளது. CN Tower ஐ பார்ப்பதற்கு வருடம் தோறும் 20 இலட்சம் சுற்றுலா பயணிகள் வருவதாக கணக்கிடப்பட்டுள்ளது.

சிவ ஞானநாயகன்
vlambaram@sympatico.ca



TORONTO BUSINESS COLLEGE
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



COMPUTERIZED ACCOUNTING DIPLOMA
- EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள் ✔
- 3 வருடங்களுக்குள் EI பெற்றவர்கள் ✔
- 5 வருடங்களுக்குள் Maternity Benefits பெற்றவர்கள் ✔

அரசாங்க நிதி உதவியில் இலவசமாக கற்கலாம்

CERTIFICATE COURSES
Take One Get One Free
Windows,Word,Excel,Power Point,Access,Outlook
Photo Shop,Quick Books,Simply Accounting,Accpac
Day,Evening,Week Ends
FREE COMPUTER TRAINING FOR BEGINNERS

Canadian Securities Course
Exam 1 & 2
By Arun Senathirajah,ACIB,MBA
Course Start Date: Jan. 16th,2010

416-291-5155
4465 SHEPPARD AVE. EAST #208
( SHEPPARD & BRIMLEY )
SCARBOROUGH
t.businesscollege@gmail.com
(REGISTERED AS A PRIVATE CAREER COLLEGE UNDER THE PRIVATE CAREER COLLEGES ACT 2005)

## கனடா எழுத்தாளர் இணையம் நடத்தும் கவியரங்கும் கருத்தரங்கும்

சிறப்பு நிகழ்வாக
காமராஜர் பல்கலைக் கழகத்துத் தமிழ்த்துறைப் பேராசிரியர் கரு. முத்தையா அவர்களின் இலக்கியச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

இடம்: ஸ்காபுரோ சிவிக்சென்ரர்
காலம்: 17.01.2010 ஞாயிறு 9:30 மு.ப.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

த. சிவபாலு
தலைவர்
தமிழ் எழுத்தாளர் இணையம் -கனடா

# அடுத்து அசத்தப்போவது யாரு? அசின்??

இந்திய அணியின் வெற்றிக் கேப்டனாக வலம் வரும் தோனி, விளம்பர உலகின் விருப்ப நாயகனாகவும் திகழ்கிறார்.

சமீபத்தில் பாலிவுட் கவர்ச்சி நாயகி பிபாஷா பாசுவுடன் இணைந்து "ஷு" விளம்பரத்தில் தோன்றி பரபரப்பு ஏற்படுத்தினார். தற்போது நடிகை அசினுடன் ஜோடி சேர்ந்து இன்னொரு விளம்பரத்தில் கலக்கியுள்ளார். இந்திய கிரிக்கெட்டில் காலடி எடுத்து வைத்த மிக குறுகிய காலத்தில் அசுர வளர்ச்சி கண்டவர் தோனி. "டுவென்டி-20" உலக கோப்பை வென்ற பின், இவரது புகழ் பன்மடங்கு உயர்ந்தது. விளம்பரநிறுவனங்கள் இவரைத் தேடி வந்தன. ஒரு நிறுவனத்துக்கு "மாடலாக" தோன்ற பல கோடி ரூபாய் சம்பளமாக பெற்றார்.




முதலில் சக கிரிக்கெட் வீரர்களுடன் விளம்பர படங்களில் தலை காட்டிய இவர், சமீப காலமாக பிரபல நடிகைகளுடன் இணைந்து அசத்துகிறார். பிபாஷா பாசுவுடன் நடித்த " ஷு" விளம்பரம் "கிளிக்" ஆக, தற்போது அசினுடன் இணைந்து "பிக் பஜார்" நிறுவனத்துக்கு "மாடலாக" தோன்றியுள்ளார். தமிழில் இருந்து இந்தி உலகிற்கு தாவியுள்ள அசினுக்கு இந்த விளம்பரம் இன்னொரு திருப்புமுனையை ஏற்படுத்தலாம். இவ்விளம்பர படப்பிடிப்பின் ஓய்வு நேரங்களில் கேப்டன் தோனியும், நடிகை அசினும் ஜாலியாக பழகியுள்ளனர். இருவரும் ஒருசில மணி நேரத்தில் விதவிதமான உடைகளில் தோன்றியுள்ளனர்.

அசின் குறித்து தோனி கூறுகையில், "அவர் குழந்தை குணம் படைத்தவர். அனைவரிடத்திலும் அன்பாக பழகக்கூடியவர்," என்றார். தோனிக்கு நடிகைகளின் அன்புத் தொல்லை அதிகம். பாலிவுட் நடிகைகள் தீபிகா படுகோனே, பிபாஷா பாசு, பிரித்தி ஜிந்தா மற்றும் கோலிவுட்டில் லட்சுமி ராயுடன் இவருக்கு உள்ள தொடர்பு பற்றியும் வெளியாயின. இவர்கள் வரிசையில் அசினும் சேருவாரா?

அசத்திய கிரிக்கெட் நட்சத்திரங்கள்

## விளையாட்டுத் தகவல்கள் 275

கடந்த 2009ம் ஆண்டு இந்திய கேப்டன் தோனி, ஆஸ்திரேலிய கேப்டன் பாண்டிங், உள்ளிட்ட நட்சத்திர கிரிக்கெட் வீரர்களுக்கு சிறப்பானதாக அமைந்தது. கடந்த ஆண்டு நடந்த ஒருநாள் போட்டியில் அதிக ரன்கள் குவித்த வீரர்கள் வரிசையில் இந்திய கேப்டன் தோனி, ஆஸ்திரேலிய கேப்டன் பாண்டிங் முன்னிலை வகித்தனர். இவர்கள் இருவரும் தலா 29 போட்டியில் பங்கேற்று 1198 ரன்கள் குவித்தனர். இவர்களை தொடர்ந்து கடந்த ஆண்டு நடந்த ஒருநாள் போட்டியில் ஆயிரம் ரன்களை கடந்த வீரர்கள் வரிசையில் ஆஸ்திரேலியாவின் மைக்கேல் ஹசி (1166 ரன்), ஜிம்பாப்வேயின் மசகட்சா (1087 ரன்), ஆஸ்திரேலியாவின் ஷேன் வாட்சன் (1013 ரன்), இலங்கையின் தில்ஷன் (1000 ரன்) ஆகியோர் உள்ளனர்.

சமரவீரா:
இலங்கையின் சமரவீரா (1234), மகிலா ஜெயவர்தனா (1194 ரன்) கடந்த ஆண்டு நடந்த டெஸ்ட் போட்டியில் அதிக ரன் குவித்த வீரர்கள் வரிசையில் முதலிரண்டு இடம் பிடித்தார். டெஸ்ட் அரங்கில் ஆயிரம் ரன்களை கடந்த வீரர்கள் வரிசையில் இங்கிலாந்து கேப்டன் ஸ்டிராஸ் (1172 ரன்), ஆஸ்திரேலியாவின் காடிச் (1111 ரன்), இலங்கையின் தில்ஷன் (1097 ரன்), கேப்டன் சங்ககரா (1083 ரன்), ஆஸ்திரேலியாவின் மைக்கேல் கிளார்க் (1042 ரன்) ஆகியோர் உள்ளனர். இந்தியா சார்பில் டிராவிட் அதிகபட்சமாக 6 டெஸ்டில் பங்கேற்று 747 ரன் எடுத்தார்.

ஜான்சன் மிரட்டல்:
ஆஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளர் ஜான்சன், கடந்த ஆண்டு நடந்த டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டியில் அதிக விக்கெட் வீழ்த்திய வீரர்கள் வரிசையில் முதலிடம் பிடித்தார். இவர் கடந்த ஆண்டு 13 டெஸ்ட், 30 ஒருநாள் போட்டியில் விளையாடி முறையே 63, 46 விக்கெட் வீழ்த்தினார். இந்திய சார்பில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டியில் சாதித்த பவுலர்கள் வரிசையில் ஹர்பஜன் சிங் முன்னிலை வகித்தார். இவர் 6 டெஸ்ட், 26 ஒருநாள் போட்டியில் விளையாடி முறையே 29, 31 விக்கெட் வீழ்த்தினார்.

வங்கதேசம் அசத்தல்:
கடந்த ஆண்டு வங்கதேச அணி 19 ஒருநாள் போட்டியில் பங்கேற்று 14 வெற்றி, 5 தோல்வியை பதிவு செய்தது. இதன்மூலம் அதிக வெற்றி சதவீதம் பெற்ற அணிகள் வரிசையில் வங்கதேச அணி (73.68%) முதலிடம் பிடித்தது. இதனை தொடர்ந்து இந்தியா (62.96%), ஆஸ்திரேலியா (62.16%) உள்ளிட்ட அணிகள் உள்ளன.

ஆஸி., முதலிடம்:
கடந்த ஆண்டு ஆஸ்திரேலிய அணி 13 டெஸ்ட் போட்டியில் விளையாடி 7 வெற்றி, 3 தோல்வி, 3 "டிராவை" பதிவு செய்தது. இதன்மூலம் அதிக வெற்றி சதவீதம் பெற்ற அணிகள் வரிசையில் ஆஸ்திரேலிய அணி (53.84%) முதலிடம் பிடித்தது. இதனையடுத்து இந்தியா (50%), இலங்கை (45.45%) அணிகள் உள்ளன.

### விம்பிள்டனுக்கு கிடைத்த கவுரவம்

விம்பிள்டன் டென்னிஸ் தொடருக்கு புதிய கவுரவம் கிடைத்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் (2000 முதல் 2009) சிறந்த விளையாட்டு உணர்வை வெளிப்படுத்திய போட்டிகளுக்கான கருத்துக் கணிப்பில் விம்பிள்டனுக்கு முதலிடம் கிடைத்துள்ளது. இந்த கருத்துக் கணிப்பை லண்டனை சேர்ந்த "தி டெலிகிராப்" பத்திரிகை நடத்தியுள்ளது.

உலகின் "நம்பர்-1" வீரரான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், இரண்டாம் நிலை வீரரான ஸ்பெயினின் ரபெல் நடால் இருவருக்கும் இடையே, கடந்த 2008 ம் ஆண்டு நடந்த விம்பிள்டன் பைனல் போட்டிக்கு, கருத்துக் கணிப்பில் 17 சதவீத ஓட்டுகள் கிடைத்துள்ளது. 7 மணி நேரம் நீடித்த இப்போட்டியில் நடால் 4-6, 4-6, 7-6, 7-6, 9-7 என்ற செட் கணக்கில் பெடரை வீழ்த்தி கோப்பை வென்றார். டென்னிஸ் வரலாற்றிலும் இப்போட்டி மிகச் சிறந்ததாக கருதப்படுகிறது.

இரண்டாவது இடம்:
கடந்த 2005 ஆம் ஆண்டு இஸ்தான்புலில் நடந்த சாம்பியன்ஸ் லீக் பைனல் போட்டி 15 சதவீத ஓட்டுகளை பெற்று, கருத்துக் கணிப்பில் இரண்டாவது இடம் பெற்றுள்ளது. விறுவிறுப்பாக நடந்த இப்போட்டியில் லிவர்பூல் அணி (4-2) "பெனால்டி ஷூட் அவுட்" முறையில் ஏ.சி.மிலனை வீழ்த்தியது. கால்பந்து அரங்கில் மறக்க முடியாத நிகழ்வுகளுள் இதுவும் ஒன்று.

கடந்த 2004 ஆம் ஆண்டு நடந்த பிரிமியர் லீக் பைனல் போட்டி 13 சதவீத ஓட்டுகளுடன் மூன்றாவது இடத்தையும், 2003 ஆம் ஆண்டு நடந்த ரக்பி உலககோப்பை பைனல் போட்டி, 11 சதவீத ஓட்டுகளுடன் நான்காவது இடத்தையும் பெற்றுள்ளன.

ஆஷஸ் கோப்பை:
இந்த கருத்துக் கணிப்பில் இடம் பெற்ற ஒரே கிரிக்கெட்டாக, 2005 ம் ஆண்டு நடந்த ஆஷஸ் கோப்பை கிரிக்கெட் தொடர் இடம் பெற்றுள்ளது. 18 ஆண்டுகளுக்குப் பின் இங்கிலாந்து கிரிக்கெட் அணி 2-1 என்ற கணக்கில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக ஆஷஸ் கோப்பையை கைப்பற்றியது.

### ஆஸ்துமாவை குறைக்க நீச்சல் பழகியவர்

ஆஸ்துமாவை குறைக்க நீச்சல் பழகியவர் பல்வேறு உலக சாதனைகளுக்கு சொந்தக்காரரானார். டான் பிரேசர் 1937 செப்டம்பர் 4-ல் அவரது பெற்றோருக்கு 8-வது குழந்தையாக ஆஸ்திரேலியாவில் நியூ சௌத் வேல்ஸில் பிறந்தார். ஆஸ்துமாவில் இருந்து நிவாரணம் பெறுவதற்காக நீச்சல் பழகத் தொடங்கினார். 1956-ல் மெல்போர்னில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் தனது 19-வது வயதில் களம் கண்டார்.

100 மீ. பிரீஸ்டைல், 100 மீ. பிரீஸ்டைல் தொடர் நீச்சலில் தங்கமும், 400 மீ. பிரீஸ்டைலில் வெள்ளியும் வென்றார். இதனால் "வாட்டர் பேபி" என்றழைக்கப்பட்டார்.

தொடர்ந்து 1960 ரோம் ஒலிம்பிக், 1964 ரோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் 100 மீ. பிரீஸ்டைலில் தங்கம் வென்றார்.

ஒலிம்பிக்கில் நீச்சலில் ஒரே பிரிவில் தொடர்ந்து 3 முறை தங்கம் வென்ற முதல் வீராங்கனை என்ற சாதனையைப் படைத்தார்.

1962-ல் 100 மீ. தூரத்தை ஒரு நிமிடத்துக்குள் கடந்த முதல் வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றார். 1956 டிசம்பர் 1 முதல் 1972 ஜனவரி 8 வரை பிரீஸ்டைலில் அவரது சாதனை முறியடிக்கப்படவில்லை.

1964 ரோக்கியோ ஒலிம்பிக் போட்டி சமயத்தில் ஜப்பான் அரசர் ஹிரோஹிடோவின் அரண்மனைக்கு வெளியே இருந்த கம்பத்தில் பறந்த ஒலிம்பிக் கொடியைத் திருடினார். கைது செய்யப்பட்ட அவர், பின்னர் விடுவிக்கப்பட்டார். அவருக்கே அந்தக் கொடியை அரசர் அளித்தார்.

எனினும், அவரது இந்த செயலுக்காக ஆஸ்திரேலிய நீச்சல் யூனியன் அவருக்கு 10 ஆண்டுகள் தடை விதித்தது. 1968-ல் தடை விலக்கிக் கொள்ளப்பட்டாலும் அவரால் ஒலிம்பிக் போட்டிக்குத் தயாராக முடியவில்லை.

2000-ம் ஆண்டில் சிட்னியில் ஒலிம்பிக் போட்டி நடந்தபோது தொடக்க நிகழ்ச்சியில் ஒலிம்பிக் ஜோதியை ஏந்தும் சிறப்பைப் பெற்றார்.

பிரேசர் பெயரில் ஆஸ்திரேலியாவில் விளையாட்டு விருது வழங்கப்பட்டு வருகிறது.

ஒலிம்பிக்கில் 4 தங்கம் உள்பட 8 பதக்கங்கள், காமன்வெல்த் போட்டிகளில் 6 தங்கம் வென்றதுடன் 39 முறை உலக சாதனைகள் படைத்து, 1964-ல் மட்டும் தனது சாதனையையே 10 முறைக்கும் மேல் முறியடித்து சிறப்பு பெற்றார். இவ்வளவு சாதனைகளுக்கு சொந்தக்காரரான பிரேசரை உலகின் மிகச் சிறந்த வாழும் நீச்சல் வீராங்கனை என 1999-ல் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி அறிவித்தது பொருத்தம்தானே!

### வேகப்பந்துவீச்சு வேங்கை

ஆஸ்திரேலியா உருவாக்கிய மிகச் சிறந்த கிரிக்கெட் வீரர்களுள் டென்னிஸ் லில்லியும் ஒருவர் என்றால் அது மிகையல்ல. எதிரணி பேட்ஸ்மேன்களுக்கு சிம்மசொப்பனமாகத் திகழ்ந்தவர் டென்னிஸ் லில்லி.

ஆஸ்திரேலியாவின் பெர்த் நகருக்கு அருகிலுள்ள சுபைகோ கிராமத்தில் 1949-ல் பிறந்தார். இளமையிலேயே இருந்த கிரிக்கெட் ஆர்வத்தால் 21-வது வயதிலேயே ஆஸ்திரேலிய அணியில் இடம்பிடித்தார். 1970-71-ல் இங்கிலாந்துக்கு எதிராக நடைபெற்ற ஆஷஸ் தொடரில் அறிமுகமானார்.

முதல் டெஸ்ட் போட்டியிலேயே 84 ரன்களுக்கு 5 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார். ஒருநாள் போட்டிகளில் லில்லி 1972-ல் அறிமுகமானார். ஆஸ்திரேலிய சக வீரர்களால் வேகப்பந்து வேங்கை என்று அழைக்கப்பட்டார். 1973-ல் விஸ்டன் சிறந்த கிரிக்கெட் வீரர் விருதையும் அவர் தட்டிச் சென்றார்.


பந்தை வேகமாக வீசுவதில் லில்லிக்குள்ள லாவகம் வேறு யாருக்கும் இல்லை எனலாம். வெகு தூரத்திலிருந்து ஓடிவந்து அதை அவர் பெப்லிங் செய்வதே தனி அழகு. அவரின் பௌன்ஸருக்கு பயப்படாத பேட்ஸ்மேன்களே இல்லை என்று சொல்லும்



எஸ். கணேஷ்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

ELECTRICAL WORKS



**FRIDGE, WASHER, DRYER** போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# ஆதன வர்த்தகத்தில் எதிர்பார்ப்புகளுடன் கூடிய புத்தாண்டு

அடுத்துவரும் ஆறு (6) மாதம் தொடக்கம் ஒன்பது (9) மாதங்களில் கனடிய வட்டிவீதம் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ் அதிகரிப்பு, எப்பொழுது நிறுத்தப்படும் என்பது கனடிய பொருளாதாரத்தில் தான் தங்கியுள்ளது. பொருளாதார ஆய்வாளர்களின் எதிர்வு கூறலின்படி 2011 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் இப்பொழுது நடைமுறையில் இருக்கும். முதன்மை வட்டிவீதமான 2.25% இது இருமடங்காக அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கலாம்.

இதனை, எவ்வாறு எதிர்காலத்தில் சமாளிக்கலாம்.
1. இப்பொழுதுள்ள வட்டிவீதத்தில் இறுக்கமான அடமானத்தில் (Closed Mortgage) வைத்திருத்தல்.

அதிகரித்துவரும் ஆதனச்சந்தையில், வீடு வாங்க இருப்பவர்கள், இப்பொழுது நடைமுறையில் இருக்கும் அதிகுறைந்த வட்டிவீதத்தில் இறுக்கமான அடமானக் கடனில் (Closed Mortgage) வைத்திருத்தல். இன்றைய காலகட்டத்தில் 5 வருடத்திற்கு இறுக்கிய அடமானக் கடன்வட்டி வீதம் (Closed Mortgage) 3.69% இற்கும் 3.99% இடையில், வீடு வாங்குபவரின் நிலைமைக்கு ஏற்ப பெறக்கூடியதாக உள்ளது. ஆனால் பொதுவாக நிதி நிறுவனங்களில் வட்டிவீதத்தினை 4.19% இலிருந்து 5.49% வரை விளம்பரம் செய்கின்றது. அனேக வங்கிகள் 1.6%வரையிலான கழிவைக் கொடுக்கின்றன. உங்களுடைய புத்திசாலித்தனமான பேச்சுவார்த்தைகளினால் ஆகக்கூடிய கழிவைப் பெறமுடியும்.

Variable Mortgage இல் அடமானக்கடனை வைத்திருப்பவர்கள் அதிகளவு வட்டியை மீதப்படுத்தலாம் என்பது மிக உண்மை. சிலவேளை அதிக பணம் சேமிப்பதனைவிட, தொடர்ந்து கடனைச் செலுத்துவது, சிலருக்கு மிக முக்கியமாக இருக்கும். இதனால் ஐந்து (5) வருடத்திற்கு மாதாந்த கட்டுப்பணம் தெரிந்து விடும். அதற்கேற்றவாறு அடுத்த கட்ட நிகழ்வுகளை நிர்ணயிக்கலாம். இதனால் Variable Mortgage அல்லது Closed Mortgage என்று அவர்களின் நிலைமைகளிலே தங்கியுள்ளது. இந்த முடிவு தனிப்பட்டவர்களின் நிதி நிலைமைக்கேற்ப மாறுபடும்.

2. உங்களுடைய நடைமுறையில் இருக்கும் அடமானக்கடனின் காலம் மேலும் 2 - 3 வருடங்களில் திருப்பி கடனைப்புதுப்பிக்கும் காலமாக (Renewal Mortgage) இருக்குமாக இருந்தால், அந்தக்காலத்தில் நிச்சயமாக வட்டிவீதம் அதிகமாகவே இருக்கும் என எண்ணலாம். இதற்காக என்ன செய்ய முடியும்.

ஒன்றில் உங்களுக்கு இருக்கும் மற்றைய கடன்களை (உதாரணமாக வாகனக்கடன், கிறடிட் காட் கடன்...) இல்லாமல் செய்து, இருக்கும் அடமானக்கடனை, அதிகரிக்க இருக்கும் வட்டி வீதத்திற்கு ஏற்ப கடனைச் செலுத்துவது அல்லது இருக்கும் காலத்தை (Amortization Period) நீடித்து மாதாந்த கட்டுப்பணத்தை குறைவடையச் செய்தல், இதில் உள்ள தீமை என்ன என்றால், அதிகளவு வட்டியை கடனிற்கு எதிராகச் செலுத்தவேண்டி ஏற்படலாம். ஆனால் மாதாந்த கொடுப்பனவு கட்டுக்குள் அடங்கலாம்.

பணத்தைச் சேமித்து நிதிநிறுவனங்களில் முதலீட்டு தொகையில் (GIC) வைத்திருப்பவர்களிற்கு வட்டிவீதம் அதிகரிப்பது அனுகூலமாகவே இருக்கும். பல இளைப்பாறியவர்கள் இந்த வருமானத்திலேயே தங்கியுள்ளனர். இருந்தும், கடன்பெற்று இருப்பவர்களிற்கு கடன்பழுவை அதிகரித்தே வரும். எனவே இதனை ஆவலுடன் எதிர்பார்த்து அதற்குரிய முன் ஏற்பாடுகளை செய்வதே சாலச்சிறந்தது.

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

**நாமும் நமது இல்லமும்**

ராஜா மகேந்திரன்

**தொடர் - 312**


**HomeLife GTA Realty Inc., Brokerage***

Independently owned & operated

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"



Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

1711 McCowan Rd. #206, Toronto
Tel.: 416.321.6969

145 Traders Blvd # 29, Mississauga
Tel.: 905.712.2666

## NEWER 2 BEDROOM CONDO. FOR SALE

***KENNEDY / ELLESMERE / BIRCHMOUNT***



- 2 Bedroom, excellent condition unit for sale in a highrise condo. for sale
- Laminated floor, ceramic floor
- 1 parking, • 1 locker included.
- 24 hours security guard, swimming pool, recreation place.
- Hydro, water, gas included in the maintenance fee.
- 2 full washrooms • Fridge, stove, washer, dryer, built in dishwasher, sakura fan.

## CONDO. FOR SALE - SCARBOROUGH

***MCLEVIN & NEILSON (Mayfaif Buildings)***

- 2 Bedroom corner unit
- 1265 sqft
- Laminated, ceramic floor
- 2 parking, 1 locker included.
- Laminated floor, Ceramic floor
- Price $184,900
- 24 hours security, swimming pool, in a separate building
- Close to doctors, pharmacy, mall, ttc, highway....

### *Party Rental Business for Sale*

- Brimley / Progress
- Lots Of Rental Items Meant For Variety Of Functions / Occasions.
- Gross Rent $2800/Month Plus Utilities.
- Asking Price $99,000 Plus Stock

## Condo. sale - Mississauga

- ***Dundas / Hurontario***
- 1 bedroom condo.
- Renovated kitchen
- Laminated floor
- 1 parking, locker
- Unobstructed view
- maintenance fee only $322
- Asking $149,900

### *Commercial Building unit for sale*

- Markham Rd. / Major Mackenzie
- 1,233 Sq.Ft.
- Prime location, visible Strip Plaza
- Suitable Uses Restaurant/Retail (Currently running as a bakery business.
- Asking $349/sqft

### *Commercial/Retail for Lease*

- 5215 Finch Ave E, Middlefield & Finch
- Rent $950 Gross Lease
- Lowest Rent To Afford Any Bussiness, Great Opportunity!
- Only few units left on the mainfloor
- Underground And Surface Parking
- Don't miss

**Nantha Aiyadurai**

Cell: 613 850 9931

COLDWELL BANKER COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்




Relocation Service
OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# கல்வி அழகே அழகு

நாள்: 02.11.2009, திங்கட்கிழமை
இடம்: கொட்டகலை தமிழ் மகாவித்தியாலயப் பிரதான மண்டபம்
ஏற்பாடு: கொட்டகலைச் சமூக பட்டதாரிகள் அமையம்
விழா: கொட்டகலைப் பிரதேச தமிழ்ப் பாடசாலைகளில் 2008ஆம் வருட க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்கள், 2009 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள், அமையத்தின் அங்கத்தவர்களில் கல்வித்துறை சார்ந்து 25 வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்கள் ஆகியோருக்கான பாராட்டு வைபவம்.

தலைமை: திரு. பி. ராமதாஸ்

இந்த விழாவுக்குத் தலைமை தாங்கிக் கொண்டிருக்கின்ற கொட்டகலைச் சமூக பட்டதாரிகள் அமையத்தின் தலைவர் திரு. பி. ராமதாஸ் அவர்களே!
முதன்மை விருந்தினர் கலாநிதி உலகநாதர் நவரத்தினம் அவர்களே!
சிறப்பு மற்றும் கௌரவ விருந்தினர்களே!
பரீட்சைகளிலே சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களே!
பெற்றோர்களே! ஆசிரியர்களே!

நான் கொழும்புக்கு வந்திருப்பதை வருமானவரித்துறை வல்லாளர் திரு. கு. குணநாயகம் அவர்கள்மூலம் அறிந்து, இந்த விழாவிலே கலந்துகொள்ள வேண்டும் என்று அழைத்த கொட்டகலைச் சமூக பட்டதாரிகள் அமையத்தின் செயலாளர் திரு. இரா. சிவலிங்கம் அவர்களுக்கும் தலைவர் திரு. பி. ராமதாஸ் அவர்களுக்கும் எனது நன்றி அறிதலைச் செலுத்திக் கொள்கிறேன்.

ஆசிரியராக எனது முதல் நியமனத்தை மலைநாடுதான் பெற்றுத் தந்தது. மலைநாட்டின் வடக்குவாசல் என்று சொல்லப்படுகின்ற மாத்தளை நகரத்தில் இருக்கும் புனித தோமையார் கல்லூரியிலே முதல்முதலாக ஆசிரியராகச் சேர்ந்தேன். இன்று இருபத்தொன்பது ஆண்டுகளுக்குப்பின் நான் வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்தபின் முதல் பேசும் வாய்ப்பையும் மலைநாடுதான் தந்திருக்கின்றது என்பதை நினைக்கும் பொழுது மலைநாட்டுக்கும் எனக்குமுள்ள தொடர்பிலே தெய்வீக சக்தி ஒன்று இருப்பதை உணர்கின்றேன்.



முன்வரிசையில் விழாவிற் கலந்துகொண்ட கல்விமான்கள்

மாத்தளையிற் பணியாற்றிய காலத்தில் மலைநாட்டுக் கலை இலக்கிய நண்பர்களுடன் இணைந்து பலவகையான இலக்கியப் பணிகளையும் சமூகப் பணிகளையும் செய்யக் கிடைத்த வாய்ப்புகளை எண்ணிப்பார்க்கின்றேன். மிக நெருங்கிய நண்பர்களான இரா. சிவலிங்கம், திரு. திருச்செந்தூரன் ஆகியோர் மலைநாட்டின் கல்வி வளர்ச்சிக்கும் மக்கள் முன்னேற்றத்துக்கும் செய்த அரும் பணிகளையும் நினைந்து அவர்களுக்கும் எனது அஞ்சலியை இந்த நேரத்திற் செலுத்திக்கொள்கிறேன்.

இன்று பரீட்சைகளிலே சித்திபெற்ற மாணவர்களையும் கல்விச் சேவையில் இருபத்தைந்து ஆண்டுகள் பணிபரிந்த ஆசிரியர்களையும் பாராட்டும்பொருட்டு விழா எடுத்திருக்கும் கொட்டகலைச் சமூக பட்டதாரிகள் அமையத்தை நான் மனதாரப் பாராட்டுகின்றேன். பரிசுகள் மற்றும் விருதுகள் பெற இருப்பவர்களையும் வாழ்த்துகின்றேன்.



சிறப்புச் சொற்பொழிவாற்றும் கவிநாயகர் வி. கந்தவனம்.

கல்வித் திட்டத்திலே பாராட்டுதல் என்பது முக்கியமான ஓர் அத்தியாயம். கனடாவிலே இதனைச் சிறப்பாக் கடைப்பிடிப்பார்கள். மக்கு, மடயன், உனக்குப் படிப்பே வராது, மொக்கு - இப்படியான சொற்களை அங்கு ஆசிரியர்கள் பாவிப்பதில்லை. பிழையாக ஒரு வகுப்பு வேலையைச் செய்திருந்தாலுங்கூட, மொட்டையாகப் பிழை என்று சொல்லமாட்டார்கள். இப்படிச் செய்துபார் என்றோ இன்னும் நன்றாகச் செய்திருக்கலாம் என்றோ மாணவரின் மனங்கள் கோணாதவாறு ஆசிரியர்களின் குறிப்புகள் அமையும். மாணவர்களைத் தட்டிக்கொடுத்து ஊக்குவிப்பதைத் தொடர்ந்து செய்து கொண்டே இருப்பார்கள். ஊக்கவிக்கும் முறைகளில் ஒன்று பாராட்டுதல். இன்றைய பாராட்டுவிழா அதனை வலியுறுத்துவதாக அமைவதைப் பார்க்கிறோம். இது மாணவர்களை இன்னும் உற்சாகப்படுத்தும். பரீட்சைகளிற் சித்தி எய்தத் தவறியவர்களையும் கடுமையாக உழைக்கத் தூண்டும். அதுதான் கொட்டகலைச் சமூக பட்டதாரிகள் அமையத்தின் நோக்கமுமாகும்.

பரீட்சைகளிற் சித்திபெறுதல், சிறந்த பெறுபேறுகளை ஈட்டுதல் என்பது கடுமையான உழைப்புக்குக் கிடைக்கும் பரிசு. ஊக்கமுள்ள பிள்ளைகள் பாடசாலைகளுக்கு ஒழுங்காகச் செல்வார்கள். வகுப்புகளில் ஆசிரியர்கள் சொல்லித் தருவதைக் கவனமாகக் கேட்பார்கள். ஐயங்களை ஆசிரியர்களிடம் கெட்டுத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் உள்ளவர்களாக இருப்பர்.

முன்பெல்லாம் பல மலைநாட்டுப் பாடசாலைகளில் கல்வியை முறையாகக் கற்பிப்பதற்கு வேண்டிய சாதனங்கள் மற்றும் வகுப்பறை வசதிகள் மிகக் குறைவாக இருந்தன. அக்குறைகள் இக்காலத்தில் பெருமளவுக்கு நிவர்த்திசெய்யப்படடிருப்பதை இங்கு எனக்குமுன் பேசிய கல்விமான்களின் உரைகள் தெரிவிக்கின்றன.

இவ்வசதிகளைப் பயன்படுத்திப் பிள்ளைகள் படித்து முன்னேற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கல்வி கற்க வேண்டும் என்னும் ஆர்வம் வசதிகளையும் எதிர்பார்ப்ப தில்லை. அமெரிக்காவின் புகழ்பெற்ற சனாதிபதி ஏபிரகாம் இலிங்கன் வசதிகள் குறைவான குடும்பத்திலே பிறந்தவர். வீட்டில் இரவிற் படிப்பதற்கு விளக்குக்கூட அவருக்கு இருக்கவில்லை. வீதி விளக்கில் படித்து அவர் முன்னேறியதாகச் சொல்லப்படுகின்றது.

மாணவ மாணவிகள் தாங்கள் அழகாக இருக்கவேண்டும், நல்ல ஆடைகள் அணிய வேண்டும் என்று பொதுவாக நினைப்பது இயல்பு. சிலபேர் தங்களை அழகு படுத்துவதில் அதிக நேரம் செலவு செய்வர். சக மாணவர்களுடன் அவர்களது அல்லது பிற மாணவரது ஆடைகளைப்பற்றியும் ஆபரணங்களைப் பற்றியும் பேசிமகிழ்வர். அத்தகையவர்களுக்கு இந்த நேரத்திலே ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன்.

பாடசாலைகளுக்கு அழகாகச் செல்ல வேண்டியதுதான். அது குளித்து, முழுகிச் சுத்தமான ஆடைகளை அணிவதுடன் நிறைவுபெறல் வேண்டும். அதற்கு மேலான அலங்காரங்களிலே படிக்கின்ற பிள்ளைகள் நேரத்தைச் செலவுசெய்தல் நல்லதல்ல. கெட்டிக்கார மாணவர் எவருமே இயல்புக்கு மேலான செயற்கை அழகில் ஈடுபடுவதில்லை. ஈடுபட்ட வரலாறுமில்லை. ஏனென்றால் அவர்களுக்கு நேரம் இருப்பதில்லை. கிடைக்கின்ற நேரத்தைப் படிப்பதற்கே அவர்கள் பயன்படுத்துவர். குறிக்கோள் கல்வி கற்றல். கவனம் முழுவதும் அதிலே குத்திட்டு நிற்பதால் அதனைத் திசைதிருப்ப அவர்கள் விரும்புவதில்லை. அவர்கள் கல்வி அழகுதான் உண்மையான அழகு என்பதனை நன்கு உணர்ந்தவர்கள்.

நான் பெரிய அழகானவன் அல்லன். என் கல்வி அழகுதான் இங்கே என்னை அழைத்திருக்கின்றது. கற்றோர்க்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு. கல்வி அறிவை வளர்க்கும். அறிவு அற்றங் காக்கும் கருவி என்றார் வள்ளுவர் பெருமான். அற்றம் என்றால் அழிவு. ஒருவருக்கு அழிவுவராமற் காக்கவல்லது கல்வி.

ஒருவருக்கு இருக்கக்கூடிய செல்வங்களிலே உயர்ந்த செல்வம் கல்விதான். அது கேடில் விழுச்செல்வம் என்று போற்றப்படுகின்றது. பொருட்செல்வம் கள்வரால் திருடப்படலாம். தீயினால் அல்லது நீரினால் அழிக்கப்படலாம். ஆனால் கல்விச் செல்வத்தை யாராலும் அழிக்க முடியாது. அத்தகைய செல்வத்தைப் பெற்று நீங்கள் வாழ்க்கையிலே சீரோடும் சிறப்போடும் வாழ வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

பரீட்சைகளிலே சித்தி பெற்று இன்று பரிசுகளை பெறும் மாணவரையும் பாராட்டுகின்றேன். உங்கள் திறமை இதற்கு அப்பாலும் விரிவுபடல் வேண்டும், வளர்க்கப்படல் வேண்டும். விளையாட்டுத் துறை, பேச்சுக் கலை, எழுத்துக் கலை என்று பிற துறைகளிலும் நீங்கள் ஆர்வம் காட்டுதல் வேண்டும். இந்தத் துறைகளிலும் பிள்ளைகளை ஊக்குவிக்க வேண்டும் என்று கொட்டகலைச் சமூக பட்டதாரிகள் அமையத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

கொட்டகலைப் பிரதேசத்துப் பிள்ளைகள் மத்தியில் கவிதைப்போட்டி ஒன்றை நடத்தினால் அதற்குரிய பரிசுகளை நான் வழங்கத் தயாராக இருக்கிறேன் என்று கூறி, கொட்டகலைப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டிவரும் பட்டதாரிகள் அமையத்தைப் பாராட்டி அமைகின்றேன். வணக்கம்.



**கவிஞர் வி. கந்தவனம்**

என் மூலம் வீடு வாங்குவது / விற்பதன் மூலம் BMW ஒன்றை வெற்றிகொள்ளலாம்



Interest Rate going up soon
best time to buy Real Estate

3 bedroom Condo.
Markham / Eglinton
Low Maintenance

A few Bungalow houses near Universities London, Waterloo, Hamilton, Peterborough
Good investment for your children

Gas Stations 4 million litres / year in Peterborough, Oshawa, Hamilton with 6/49, good income

Home Based Business for Senior Care
Over 65 years old with Property
100 Acres Farm with Income North of Markham
5 year plan 3.9% interest Power of Sale
Properties with Tenant's Pay the cost What's your Risk?

வீடும் வியாபாரமும் Business Zoning
Future long term Investment

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு
அழையுங்கள் - Sitham (Sam) Shanmugam (Sales Rep)
416.230.7820 / 905.696.7310
HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666

150 - 200 Acres land for sale in Peteboroug. Farm Land value.

# ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்

சீலமாய் வாழ சீர் அருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுதந்திரா போற்றி



வீரியா போற்றி வினைகள் களைவாய்

நவ கோள்களின் தலைவனாக விளங்குபவர் சூரியன். அவர் மும் மூர்த்திகளின் அம்சம் என்பர். அட்டதிக்கு பாலகர்களில் அவரும் ஒருவர். பிரபஞ்சத்தை இயக்குபவர். இவர் நவக்கிரக பீடத்தின் மத்தியில் வட்டவடிவமான பீடத்தில் அமர்ந்திருப்பவர். சுமாரான உயர முடையவர். ஏழு குதிரைகள் பூட்டிய ஒரு சக்கரத் தேரை வாகனமாக உடையவர். ஒரு முகமும் எட்டு கரங்களும் உடையவர். இரு கரங்களில் தாமரை மலரை ஏந்தியுள்ளார். பொன் பட்டாடையில் திகழ்பவர். சூரிய நாரயணா என்பதால் மகாவிஷ்ணுவைப் போல் தோற்றமுடையவர். இரு மனைவி மார்களை இரு பக்கம் உடையவர். தமது தலைக்கு மேலே வட்ட ஒளியை உடையவர். இவர் சிவபெருமானின் முக்கண்களில் வலக்கண்ணாக இருப்பவர். சிவப்பு நிறம் அல்லது அதனைச் சார்ந்த ஆரஞ்சு (Orange) அல்லது காவி நிறம் இவருக்குரியது.

அண்டத்தில் ஒரு பெரிய ஒளிப்பிழம்பாக சூரியன் தோன்றியது. ஆரம்பகாலத்தில் நீண்ட ஒளிப் பிழம்பாக இருந்த சூரியனிலிருந்து பிரிந்து வந்த குழம்புப்பொருட்கள் நாளாவட்டத்தில் குளிர்ந்து உருண்டை வடிவம் பெற்று பல கிரகங்களாக மாறின. அவை தன்னைத் தானே சுற்றிக் கொண்டு சூரியனின் ஈர்ப்பு விசையால் ஈர்க்கப்பட சூரியனையும் சுற்றி வருகின்றன. புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய், வியாழன், சனி, யூரேனஸ், நெப்டியூன், புளூட்டோ என்ற ஒன்பது கிரகங்களும் சூரிய குடும்பம் எனப்படுகின்றது. நாளும் கோளும் நன்மையே செய்யும் என்பது ஞானசம்பந்தர் திருவாக்கு. உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு வலர் புகழ் ஞாயிறு என்பது நக்கீரர் கூற்று.

ஆதியில் தோன்றிய மனிதன் சூரியனின் அபார சக்தியை கண்டு பயந்தான். பின்பு தெளிந்து காலையில் சூரியனைக் கண்டதும் வீழ்ந்து வணங்கினான். நாளாவட்டத்தில் சூரியனின் பிரதிமை செய்து வணங்கினான். இப்படித்தான் சூரிய வணக்கம் உலகில் முதலில் தோன்றியது.

பின்னர் உலகின் பல பாகங்களிலும் சூரிய வழிபாடு ஏற்பட்டது. சீனா, ஜப்பான், எகிப்து, ஆபிரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் சூரிய வணக்கம் இருந்ததற்கு பல ஆதாரங்கள் உள்ளன. இயற்கை வழிபாடே பின்னர் இறை வழிபாடாக மாறியது எனலாம்.

தொன்மையான தமிழ் நூலான தொல்காப்பியத்தில் சூரியன் குறிப்பிடப்பட்டுள்ளான். சிலப்பதிகாரத்தில் சூரியன் கோயில், சூரிய குளம் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. இளங்கோ அடிகள் 'ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்' என்று முதலில் குறிப்பிட்டிருப்பது உலகிற்கு ஆதாரம் சூரியன் என்பதை உணர்த்தும். நக்கீரர் ஒட்டக்கூத்தர் போன்றோர் சூரியனைப் பற்றி தமது பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். மகாபாரதத்தில் குந்தி முன் தோன்றிய சூரிய தேவனின் தோற்றத்தை மிக அழகாக வில்லிபுத்தூரார் வர்ணித்துள்ளார். மணிமேகலையில் புத்தரை சூரிய தேவனாக உருவகித்துக் கூறப்பட்டுள்ளது. சூரியனின் நகர்வைக் கொண்டு அக்கால மக்கள் நேரத்தை அறிந்தனர் என்று வில்லிபாரதம் கூறுகின்றது. பிருகு முனிவர், வால்மீகி முனிவர், அகத்தியர், வசிட்டர் ஆகியோர் சூரிய தேவனின் மக்கள் என்பர். கர்ணன், சுக்கிரீவன் என்பவர்கள் சூரிய தேவனின் அருளில் பிறந்தவர்கள் என்று மகாபாரதமும் இராமயணமும் கூறுகின்றன. சூரியனே வேதத்திற்கு முதல்வன்.

சூரியன் ஒளி முதல். அவனாலேயே உலகும் கோள்களும் ஒளி பெறுகின்றன. சூரியனிலிருந்து ஒளி உலகை அடைய 8 1/2 நிமிடங்கள் செல்கின்றது. பூமியின் எடையைப் போல 330,000 மடங்கு சூரியனின் எடையாகும். அதன் வெப்பநிலை 11,000 முதல் 22,000 வரை டிகிரியாகும். சூரிய ஒளி ஒரு நொடிக்கு 186,000 மைல் வேகத்தில் பூமியை நோக்கி பாய்கின்றது. சூரிய ஒளியில் ஏழு நிறங்கள் உள்ளன. மழை பெய்யும் போது சூரியனுக்கு எதிர்த்திசையில் உண்டாகும் வானவில்லில் ஏழு நிறங்களையும் காணலாம்.

சூரியன் இல்லையேல் உலகில் ஒன்றுமேயில்லை. ஒரே இருட்டாக இருக்கும். மழை பெய்யாது, நீர் இருக்காது, காற்று வீசாது, பயிர் விளையாது. உயிரினங்கள் வாழமுடியாது. எனவே எல்லாவற்றிற்கும் ஆதாரம் சூரியனேயாகும். பூமியில் கடகரேகைக்கும் மகரரேகைக்கும் இடையே சூரியன் வடக்கு நோக்கியும், தெற்கு நோக்கியும் சஞ்சாரம் செய்யும் போது உத்தராயணம் என்றும் தட்சாயணம் என்றும் கூறுவர். சூரியன் வடதிசை நோக்கிச் செல்லும் முதல் நாளில் தை மாதத்தின் முதல் நாளில் சூரியனுக்கு பொங்கலிட்டு கொண்டாடுகின்றோம். இது தை பொங்கல் என்று அழைக்கப்பட்டாலும் சூரியப் பொங்கல் என்பதே மிகப் பொருத்தமானதாகும். இது ஒரு நன்றிப் பொங்கல் எனலாம். பூமி தனது அச்சில் 23 1/2 பாகை சாய்ந்து சூரியனை சுற்றி வருவதால் தான் பூமியில் பருவ காலங்கள் ஏற்படுகின்றன. இப்பருவ காலங்கள் இல்லையேல் பயிர்கள் இல்லை. உணவும் இல்லை. உணவை உற்பத்தி செய்யும் சூரியனுக்கு உணவுப் படையல் செய்வது உன்னதமானது.

பூமியைச் சுற்றி வரும் சந்திரன், சூரியனுக்கும் பூமிக்கும் இடையே வரும்போது இவை மூன்றும் ஒரு நேர் கோட்டில் அமையும் போது சூரியனை சந்திரன் மறைக்கும். இதுவே சூரிய கிரகணம் என்கின்றோம். இவ்வாறு சூரிய கிரகணம் வருடத்தில் இரண்டு முறை நிகழும். மனித வாழ்க்கையில் கிரகணம் நிகழும் போது கஷ்டங்களும் துன்பங்களும் ஏற்படுகின்றன.

சூரியன் சிம்மராசிக்கு அதிபதி. மாதம் ஒரு ராசி வீதம் 12 ராசிகளிலும் 12 மாதங்கள் சஞ்சாரம் செய்கின்றார். ஒவ்வொரு தமிழ் மாத முதல் தேதியும் சூரியன் அடுத்த ராசிக்கு செல்கின்றார். இதுவே சூரியனின் கோட்சாரம் எனப்படும்.

எல்லா சிவன் கோயில்களிலும் நவக்கிரக பீடம் அமைக்கப்பட்டிருக்கின்ற போதிலும் திருநள்ளாற்றில் சனிபகவானுக்கும் திருமங்கலக்குடியில் சூரியனார் கோயிலும் உள்ளன. தேக ஆரோக்கியம், ஐஸ்வரியம், சற்புத்திர பாக்கியம், நீண்ட ஆயுள், புகழ் என்பன சூரிய வழிபாட்டால் ஏற்படும். கிழமை முதல் நாள் ஞாயிறு என்று அழைக்கப்படுவதிலிருந்து ஞாயிற்றின் முதன்மை விளங்கும். கதிரவன் வரவு கண்டு விழிப்புறும்.

ஞாயிறு, வெய்யோன், பரிதி, பாஸ்கரன், பகலவன், பாலதேசிகன் ஆதவன், ஆதித்தன், அருகிகன், பிரபாகரன், கதிரவன், கனலி, தினகரன், மார்த்தாண்டன், செங்கதிர், செஞ்சுடர் என்று பலவாறு அழைக்கப்படும். வீரியம் மிக்க சூரிய பகவானை நமது காரியம் கைகூடுவதற்கு தை முதற் தேதியில் பூரிப்புடன் பூசனை புரிவோம்.



நா. க. சிவராமலிங்கம்


## யோகா பயிற்சி வகுப்புக்கள்



அனுபவமிக்க யோகா சிகிச்சை நிபுணரும் (Yoga Therapy Consultant) யோகா ஆசிரியையினால் (Yoga Teacher) நோய்களுக்கான யோகா சிகிச்சையும் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. அத்துடன் தனிப்பட்ட யோகா வகுப்புக்களும் உண்டு. மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: 647.348.3423

# இரத்த அழுத்தமும் (Blood Pressure) உணவும்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

இது ஒரு நோயல்ல. ஆனால், இது நோயை ஏற்படுத்தும் இயல்புடையதாகும். இதில் இரு வகை உண்டு. உயர் இரத்த அழுத்தத்தை (High Blood pressure) என்றும் குறைந்த இரத்த அழுத்தத்தை (Low Blood Pressure) என்றும் அழைக்கப்படுகின்றது. விஞ்ஞானத்தமிழில் அதிபர இழுவை எனவும் கூறுவர். நமது உடம்பில் இடைவிடாது இரத்தக்குழாய் மூலம் ஓடிக்கொண்டிருக்கும் இரத்தத்தின் வேகம் கூடிக்குறைந்து காணப்படுவதை இரத்த அழுத்தமானி (Blood pressure Appartus) மூலம் அளப்பதினால் இலகுவில் கண்டறிய முடியும். மேலும், கை நாடிப்பரீட்சை மூலமும் கண்டு கொள்ள முடியும். இருதயத்தில் இருந்து வேகமாக வெளியேறும் சுத்த இரத்தத்தின் அழுத்தம் இருதயத்துடிப்புக்கு ஏற்றதாக இருக்கும். இந்நிலையில் இரத்தத்தின் அதிபட்ச அளவை சிஸ்ரோலிக் (Systolic) என்றும் இரத்த அழுத்தத்தின் குறைந்த பட்ச அளவை டயஸ்ரலிக் (Diastolic) என்றும் கூறப்படுகின்றது. அதாவது இருதயம் சுருங்கும்போது ஏற்படும் குருதி அமுக்கம் Systolic. இருதயம் விரியும்போது ஏற்படும் குருதி அமுக்கம் Diastolic. இரத்தம் ஓடிக்கொண்டிருக்கும் குழாய்களின் சுவர்களில் கொழுப்புப்படிந்து குழாயின் சாதாரண அளவு குறைந்து இரத்த அழுத்தம் ஏற்படுகின்றது. இரத்தக்குழாய்களில் படிந்த கொழுப்புச்சத்து குறைவடையும்போது குழாய் விரிவுபட்டு இரத்த அழுத்தம் குறைந்துவிடும்.

கொழுப்பு இரத்தக்குழாய்களில் படிந்து அமுக்கம் ஏற்படுவதைவிட பயம், அதிர்ச்சி, அளவு கடந்த சந்தோசம் போன்ற நிகழ்வுகளில் நமது இருதயம் வேகமாகத் துடிப்பதை நன்கு அறிவோம். இந்நிலையிலும் இரத்த அழுத்தம் அதிக ரிக்க வாய்ப்பு உண்டு என்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள். அத்துடன் நின்று விடவ-ில்லை. மனத்தாக்கம், அதிக பயம், கோபம், உணவு சீரணக்குறைபாடு, அளவுக்கு மிஞ்சிய உடற்பயிற்சி, குஸ்தி, அளவுக்கு மீறிய பாரம் சுமத்தல், ஆழ்ந்த மூச்சுப்பயிற்சி போன்றவற்றாலும் இரத்த அழுத்தம் ஏற்பட வழியுண்டு.

ஒருவரில் 120/80 என்ற அளவை சாதாரணமாக இரத்த அழுத்தமென்றும் கருதினாலும் பால், உடலமைப்பு, வாழும் பிரதேசம், உணவு போன்றவற்றால் இரத்த அழுத்தம் வேறுபடலாம். கடும் வேலை, புகைப்பிடித்தல், அளவு கடந்த மதுவருந்தல் போன்றவற்றால் இரத்த அழுத்தம் ஏற்பட இடமுண்டு. உலக சுகாதார ஸ்தாபனம் 160/95க்கு மேற்பட்டதை உயர் இரத்த அழுத்தமெனக் கூறுகின்றது. எனவே இரத்த அமுக்கம் நேரத்துக்கு நேரம் மாறுபடலாம்.



உணவு வகைகளை எடுத்துக் கொண்டால் இறைச்சி (ஆட்டிறைச்சி), முட்டை மஞ்சள் கரு போன்றவையும் புரோட்டீன் பொருட்கள், மிளகு, கராம்பு, கறுவா போன்ற மாசாலா வர்க்கம், கோப்பி, உப்பு, எண்ணெய்க் கரியல்பொரியல், பலகார வர்க்கம், அளவுக்கு மிஞ்சிய அரிசி உணவு, கருவாடு, ஊறுகாய், ஆடு மாடு பன்றி இறைச்சி, மூளை, ஈரல், சிறுநீரகம் போன்ற மிருகக்கொழுப்பு உணவு தவிர்த்தல் வேண்டும். மேலும், பாவனைக்கு தாவர எண்ணெய் எடுக்கலாம். மரக்கறி வகை, கீரை வகை, பழ வர்க்கம், பாலிலும் பார்க்க சோயாப்பால், முருங்கை இலை, பேரீச்சம்பழம், பப்பாசிப்பழம் சிறந்ததாகும்.

புகைத்தல் அதாவது சிகரட்டில் நிகோடின் என்னும் பொருள் காணப்படுவதினால் கொழுப்பின் அளவை கூட்டுமெனவும் கூறப்படுகின்றது. எனவே, இதைத் தவிர்ப்பது மிக நன்று. மதுபானத்தை தவிர்ப்பது நன்று.

சிறுநீரக நோய், கிரந்தி நோய், நாள்பட்ட வயிற்றுக்கடுப்பு, மலச்சிக்கல், மூளையில் இரத்தக்குறைவு போன்றவற்றாலும் இருதய அமுக்கம் ஏற்பட இடமுண்டு. இந்த இரத்தக்கொதிப்பு தனிப்பட்ட நோய் என்றும் கூற முடியாது. இது ஒரு நோயின் அடிப்படையான ஒரு அறிகுறியாகும். இதையிட்டு அதிர்ச்சியடைவது நன்றன்று. நமது சுவாசமும் சீராக இருக்க வேண்டும். அத்துடன் இருதயமும் அதன் அகத்தே அமைந்துள்ள இரத்தக்குழாய்களும் சீராக இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் நமது இரத்தோட்டம் சீராக அமையும். உடற்பயிற்சி நமது வயதுக்கேற்ப அளவாக (நேரம்) செய்து வருதல் வேண்டும். எதிலும் வயதுக்கேற்ப உடற்பயிற்சி செய்து கொள்வது சிரமமாயின், நடைப்பயிற்சி, துவிச்சக்கர வண்டியோட்டம் செய்து கொள்வது மிக நன்று.

ஓய்வு எடுப்பது எதிலும் முக்கியம். அதாவது உடல் உழைப்பின்போது, உணவு உண்ட பின் ஓய்வு எடுப்பதை கையாள வேண்டும். தினமும் மலம் சலம் உரிய வேளையில் வெளியேற்றப்பட வேண்டும். வேகங்களை எக்காரணம் கொண்டும் அடக்கிப் பழகிக்கொள்ளக்கூடாது. உடம்பில் இருந்து வியர்வை வெளியேறுவது நன்மை பயக்கும். வெளியேறிய வியர்வையை நன்கு துடைத்து தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

உணவு வகைகளில் மேலும் கூறப்போனால், பச்சைக்காய்கறி வகை, பழ வகை தோலுடன் நன்கு சுத்தம் செய்து பாவித்தல், இறைச்சி (ஆட்டிறைச்சி) நீக்கி கடல் மீன் திரளி, விளைமீன், சுறா போன்றவை மிக நன்று. சமைக்கும்போது அவரை, பீன்ஸ், சலாட், கடலை, பயறு வகை, முழுத்தானிய வர்க்கம், முளையுள்ள தானியங்கள், உள்ளி, பொன்னாங்காணி, வல்லாரை, வெந்தயக்கீரை, புதினா, சிறு கீரை போன்றவை தினம் ஏதாவதொன்று எடுப்பது மிக நன்று. உணவு உண்ணும் போது நீர் அருந்துவது நன்றல்ல. உணவு உண்டவுடன் உறங்குதல் தவிக்கப்படல் வேண்டும். எலுமிச்சப்பழச்சாறு (தேசிக்காய்) இடையிடையே பாவிப்பது மிக நன்மை பயக்கும். இரவு உணவு வேளைக்கு எடுப்பது நன்று. இரவில் பழமும் பாவிக்கலாம். வாரம் ஒரு முறை உபவாசம் செய்யலாம். புளிப்புணவுகள், நெய், பால், பாலாப்பழம், கிழங்கு வகைகள் நீங்குவது நன்று. நார்ச்சத்துப் பொருளான கைக்குத்தரிசி, கோதுமை, சோளம் போன்றவையும் பயனளிக்கும். வெந்தயக் கூட்டுக்கறி இடையிடையே பாவிப்பது மிக நன்று.

இயற்கை வைத்தியப்படி அறுகம்புல், துளசி இவற்றின் குடிநீர் அல்லது சாறு எடுத்து ஒரு கிழமையில் இரு முறை பாவித்தல் மிக நன்று. மேலும் அகத்தி, முருங்கை இலை பாகம் செய்து உணவுடன் பாவித்து வரலாம். நெல்லிக்காய் (அருள்), நெல்லிரசம் போன்றவையும் எடுப்பதினால் பயன் உண்டு.

எனவே, இரத்த அழுத்த நிலையை உணவு முறை, வாழ்க்கை முறை என்பவற்றால் கட்டுப்படுத்த முடியும். வேலை செய்யும் இடங்கள், இருக்கும் வீட்டில் அமைதியான நிலை முக்கியமாக கவனிக்கப்படல் வேண்டும். நீண்ட நேரம் தொடர்ந்து வேலைகள் செய்வது தவிர்த்துக் கொள்ள வேண்டும். மனப்பதற்றம் ஏற்படாது பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

நமது எடையை கவனித்து வர வேண்டும். முன் கூறியபடி எண்ணெய்ப் பொருட்கள், இனிப்புப்பொருட்கள், ஐஸ் கிறீம், சொக்லேட், நெய், சீஸ், பட்டர், மாஜரீன் போன்றவற்றை குறைத்துக் கொள்ள வேண்டும்.

இரத்த அழுத்தத்திற்கு மருந்துகள் தங்கள் வைத்தியரிடம் எடுத்துக் கொண்டு வரும்போழுது இரத்த அமுக்க நிலை சாதாரண நிலைக்கு வந்து விட்டதெனக் கருதி நிற்பாட்டி விடுவது நன்றல்ல. விபரம் தங்கள் வைத்தியர் கூறிக் கொள்வார்கள் எனக் கருதுகிறேன். அதி இரத்த அழுத்தத்தை நிற்பாட்டுவது கடினம். தொடர்ந்து மருந்து எடுப்பதுதான் நன்மை பயக்கும். சில வேளைகளில் தாங்கள் எடுக்கும் மருந்தின் அளவை குறைத்து எடுப்பதற்கு தங்கள் வைத்தியர்கள் கூறலாம். உயர் இரத்த அழுத்தத்திற்கு மருந்து எடுப்பவர்களின் இரத்த அமுக்கம் முக்கியமாக விரிவாக்கம் (Diastolic) 80க்குக்கீழ் குறைந்தால் இருதய நோய் ஏற்படும் எனவும் கூறப்படுகின்றது. தலையிடி, தலைச்சுற்று, ஒருவித விழுவது போன்ற உணர்வுகளும் ஏற்படலாம். குறைந்த அழுத்தம் 120க்கு மேல் வந்தால் அவதான-மாக இருக்க வேண்டும்.

கோபம் கூடினாலும் இரத்த அழுத்தம் கூடி மார்படைப்பு ஏற்பட வழியுண்டு. உணர்ச்சி வசப்படும்போது அற்றினாலின் சுரப்பி இயக்கங்களின் (Hormones) இயக்கு நீர் அதிகளவு சுரக்கும். இதனால், உடல் பாகங்கள் பாதிக்கப்படும். இடுப்பு வலி, உடலத்தளர்வு, மன உளைச்சல், சோர்வு, குடல்ப்புண் போன்ற நோய்கள் ஏற்படலாம். எனவே, கோபம் வராது அடக்கமாக மன அமைதியுடன் வாழ்ந்து பழக வேண்டும். இதற்கு மனத்தளர்ச்சிப் பயிற்சி, தியானம், யோகாசனம் போன்றவற்றை உரியவரிடம் சென்று கடைப்பிடிப்பது மிகமிக நன்று. சிறுநீரகக் கோளாறு, நீரழிவு நோய், பக்கவாதம் (பாரிசவாதம்), மாரடைப்பு போன்றவை இரத்த அதிக அழுத்தத்தினால் ஏற்படலாமென்பதை அறிவோம். இந்நோய் இருதயத்தசைகளை தடிக்கச்செய்து நாளடைவில் இருதய வலுவும் குறையும். அத்துடன் கண் பகுதிகளும் தாக்கப்படும்.

அதி இரத்த அழுத்தம் உள்ளோருக்கு உப்புச்சத்து உடலில் இருந்து வெளியேற்றும் திறன் சிறுநீரகங்களுக்கு குறைவாக இருப்பதாக ஆய்வுகள் மூலம் அறியக்கிடக்கின்றது. எனவே, ஆறு மாதத்திற்கொரு முறையாவது தங்கள் இரத்த அமுக்கத்தை தங்கள் வைத்தியர்கள் மூலம் பரீட்சித்து வருதல் வேண்டும். இரத்தத்தில் மொத்தம் கொலஸ்ரோல் 200 மில்லிக்கிராமுக்கு குறைவாக இருத்தல் வேண்டும். Triglyceride (TGL) கொழும்புச்சத்து 150 மி.கிராமுக்கு இருக்க வேண்டுமென அறியக்கிடக்கிறது. மேலும், கொலஸ்ரோலில் உட்பிரிவுகள் உண்டு. உடலுக்கு மிக தீங்கு விளைவிக்கும் குறைந்த அடர்த்தியுள்ள L.D.C (Low Density Lipoprotteen) கொலஸ்ரோலால் 130 மி. கிராமுக்கு குறைவாகவும் நன்மை விளைவிக்கும். அதிக அடர்த்தியான H.D.L (High Density Lipo protteen) கொலஸ்ரோல் 35 மி.கிராமுக்கு அதிகமாக இருப்பது நன்று என அறிய முடிகிறது.

வைத்திய கலாநிதி
கே.ரி. கோபால்
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 416.939.2013



தொடர்ச்சி 16ஆம் பக்கம்


SMILE....
• BUSINESS PLANS
• CORPORATE TAX PREPARATION OF FILING
• PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
• ACCOUNTING, TAXATION
• SYSTEMS - POINT OF SALES
RK CONSULTANTS
PL. CALL: 905.887.7457 / 905.751.7537
24 hrs, 365 days

52 52 52 52 52 அகவை 52 52 52 52 அகவை 52 52 52 52 52 52

# வர்த்தகத்துறையில் 52 வது அகவை

# இதில் கனடாவில் 19 வது அகவை

இதுவரை காலமும் எமக்கு ஆதரவு
நல்கிய வாடிக்கையாளர்கள் அனைவர்க்கும் எமது
இதயம் கனிந்த

## பொங்கல் நல்வாழ்த்துக்கள்

மென்மேலும் எங்கள் ஸ்தாபனம் வளர்ச்சி
அடைவதற்கு உங்களின் பூரண
ஆதரவு கிடைக்குமென்ற நம்பிக்கை எமக்கு உண்டு

**துரித பணமாற்றுச் சேவை**

**பொன்விழா கண்ட ஸ்தாபனம்**

இதில் 19 வருடங்கள் கனடாவில்

**கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா?**

தமிழ் மக்கள் இதயங்களில் பணமாற்றுச் சேவையில் இடம் பிடித்தவர்கள்



## இரு இடங்களில்

## மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

**3228 EGLINTON AVE.EAST, SUITE #3**
SCARBOROUGH, ON. M1J 2H6
தொலைபேசி எண்: **416-267-8221**


**3351 MARKHAM ROAD, SUITE #109**
SCARBOROUGH, ON. M1X 0A6 (Markham & Steeles)
தொலைபேசி எண்: **416-321-8221**

52 52 52 52 52 52 அகவை 52 52 52 52 52 அகவை 52 52 52 52

# முதுகு வலியை முறியடிக்க சித்த யோகா மருத்துவம்

முதுகெலும்புத் தண்டிலுள்ள சில மூட்டுக்கள் சில மிகவும் இறுக்கமாக இருக்கும். ஆனால் வேறு சில மூட்டுக்கள் மிகவும் மென்னையாக இருக்கும். இந்த நிலையில் இறுக்கமாக இருக்கும் மூட்டுக்களுக்கே சிகிச்சையளிக்க வேண்டும்.

## வளைந்த முதுகு




சிலருக்கு முதுகுத்தண்டு கழுத்துப் பகுதி மார்புப்பகுதி, இடுப்புப்பகுதி மேலிருந்து கீழாக வளைந்திருக்கலாம். இதன் காரணம் அப்பகுதிகளிலுள்ள தசை நார்கள் அதிகம் நீண்டும் சில குறைவாக நீண்டும் இருப்பதுதான். முதுகு வலி உள்ளவர்கள் பலருக்கு இரண்டு கால்களில் ஒன்று மற்றையதை விட சற்று நீளமாக இருக்கும். ஒரு முதுகெலும்பு அதற்கு மேல் அல்லது அதற்கு கீழுள்ள முதுகெலும்பை விட்டு சற்று விலகினால் அதில் கோளாறு ஏற்படும் என்று கூறுவது மிகவும் தவறு.

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

### காரணம் இல்லாத முதுகு வலி

படுத்திருக்கும் போது அசையாதிருக்கும் போது வலி இருக்காது. ஆனால் உடல் சற்று நகர்ந்தாலும் வலி பயங்கரமாக வரும். இந்த வலி முதுகெழுலும்புத் தண்டில் ஒரு இடத்தில் உண்டாகிப் பின் எல்லா பாகங்களுக்கும் பரவும் பின் பக்க விலா எலும்புகளுக்கும் பரவி பின்பு தோறப்பட்டையையும் தாக்கும். இந்த நேரத்தில் இருமினாலோ, தும்மினாலோ வலி அதிகமாகும். இந்த வலி மூன்று அல்லது நான்கு நாட்களின் பின் சிறிது சிறிதாகக் குறைந்து விடும். இந்த வலி இடையிடையே இவ்வாறு வந்து மறையும்.

வேறு விதமாக வரும். வலி முதுகுத் தண்டில் ஏற்பட்டு புஜங்கள், மார்பு, அடிவயிறு, தொடைகள் ஆகிய பகுதிகளுக்குப் பரவும் பின் முதுகுத் தண்டில் வலி வரும். ஆனால் பிற பகுதிகளில் பல நாட்களுக்குப் வலி இருக்கும்.

### இடம் பெயர்ந்த சதை வட்டுக்கள் (Displaced Dies)

முதுகு வலிக்கு முக்கிய காரணம் சதை வட்டுக்கள் (Dice) இடம் பெயர்வதேயாகும். உண்மையில் அவை இடம் பெயர்வதில்லை. ஆனால் வீங்குகின்றன. இதனால் அதிக அழுத்தம் அதிகரிக்கின்றது. அதைச் சுற்றி உள்ள தசை நார்கள் இந்த அழுத்தத்தைத் தாங்க முடியாமல் கிழிந்து அதிலிருந்து இரத்தம் வரும். இதனால் பாதிக்கப்பட் திசுக்களிலிருந்து இரசாயனப்பொருட்கள் வெளிவந்து அப்பகுதியில் வீக்கம் அதிகரிக்கின்றது. இதனால் தசைகள் இறுகிப் போய் இயக்கமற்று வலி கூடுகின்றது.

இவை தவிர முதுகு வலிக்கு பிற காரணங்களும் உண்டு. தோல் தசை நார்கள், எலும்பு, நரம்பு போன்றவற்றில் காயம் ஏற்பட்டால் அதிக வலி ஏற்படும். இந்த வலியை எளிதில் குணப்படுத்தலாம். அத்துடன் கழுத்துப் பகுதியை அளவுக்கதிகமாக திருப்புவதாலும் வலி ஏற்படும்.

### முதுகு கழுத்து வலிக்கு யோகா மருத்துவம்

வலி கண்ட இடத்தில் காலை மாலை ஐஸ் கட்டியை 5 நிமிட நேரம் வைப்பதால் உடனடி நிவாரணம் கிடைக்கும்.

### பவனமுத்தாசனம்


முழங்காலில் இருந்தபடி உள்ளங் கைகளை முன் புறமாக தரையில் பதித்தபடி (தவழும் நிலை) தலையை கீழ்நோக்கி குனியும்போது முதுகு மேலே முந்தும். பின் தலையை மேலே தூக்கியபடி முகத்தை மேல்நோக்கி திரும்பும் போது முதுகு கீழ் நோக்கிச் செல்லும். இதனை ஒரே நேரத்தில் 10 முறை செய்யவும். இவ்வாறு மூன்று நாட்கள் காலை மாலை செய்து வர வலிக்கு நிவாரணம் கிடைக்கும்.

### சித்த மருத்துவத்தில்

தொப்புள் முதல் பாதம் வரை வாதம் உண்டென்று சித்த மருத்துவம் கூறுகின்றது. இப்பகுதியில் ஏற்படும் நோய்களெல்லாம் வாத நோய்களாகும். முதுகு வலியும் இவற்றுள் ஒன்று.

இனிப்பு, புளிப்பு, கசப்பு, கார்ப்பு, உப்பு, துவர்ப்பு போன்ற அறுசுவை உணவுகள் நாம் சரி விகிதமாக உணவுகளில் சேர்ப்பதில்லை. எந்தெந்த சுவை உணர்வுகளை அதிகம் உண்ணுகின்றோமோ அதற்கேற்ப நோய்கள் ஏற்படும். இந்த வகையில் பெரும்பாலோருக்கு வரும் நோய்களின் ஆரம்பமே மலச்சிக்கல், செரியாமை என்பனவேயாகும். மலம், சலம் போன்றவற்றை கீழே தரும் அபாண வாயு பாதிக்கப்பட்டால் மேல் குறிப்பிட்ட நோய்கள் உருவாகி தொப்புள் முதல் பாதம் வரையான பகுதிகளில் நோய்கள் பல உருவாகும்.

இவ்வாறான நோய்கள் எவை. அவை எவ்வாறு ஆண்களையும், பெண்களையும், குழந்தைகளையும்



பாதிக்கும். அதலிருந்து மீள்வதற்கு என்ன என்பதை பற்றி அடுத்த இதழில் பார்ப்போம்.





ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm

YOGA - MEDITATION CLASSLESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.



நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு
தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்

தொடர்புகளுக்கு: ***Scarborough - Markham*** - செல்வ சோதி - ***416.289.2033***

# மாற்றம் - ஒரு...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

என்பது உறுதியாகிவிட்ட நிலையில் அந்த மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்கு புரிந்துணர்வு அவசியமாகின்றது. அதாவது ஒரு பிரச்சினை உருவாகியதற்கு நாம் என்ன காரணிகளை உள்ளீடாகக் கொடுத்தோமோ, அப்போது நாம் இருந்த மனநிலையில் மனோபாவத்தில் இருந்து மாற்றம் பெற்று புதிய நிலையில் புதிய சிந்தனைகளில், புதிய மனோபாவமாற்றங்களில் எமது தேடுதலை ஆரம்பிக்க வேண்டும். அதாவது நமது, ஒவ்வொருபிரச்சினையும் நமது உள்ளீடுகளின் வெளிப்பாடாக அமைந்தத னால் அந்த உள்ளீடுகள் பற்றிய மாறுபட்ட அணுகுமுறை மட்டுமே அதற்கான தீர்வுக்கு வழிவகுக்க முடியும். இந்த மாறுபட்ட அணுகுமுறை என்பது தெளிவான புரிந்துணர் வால் முன்வைக்கப்படுவதும் அவசியமாகும்.

### ஆம் வாசகர்களே!

நமது ஒவ்வொரு பிரச்சினைக்கும் நாம் தான் காரணம். அதற்கான தீர்வுக்கும் நாம்தான் ஒரேவழி. ஒவ்வொரு பிரச்சினையும் அதற்கான தீர்வை வேண்டி நிற்பதை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ளல் வேண்டும். ஏனெனில் அந்தத் தீர்வை நாம் ஏற்படுத்தும்வரை அது பிரச்சினையைத் தந்து கொண்டேயிருக்கும். எனவே ஒரு பிரச்சினைக்குத் தீர்வு எவ்வளவு வேகமாகக் காணமுடியுமோ அவ்வளவு வேகமாக காணப்படல் வேண்டும். அதற்கு அடிப்படையில் தேவைப்படுவது ஏற்றல், புரிதல், உணர்தல் என்பவையே. ஒரு பிரச்சினைக்கு நாம் முற்றுமுழுதான பொறுப்பை ஏற்கும்போதுதான் அதற்கான தீர்வுக்கும் வழி பிறக்கின்றது. எனவே நமக்குத் தேவைப்படுவது ஒரு மாற்றம் மட்டுமே. நமது சிந்தனை, சொல் செயல் என்பவற்றில் நேர்த்தியான தாக்கத்தைத் தரக்கூடிய மாற்றம் மட்டுமே நமது தேவையாக இருக்கின்றது. தேவை மட்டுமல்ல வாசகர்களே! அதுவே சிறந்த வாழ்வியல் நகர்வுக்கான அடிப்படையுமாகின்றது.

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# மாற்றம் - ஒரு அடிப்படைத்தேவை

## ஓடும் நீர் உறைவதில்லை 94




வருடம் இரண்டாயிரத்துப் பத்தும் ஆரம்பித்து விட்டது. சராசரியாக ஒரு தலைமுறை எண்பது வருடங்கள் வாழ்ந்திருக்குமாயின் ஏறத்தாழ இருபத்தைந்து தலைமுறைகள் இந்த இரண்டாயிரம் வருடங்களுக்கு அளப்பரிய பங்களிப்பைச் செய்துள்ளன. இந்தப் பங்களிப்புகள் எத்தனை மாற்றங்களை நமக்குக் கொடுத்திருக்கின்றன என நாம் சிறிது ஆழமாகச் சிந்திப்போமாயின் மிகவும் வியக்கத்தக்க விடயங்கள் நமக்குப் புலப்படும். இந்த வியக்கத்தக்க விடயங்களை வரிசைப்படுத்துவது என்பது இலகுவானதல்ல. ஏனெனில் அவை ஒரு மனிதனது எண்ணிக்கையில் மட்டுப்படுத்தப்பட்டவையல்ல. அதனால் இவைதான் அந்த மாற்றங்கள் என்பதை விட இவையும் சிலமாற்றங்கள் என்பது பொருத்தமாகி விடுகின்றது.

நாம் இன்று அறிந்துள்ள மாற்றங்கள் என்பவை எவ்வாறு இடம்பெற்றன என்பது மிகவும் வியப்புக்குரியது. இந்த மாற்றங்களுக்குப் பங்களிப்புச் செய்தவர்கள் யார் என்பதை நாம் ஆய்வு செய்வோமாயின் அது மிகவும் வியப்பைத் தருகின்றது. பிரபுத்துவம், காலனித்துவம், ஏகாதிபத்தியம், மன்னராட்சி, மக்களாட்சி, செங்கோல், கொடுங்கோல், மக்கள் அதிகாரம், சர்வாதிகாரம் என்பவையெல்லாம் இந்த மாற்றங்களுக்கு அளப்பரிய பங்களிப்பைச் செய்கின்றன. இன்னொருவகையில் கூறுவதாயின் தனிமனிதன் மீதான அழுத்தங்களாக இவை அமையப் பெற்றதன் வெளிப்பாடாக இந்தமாற்றங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால் இந்த மாற்றங்கள் சம்பந்தமான மிகப் பெரும் உண்மை ஒன்று உண்டு. ஆனால் துரதிஷ்டவசமாக அது மூடி மறைக்கப்பட்டு அல்லது மழுங்கடிக்கப்பட்டு அல்லது வேண்டுமென்றே மட்டுப்படுத்தப் பட்டுக் காணப்படுகின்றது. ஆனால் உண்மை என்பதனால் அது எப்போதாவது வெளிப்பட்டு உலகுக்கு நிரூபிக்கப்படும் என்பதும் உண்மையே.

ஒரு தனிமனிதனது வாழ்வியல் மாற்றங்கள் அவன் வாழும் சூழலால் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. ஒருவர் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கின்ற சூழலின் தாக்கத்தின் வெளிப்பாடாகவே நமது வாழ்வியல் மாற்றங்கள் இடம்பெறுகின்றன. நாம் வாழும் சூழல் மாறும்போது அந்த புதிய சூழலானது அதற்கான மாற்றங்களை எம்மிடம் இருந்து எதிர்பார்க்கின்றது. இந்த எதிர்பார்ப்புக்கான நமது பங்களிப்பின் தன்மையைப் பொறுத்து சில இலகுவானதாயும் சில அதிக வலி நிறைந்ததாயும் அமைகின்றன. எனவே மாற்றங்கள் வேண்டி நிற்கும் தேவைப்பாடுகளைப் புரிந்து கொள்வதன் மூலம் அதற்கேற்ற மாற்றங்களுக்கான நடைமுறைகளை நாம் மேற்கொள்ள முடியும். இந்த நடைமுறையானது நேர்த்தியான பெறுபேறுகளுக்கு அடிப்படைகளாகவும் அமைகின்றன.

> அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
>
> *நன்றியுடன் KG Master*

நாம் ஒவ்வொருவரும் இரண்டுவகையான வாழ்க்கை முறையைக் கொண்டிருக்கின்றோம். முதலாவது நமக்காக வாழ்வது, மற்றையது சூழலுக்காக வாழ்வது. இங்கே நமக்காக வாழ்வது என்பது ஒட்டுமொத்தமாக ஒவ்வொருதனிமனிதனும் தனக்காக வாழ்வது மட்டுமே உள்ளடக்கப்படும். சூழலுக்காக வாழ்வது என்பது ஒவ்வொருமனிதனும் தனது வாழ்கையின் பெரும்பகுதியை தன்னைச் சார்ந்தவர்களுக்காகப் பயன்படுத்துவது. அதாவது குடும்பம், சமுதாயம், நாடு, உலகம் என்ற படிமுறையில் தனது செயற்பாடுகளை விரிவுபடுத்துவது. இப்போது நாம் அறிந்து கொள்ள வேண்டிய மிக முக்கியமான விடயம் என்னவெனில் மனிதப்பிறவியால் மட்டுமே இந்த அளவுக்குத் தன்னை விரிவுபடுத்தமுடியும் என்பது தான்.

**KG Master-*kgmaster@rogers.com***

நமது செயற்பாடுகளின் விரிவாக்கம் என்பது நம் ஒவ்வொருவரதும் வாழ்வியல் நோக்கை அடிப்படையாகக் கொண்டது. அப்படியாயின் நாம் ஒவ்வொருவரும் தெளிவான வாழ்வியல் நோக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பது கவனத்திற் கொள்ளபட வேண்டியதாகின்றது. அடிப்படையில் நாம் ஒவ்வொருவரும் நோக்கத்தை மையமாக வைத்தே வாழ்க்கையை நகர்த்துகின்றோம். நோக்கம் இல்லாமல் வாழ்க்கை நகர்த்தப்பட முடியாதது. அப்படியாயின் ஏற்றத்தாழ்வான வாழ்வியல் அமைப்பு முறைக்கு காரணம் என்ன என்பது ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டியதே. நமது நாளாந்த வாழ்வியல் நகர்வு என்பது ஒவ்வொரு மனிதனதும் பொறுப்புணர்வின் அளவைப் பொறுத்து இடம் பெறுகின்றது. நாம் ஒவ்வொருவரும் ஏதோ ஒருவகையான மகிழ்ச்சி அல்லது திருப்தியின் எதிர்பார்ப்புடன் தான் நகர்வுகளை மேற்கொள்ளுகின்றோம். நமது நடவடிக்கைகளின் பெறுபேறுகள் நாம் எதிர்பார்க்கும் பெறுபேறுகளைத்தர வேண்டும் என்பதற்காக அயராது உழைக்கின்றோம். இந்த எதிர்பார்ப்பும் நோக்கத்தை மையமாக கொண்ட நகர்வுதான். இவ்வாறு ஒவ்வொருவரும் நமது எதிர்பார்ப்புக்களை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் இந்த நகர்வின் வேகமும் விளைவுகளும் ஆளுக்கு ஆள் வேறுபடுவதை நாம் அவதானிக்க கூடியதாக இருப்பினும் அதற்கான காரணங்களை அறிவதில், ஆய்வதில், மாற்றீடுகளைக் கண்டு கொள்வதில் பின்தங்கியவர்களாக இருக்கின்றோம்.

நம்மில் பெரும்பாலானவர்களின் பின்னடைவுக்கு அல்லது முன்னேற்றம் இன்மைக்கான காரணம் வாழ்வியல் சம்பவங்கள் நமக்குச் சாதமாக இல்லாதபோது நாம் வெளிப்படுத்தும் அல்லது கற்றுக்கொள்ளும் விடயங்களின் தன்மையே. துன்பம், சோதனை, வேதனை, விரக்தி, வெறுப்பு, மனஅழுத்தம் என்பனவெல்லாம் பிறரால் அல்லது பிற விடயங்களால் இடம்பெறுவதாக நாம் கருதும்வரை துன்பத்தில் இருந்தோ தோல்வியில் இருந்தோ தப்பித்துக் கொள்ளமுடியாது. காலப்போக்கில் காலம் கற்பிக்கும் பாடத்தில் அடித்தாங்க முடியாமல் அல்லற்பட நேரிடும். மனிதனது மிகப் பலவீனமான விடயம் என்னவெனில் தனது செயற்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்தாமல் வித்தியாசமான பெறுபேறுகளை எதிர்பார்த்து ஏமாற்றம் அடைவதும் மீண்டும் ஏமாற்றப்பட்டாலும் அதைப்புரிந்து கொள்ளாமல் தன்மீது நம்பிக்கையை இழந்து பிறர்மீது பழிசுமத்துவதும் ஒரு சர்வசாதாரணமான விடயமாக்கப்பட்டுவிடுகிறது. இந்த நிலையில் இருந்து மீள்வதற்கு அடிப்படைத்தேவையாக அமைவது முக்கியமான ஒரு மாற்றம். ஆமாம் ஒரேயொரு மாற்றம் மட்டுமே.

அப்படி என்ன மாற்றம் தேவைப்படுகிறது என்பதை அறிய நீங்கள் ஆவலுடன் வாசிப்பதாக தெரிகின்றது. நல்வரவாகட்டும். உங்கள் முயற்சிக்கு நன்றி. நாம் தற்போது எதிர்நோக்கியிருக்கும் எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் அதற்கான தீர்வு நம்மிடம் மட்டும் தான் இருக்கின்றது. இன்னொருவகையில் கூறுவதாயின் நமது தற்போதைய நிலைக்கு நாம் மட்டுமே காரணியாக இருக்கின்றோம் என்ற யதார்த்தத்தை நாம் ஒளிவு மறைவின்றி ஏற்றுக்கொள்ள வேண்டும். பிரச்சினைக்கு நாமே காரணமாக இருப்பதனால் அதன் தீர்வுக்கும் நாம் தான் விடைகாணமுடியும் என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். தீர்வுகாண்பதற்கு நாம் பிரச்சினையை உருவாக்கிய போது இருந்த மனோபாவத்தை மாற்றியமைக்க வேண்டும் என்பது தவிர்க்க முடியாதது என்பதும் உணரப்படவேண்டும்.

இப்போது இந்த மூன்று படிமுறைகளையும் சிறிது விளக்கமாகப் பார்ப்போம்.

### படிமுறை - ஒன்று - ஏற்றல்

நாம் தற்போது எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் பிரச்சினைக்கு நாமே காரணமாக இருந்தோம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியது மட்டுமே. அதாவது நமது பிரச்சினைகளுக்கு நம்மைத்தவிர வேறு யாருமோ அல்லது வேறு எதுவுமோ இல்லை என்பதை ஏகமனதாக ஐயப்பாடு எதுவும் இன்றி ஏற்றுக்கொள்ளல் வேண்டும். இவ்வாறு நான் வலியுறுத்திக் கூறுவதற்கான காரணம் என்னவெனில் நாம் எல்லோரும் அறுவைச்சிகிச்சை வைத்தியராக இருப்பது தான். அதாவது அறுவைச்சிகிச்சையில் வெற்றியடைந்தால் அது வைத்தியரின் திறமை, தோல்வி கண்டால் நோயாளியின் துரதிஷ்டம். இந்த மனோபாவம் மாறவேண்டும். நமது பிரச்சினைகள் எவையும் எமது உள்ளீடுகள் இன்றி உருவாக்கப்பட்டவையல்ல. சிறிது நேரம் இதைச் சிந்தித்தால் உண்மை வெளிப்படும். நமது ஒவ்வொரு பிரச்சினைக்கும் அடித்தளமாக இருந்தவை நமது சிந்தனை, சொல், செயல் என்பவையே. நமது பிரச்சினைகள், பொருளாதாரம் சார்ந்ததாக இருந்தாலும் சரி, கணவன் - மனைவி - குழந்தைகள் சார்ந்ததாக இருந்தாலும் சரி அதற்கான காரணகர்த்தா நாம் மட்டுமே.

### படிமுறை - இரண்டு - புரிதல்.

சிறந்த ஒரு சுய அலசல் அல்லது ஆய்வு மூலம் முதலாவது படிமுறையை மேற்கொண்டால் நமக்குத் தெளிவாகத் தெரிவது நமது பிரச்சினைகளுக்கு நாம் தான் காரணம் என்பது. இந்த ஆய்வில் நீங்கள் வெற்றி கண்டுள்ளீர்களா என்பதைத் தீர்மானிப்பது. உண்மையை அறிந்த பின்னர் நாமாகவே வெட்கித்தலை குனிவது தான். அதாவது நமக்குள் நாமே வெட்கப்பட்டுத் தலைகுனிவது. அடுத்தபடி நமது தலையில் நாமே குட்டிக் கொள்வது. இந்த நிலைக்கு நாம் வந்தால்தான் இரண்டாவது படிமுறையை நாம் உணரமுடியும். இந்த இரண்டாவது படிமுறை பிரச்சினைக்கான காரணிகளைத் தெளிவுபடுத்தும். ஒரு பிரச்சினையின் காரணிகள் தெளிவுபடுத்தப்படும்போது அந்தக் காரணிகள் எவ்வாறு கையாளப்பட்டன என்பதையும் அது தெளிவுபடுத்தும். இப்போது அக்காரணிகள் கையாளப்பட்டமுறை மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதையும் நமக்கு உணர்த்தும். (இந்த நிலைக்கு இன்னும் வரமுடியவில்லை என்றால் படிமுறை ஒன்றைச் சரியான முறையில் கையாளவில்லை என்பது பொருள்)

### படிமுறை - மூன்று - உணர்தல்

இப்போது படிமுறை இரண்டில் தேவைப்படும் மாற்றம் பற்றிய தெளிவு கிடைத்து விட்டது

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

**1-877-707-3221 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**

மஹாராஜியின் உரைகள்



**On DVD**

இலவச DVDக்கு அழையுங்கள்

(416) 431-5000

1 877 707 3221

**On TV**

Saturdays at 11:00 am

Rogers Cable Channel - 20

Bell Express vu Channel - 219

# சொந்த குடியிருப்பு வீடுகளின் முக்கிய திருத்த வேலைகளுக்கு அரச கூட்டுத்தாபனம் ஒன்று வழங்கும் பண உதவி

## கனடிய தகவல் தொடர் 117

***''Home Owners Residential Rehabilitation Assistance Program - PRAP" Provided by "CANADA MORTGAGE HOUSING CORPORATION."***

கனடாவில் தமது சொந்த வீடு ஒன்றில் குடியிருக்கும் ஒருவர் தமது வருமானம் குறைந்த நிலையில் வாழ்ந்து வரும் கட்டத்தில் தமது வீட்டில் உள்ள சில குறிப்பிடப்பட்ட முக்கியமான திருத்த செலவுகளுக்கு அதாவது கட்டாயம் செய்தேயாக வேண்டும் என்ற வேலைகளுக்குரிய செலவுகளுக்கு மட்டும் திருப்பி செலுத்ததேவையே இல்லாத பண உதவிகளை செய்து வருகின்றது என்பதனை அறிந்து கொண்டீர்களா? அந்த நிறுவனமே



**"கனடா அடமான வீடுகளின் கூட்டுத்தாபனம்"** (Canada Mortgage and Housing Corporation) **ஆகும்.** கனடா - மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் இத்தேசிய கூட்டுத்தாபனம் கனடாவில் வீடு தொடர்பான நிர்மாணங்கள், வீடுகளை அடமானம் வைத்து வழங்கும் கடன்கள் தொடர்பான சட்டங்களை நடைமுறைபடுத்துவதுடன் இவ்விரு விடயங்களிலும் (வீடுகள் + வீட்டு அடமானக் கடன்கள்) பல்வேறு வகையான செயல்பாடுகளை நாட்டு மக்களுக்கு வழங்குகின்றது.

ரொன்ரோவில் இக் கூட்டுத்தாபனத்துடன் தொடர்பு கொள்ள வேண்டுமாயின் பின்வரும் முகவரியில் இயங்கும் இக்கிளை நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

***CANADA MORTGAGE & HOUSING CORPORATION***
***CMHC ONTARIO BUSINESS CENTRE***
***100, SHEPPARD AVE. EAST SUITI # 300***
***TORONTO***
***ONTARIO M2N 6Z1***
தொலை பேசி (416) 221.2642
அல்லது 1.800.668.2642
இணையத்தளம் - www.cmhc.ca

ஆனால் வீடுகளின் திருத்தச் செலவுகளுக்கு இக்கூட்டுத்தாபனம் மட்டுமல்ல இதனுடன் சேர்ந்து மாகாண அரசு மற்றும் நகரசபை அரசுகளின் நிறுவனங்களும் சேர்ந்து பின்வரும் விடயங்களை கருத்தில் கொள்ளும். அவையாவன பின்வருமாறு.

1. கூட்டுத்தாபனம் எதிர்பார்க்கும் விலையினை விட குறைந்த விலையில் இவ்வீட்டின் பெறுமதி இருத்தல் வேண்டும்.

2. இவ்வீடு ஐந்து வருடத்திற்கு குறையாத காலத்து வீடாக இருத்தல் வேண்டும்.

3. வீட்டு உரிமையாளரின் வருமானம் குறைந்ததாக இருக்க வேண்டும்.

4. ஒரு பதினைந்து வருடத்திற்கு நின்று பிடிக்கும் அளவுக்கு பின்வரும் முக்கியமான விடயங்களில் மட்டும் இதன் திருத்த வேலைகள் இருத்தல் வேண்டும் அவையாவன

a. Heating (குளிர் காலத்திற்கு தேவையான மிக முக்கியமாக செய்ய வேண்டிய திருத்த வேலை)
b. Structural (ஆபத்திலிருந்து மீள வேண்டிய நிலையில் உள்ள உள்ளக அமைப்பு)
c. Electrical (மின்சார திருத்த வேலை)
d. Plumping (நீர்க் குழாய் திருத்த வேலை)
e. Fire Safety (தீயினால் ஏற்படும் பாதிப்பு)

அதாவது திருத்த வேலை என்பது வீட்டினுள் இருப்பவர்களுக்கு உடல் ஆரோக்கியத்திற்கும், பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் வழங்கும் நிலையில் அதில் இருந்து மீளும் நிலைமையினை திருத்த வேலைகளினால் உருவாக்கி கொடுக்கலாம் என்ற நிலையில் இருந்தால் மட்டுமே இத்திட்டத்தில் இருந்து பண உதவி கிடைக்கும்.

இக்கூட்டுத்தாபனம் வழங்கும் பண உதவிக்கு மேலால் செலவு இருக்குமாயின் மிகுதி தொகையினை வீட்டு உரிமையாளர் தமது சொந்த பணத்தில் இருந்தே கொடுக்க வேண்டும்.

**இங்கு பண உதவியினை எப்படி பெறுவது?**

எழுத்து மூலம் இந்நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு முதல் அங்கீகாரம் பெறுதல் வேண்டும். ஆனால் ஒன்று! நாம் குடியிருக்கும் சகல பகுதிகளுக்கும் இப்பண உதவி கிடைக்கப்போவதில்லை.

இணையத்தளத்தினூடகவே தங்களின் வீடு உள்ள தபால் குறியீடுகளை குறிப்பிட்டு இப்பகுதிக்கு பண உதவி கிடைக்குமா? என்பதனை பரிசீலனை செய்து பார்க்கலாம். இல்லையேல் இந்த நிறுவனத்துடன் நேரடியாக தொடர்பு கொண்டும் பரிசீலனை செய்து பார்க்கலாம்.

செய்ய வேண்டிய முக்கியமான திருத்த வேலைக்கு பண உதவி வழங்க தாங்களும் தங்கள் குடியிருப்பு மனையும் தகுதியான நிலைக்குள் உள்ளதா? என்ற அங்கீகாரம் கிடைத்த பின்பு இக்கூட்டுத்தாபனம் எதிர்பார்க்கும் தகைமைக்குள் இருந்தால் பண உதவி கிடைக்கும்.

பண உதவியின் ஆக கூடுதலான தொகையினை பின்வரும் மூன்று வலயங்களாக பிரித்து தீர்மானிக்கப்படுகின்றது அவையாவன.

Zone (1)
Southern areas of canada (கனடாவின் தென்பகுதி) - $16,000

Zone (2)
Northern areas of canada (கனடாவின் வட பகுதி) - $19,000

Zone (3)
Far Northern areas of canada (வட பகுதிக்கும் அப்பால்) - $24,000

இவை தவிர மேலும் சில நிலைகளில் உள்ளவர்களுக்கும் பண உதவிகள் வழங்கும் திட்டங்கள் இக கூட்டுத்தாபனத்தில் உள்ளது. அவையாவன.

**உடல் இயங்க முடியாதவர்கள் குடியிருக்கும் வீடுகளில் தேவை யான திருத்த வேலைகளுக்கு வழங்கும் பண உதவிகள்**
(Residential Rehabilitation Assistance Program For Person With Disabilities - RRAP )

இது இன்னொரு நிலையில் உள்ளவர்களுக்கு என இக்கூட்டுத்தாபனம் வழங்கும் பண உதவிகள் ஆகும். அதாவது உடல் இயங்க முடியாத நிலையில் சக்கர நாற்காலியில் அல்லது ஊன்று கோல் உதவிகளுடன் இயங்குபவர்களுக்கு அவர்கள் குடியிருக்கும் வீடுகளில் மேற்கொள்ள வேண்டிய முக்கியமான திருத்த வேலைகளுக்கு அவர்களின் வருமானம் போதாது என்ற ஒரு நிலைமை இருக்குமானால் அந்த நிலைமையில் உள்ளவர்களுக்கு மட்டும் இந்நிறுவனம் திருப்பிச் செலுத்தவே தேவையில்லாத இப்பண உதவிகளை செய்கின்றது.

அதாவது உடல் இயங்க முடியாத நிலையில் உள்ளவரின் (Disabled person) சௌகரியங்களுக்கு ஏற்ற மாதிரி உள் நிர்மாண வேலைகளில் மாற்றங்கள் செய்வதற்கு பண உதவிகளை செய்கின்றது.

**முதியவர்களின் குடியிருப்புக்களில் அவர்களின் சுதந்திரமான வசதிக்கு ஏற்றவாறு மாற்றியமைப்பதற்கு வழங்கும் பண உதவிகள்.**
(Home Adaptations For Seniors Independence - HASI)

வருமானம் குறைந்த முதியவர்கள் குடியிருக்கும் வீடுகளில் அவர்களின் வசதிகள் சௌகரியங்களுக்கு ஏற்ற மாதிரி மாற்றியமைப்பதற்கு வழங்கும் பணி உதவிகள் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன.

ஆனால் இத்திட்டத்தில் முதியவர் ஒருவர் பண உதவி பெற வேண்டுமாயின் பின்வரும் தகைமைக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.



1. 65 வயதுக்கு மேற்பட்டவராக அன்றாட வாழ்வில் இயங்குவதற்கு சிரமமானவராக இருத்தல் வேண்டும்.
2. இம்முதியவர் குறிப்பிட்ட வீட்டில் நிரந்தரமாக வசிப்பவராகவும் இவரது வருமானம் என்பது ஒரு வரையறைக்குள்ளும் இருத்தல் வேண்டும்.
3. செய்யப்படும் திருத்த வேலை என்பது முதியவருக்கு வாழ்வில் ஒரு சௌகரியத்தினை வழங்குவதற்காக இருத்தல் வேண்டும்.

**அவசர திருத்த வேலைகளுக்கு பண உதவி** (Emergency Repair Program - ERP)

இத்திட்டத்திலிருந்து பண உதவி என்பது கனடாவின் சிறு நகரங்களில் இருக்கும் வருமானம் குறைந்தவர்களுக்கு மட்டுமே (Low Income Households in Rural Areas) வழங்கப்படுகின்றது.

பண உதவி வழங்கும் திருத்த வேலைகளை பின்வரும் வகையாக குறிப்பிடலாம்.

1. Heating Systems 2. Chimneys
3. Foundations 4. Plumping
5. Vents, Louvers
6. Roofs, walls, floors, and ceiling
7. Electrical systems

ஒரு $6000 - $11,000 வரை பிராந்தியங்களுக்கு ஏற்றமாதிரி பண உதவி கிடைக்கும்




சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

# கனடா தமிழ் இலக்கியத்தோட்டம் இயல் விருது - 2009

2009ம் ஆண்டுக்கான இயல் விருது தமிழ் ஆய்வுகளில் நீண்ட காலமாக ஈடுபட்டுவரும் இருவருக்கு வழங்கப்படுகிறது.

கனடாவில் இயங்கும் தமிழ் இலக்கியத் தோட்டம் அளிக்கும் இந்த வாழ்நாள் தமிழ் இலக்கிய சாதனை விருது, கேடயமும் 1500 டொலர் மதிப்பும் கொண்டது. இம்முறை இந்த விருதை கோவை ஞானி என்று அழைக்கப்படும் கி.பழனிச்சாமியும், ஐராவதம் மகாதேவனும் பெறுகிறார்கள். பரிசுப் பணம் பிரித்து கொடுக்கப்படாமல் இருவருக்குமே ஆளுக்கு 1500 டொலர் வழங்கப்படுகிறது.

## கோவை ஞானி.




கோவை ஞானி என்று அழைக்கப்படும் கி.பழனிச்சாமி ஒரு தமிழாசிரியர். கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழிலக்கியத்தில் தீவிர சிந்தனையாளராக வும், கோட்பாட்டாளராகவும் திறனாய்வாளராக வும் இயங்கி வருகிறார். இவரை “இடைவிடாது இயங்கிவரும் ஆய்வு அறிஞர் ஞானிக்குள் தமிழ் இயங்குகிறது” என்று வர்ணிப்பார்கள். தமிழின் நவீன இலக்கியங்களை மார்க்ஸிய நோக்கில் ஆராய்ந்தவர்களில் முதன்மையானவர். நுட்பமான இலக்கிய உணர்வும், நவீன இலக்கியங்களை, திறந்த மனத்துடன் அணுகும் பண்பும் கொண்டவர். இவர் ‘நிகழ்’ என்ற சிற்றிதழை பல ஆண்டுகளாக தமிழில் புதிய இலக்கியத்திற்கான களமாக நடத்தி வந்தார். இதுவரை இவர் 24 திறனாய்வு நூல்களையும் 12 தொகுப்பு நூல்களையும் 4 கட்டுரை தொகுதிகளையும் இரண்டு கவிதை நூல்களையும் எழுதியிருக்கிறார். இதுதவிர தொகுப்பாசிரியராகவும் பல நூல்களை வெளியிட்டிருக்கிறார். இவர் எழுதிய புத்தகங்களில் “இந்தியாவில் தத்துவம், கலாச்சாரம்” “கடவுள் ஏன் இன்னனும் சாகவில்லை” “தமிழ் நாவல்களில் தேடலும் திரட்டலும்” “மறுவாசிப்பில் தமிழ் இலக்கியம்” ஆகியவை முக்கியமானவையாக கருதப்படுகின்றன. இவருடைய நீண்ட கால தமிழ் சேவைக்காக “விளக்கு விருது”, “தமிழ் தேசியச் செம்மல் விருது”, “தமிழ் தேசியத் திறனாய்வு விருது”, “பாரதி விருது” ஆகியவை வழங்கப்பட்டிருக்கின்றன.

## ஐராவதம் மகாதேவன்

ஐராவதம் மகாதேவன் திருச்சியில் உள்ள வளனார் கல்லூரியிலும் பின்னர் சென்னைப் பல்கலைக் கழகத்திலும் கல்வி

பயின்றார். இந்திய ஆட்சிப் பணியில் 33 வருடங்களும், தினமணி இதழின் ஆசிரியராக நாலு வருடங்களும் பணி புரிந்தார்.

இவருடைய தினமணி காலத்தில் தமிழ் மொழியின் பரவலான எழுத்துபாவனை தூய தமிழ்ச்சொற்களின் அறிமுகத்தால் பெரும் மாற்றமடைந்தது. தமிழ் எழுத்துக்களின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து இவர் நடத்திய நீண்ட கால ஆராய்ச்சிகளுக்காக சர்வதேச புகழ் இவரை தேடி வந்தது.



கல்வெட்டு ஆராய்ச்சிகளில் இவர் காட்டிய அர்ப்பணிப்பும் உழைப்பும் தொல்தமிழ் குறித்தும் பண்பாடு, வரலாறு குறித்தும் தீர்க்கமான முடிவுகளை எட்ட உதவியிருக்கிறது. இவர் நாம் வாழும் காலகட்டத்தின் மாபெரும் ஆய்வாளர் என்பதை பல்துறை அறிஞர்களும் ஒப்புக்கொள்கிறார்கள். பிராமி எழுத்துமுறை தமிழகத்தில் கி.மு மூன்றாம் நூற்றாண்டில் பரவியது என்பதையும் அந்த நூற்றாண்டிலேயே எழுத்தறிவு தோன்றியது என்பதையும் ஆராய்ச்சி மூலம் நிறுவியிருக்கிறார். அரசவை, மேனிலை மக்கள், வழிபாட்டு தலங்கள் மத்தியில் மட்டுமே எழுத்தறிவு என்ற நிலை இல்லாமல் எல்லா நிலைகளிலும் எல்லா மக்களிடையே யும் எழுத்தறிவு காணப்பட்டது என்பது

இவருடைய ஆராய்ச்சியின் முக்கியமான முடிவு.. இவர் எழுதியுள்ள நூல்கள்
The Indus Script : Texts, Concordance and Tables (1977)
Early Tamil Epigraphy, from the Earliest Times to the Sixth Century A.D (2003)
இவருடைய ஆராய்ச்சிகளுக்காக இந்திய அரசு இவருக்கு 2009 ம் ஆண்டுக்கான பத்மஸ்ரீ விருதை வழங்கியுள்ளது.

விருது வழங்கும் விழா பற்றிய விவரங்கள் பத்திரிகைகளிலும் தமிழ் இலக்கியத் தோட்டத்தின் இணையத்தளத்திலும் அறிவிக்கப்படும்.

# ஹெய்ரியில்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

கடுமையான போட்டி எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் காரணமாக யுத்தக் காயங்களை அனுபவித்துள்ள சுமார் இருபத்தைந்து லட்சம் தமிழர்களே ஜனவரி 26 ம் திகதி தேர்தலில் யாருக்கு வெற்றி என்பதைத் தீர்மானிக்கப் போகின்ற சக்தியாக விளங்குகின்றனர்.

ராஜபக்ஷவும், பொன்சேகாவும் வடபகுதியில் தமிழர்களின் இதய பூமியான யாழ்ப்பாணத்தில் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். ஒரு வருட காலத்திற்கு முன் இது நினைத்துப் பார்க்கமுடியாத விடயமாகக் காணப்பட்டது.

முன்னர் யுத்தம் இடம்பெற்ற பகுதிகளில் புனர்நிர்மாணப் பணிகளை முன்னெடுக்கவுள்ளனர் எனவும், மோதல் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றுவர் எனவும் உறுதியளித்துள்ளதன் மூலம் இரு வேட்பாளர்களும் தமிழர்களின் ஆதரவைப் பெற முயல்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் செல்வாக்கு இன்னமும் உண்டு

எவ்வாறாயினும், தமிழ்மக்களின் வாக்குகளே தீர்க்கரமானவையாக அமையும் என்றார் அவர். தமிழ்மக்களே அடுத்த ஜனாதிபதியைத் தீர்மானிக்கலாம் எனத் தெரிவித்த புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், விடுதலைப்புலிகள் இல்லாதபோதிலும் அவர்களது செல்வாக்கு இன்னமும் காணப்படுகின்றது. இதன் காரணமாக விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்கான அரசியல் தீர்மானத்தை எடுத்தவர் எனத் தாம் கருதும் மஹிந்த ராஜபக்ஷ விற்கு எதிராகப் பெரும்பாலான தமிழர்கள் வாக்களிக்கலாம் என்றார்.

ஊழல், பொருளாதாரம், ஊடகச் சுதந்திரம் போன்ற விடயங்களே பெரும்பான்மை சிங்களவர்களைப் பொறுத்தவரை முக்கியமான விடயங்களாக அமையப்போகின்றன என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர் என்றும் ஏ.எவ்.பி. தெரிவித்துள்ளது.

கனேடிய அரசாங்கம் 33 இலட்சம் ரூபாய்களை செலவுசெய்து தேர்தலைக் கண்காணிப்பதற்கு இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட உள்ளூர் வாசிகளுக்குப் பயிற்சியளிக்கவுள்ளது. இவர்கள் வாக்குச்சாவடி முகவர்களாகவும் தேர்தல் சட்டங்களை மீறுபவர்களை கண்காணிப்பவர்களாகவும் தேர்தல் நாளின்போது செயல்படுவார்கள் என்று இலங்கையில் உள்ள கனடிய தூதுவராலயம் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளது.

## எட்டாவது சர்வதேச தமிழ் குறுந்திரைப்பட விழா படைப்புகளுக்கானகோரல்

சுயாதீன கலை திரைப்பட மையத்தால், கனடாவின் ரொரன்ரோ நகரில் நடத்தப்படும் வருடாந்த சர்வதேச குறுந்திரைப்பட விழாவில் பங்குபற்றுவதற்கான குறுந்திரைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன.

படைப்புக்கள் ஆங்கில துணைத் தலைப்புக்களை கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.

தாயக நிலைமையை வெளிப்படுத்தும் படங்கள் வரவேற்கப்படுகின்றன.

விழாவில் சிறந்த திரைப்படைப்புக்களுக்கான 3 பரிசுகள் வழங்கப்படும். அவையாவன:
- முதற் பரிசு -- 500 கனடிய டொலர்
- இரண்டாம் பரிசு -- 300 கனடிய டொலர்
- மூன்றாம் பரிசு -- 200 கனடிய டொலர்

### படைப்புக்கள் பின்வரும் விதிகளுக்கமைய சமர்ப்பிக்கப்பட வேண்டும்:

- படைப்புக்கள் தை 15, 2010க்கு (Jan. 10, 2010) முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
- படைப்புக்கள் 30 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்களின் மொழி தமிழாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்களுடன் அதில் பங்குபற்றிய தொழில் நுட்பக்கலைஞர்கள், நடிகர்கள் பட்டியல் இணைக்கப்படல் வேண்டும்.
- படைப்புக்களின் தயாரிப்பாளரின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் இணைக்கப்படல் வேண்டும்.
- தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது.

- படைப்புக்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:
  Tam Sivathasan
  Exceutive Director - IAFS
  1345 Morningside Ave., Unit # 8, Toronto, ON. Canada, M1B 5K3

மேலதிக தொடர்புகளுக்கு:
1-416-450-6833, 1-416-804-3443, rathan@rogers.com,
iafs@rogers.com, www.iafstamil.com
*Independent Art Film Society of Toronto*

# ஆதன வர்த்தகத்தில் ...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

**எதிர்கால முதன்மை வட்டிவீதத்தை பற்றிய எதிர்வு கூறல்**


*2010(%)* *2011(%)*

| Forcaster | Q1 | Q2 | Q3 | Q4 | Q1 | Q2 | Q3 | Q4 |
|---|---|---|---|---|---|---|---|---|
| TD Bank | 0.25 | 0.25 | 0.25 | 0.75 | 1.50 | 2.00 | 2.75 | 3.25 |
| Scotia Bank | 0.25 | 0.25 | 0.75 | 1.25 | 1.75 | 2.25 | 2.25 | 2.25 |
| Royal Bank | 0.25 | 0.25 | 0.75 | 1.25 | 1.75 | 2.25 | 2.25 | 2.25 |

மேற்காட்டப்பட்ட, கனடிய மத்தியவங்கியின் வட்டிவீத எதிர்வு கூறலில் 2010ஆம் ஆண்டின் இறுதி அரை ஆண்டில் வட்டிவீதம் அதிகரிக்கலாம் என தெரியவருகின்றது. அத்துடன் 2011ஆம் ஆண்டில் வட்டிவீதம் மேலும் அதிகரிக்கலாம் எனத்தோன்றுகின்றது. இதனால் இப்பொழுது ஆதனம் வாங்குபவர்கள் மற்றும், அடமானக்கடன் Renewal இற்கு வருபவர்கள் மிகக் கவனத்துடன் முடிவு எடுத்தல் சிறந்த பலனைக் கொடுக்கும் என எதிர்பார்க்கலாம்.

ஆகக் காணப்பட்டது. 2009இன் சராசரி வீட்டுவிலை $395,460 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் வருடா வருடம் விற்கும் கைமாறும் ஆதனங்களும் அதிகரிப்பதனையும் காணலாம். 2007ஆம் ஆண்டே இதுவரை அதிகூடிய வீடுகள் கைமாறியதைக் காணலாம். இருந்தபோதிலும், 2009ஆம் ஆண்டு 87,308 ஆதனங்கள் கைமாறியுள்ளன.

2007ஆம் ஆண்டிற்கு அடுத்ததாக, 2009ஆம் ஆண்டே சிறந்த ஆஸ்தி விற்பனை ஆண்டாகும். 2009ஆம் ஆண்டின் ஆரம்பத்தின் முதல் நான்கு (4) மாதங்களும், ஆமை வேகத்தில் ஆரம்பித்து, மாதம் மாற மாற முயல் வேகத்தில் உச்சத்தை அடைந்துள்ளது.




2009ஆம் ஆண்டு ஆதன வியாபாரத்தில் மற்றுமொரு மைல்கல்லாக சரித்திரத்தில் பதியப்பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணமாக வட்டிவீதத்தையும் புதிய குடிவரவாளர்களையும், அரசாங்கத்தின் சலுகைகளையும் கொள்ளலாம்.

1997ஆம் ஆண்டின் ஆரம்பித்த ஆதனத்தின் விலை அதிகரிப்பு தொடர்ந்து ஏறுமுகமாகவே காணப்படுகின்றது. கீழேயுள்ள அட்டவணையும், வரைபும் இதனைக் காட்டுவதைக் காணலாம்.

1997ஆம் ஆண்டில் சராசரி விலை $211,307

பொதுவாக டிசம்பர் மாதம், சரித்திரப்பதிவில் மிகவும் அமைதியான வியாபார மாதம். ஆனால் 2009 ஆண்டின் டிசம்பர் சரித்திற்கு ஒரு மாறுதலைக் கொடுத்துள்ளது.

2010 ஆம் ஆண்டின் ஆரம்பம் மிகவும் உற்சாகமாக தொடங்கியுள்ளது. எதிர்பார்ப்புகளுடன் புதிய ஆண்டை நோக்குவோம்.

# இரத்த அழுத்தமும்...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

மாரடைப்பு, மார்பு வலி அறியும் விதம் பற்றி பார்ப்போம். மார்பிலில் இருக்கும் தோல், தசை, எலும்பு, சுவாசப்பை போன்ற உறுப்புகளில் உண்டாகும் நோயாலும் நெஞ்சில் நோ ஏற்படலாம். எனவே, எந்த நோவாக இருந்தாலும் தாமதியாமல் வைத்தியர் மூலம் பரிசோதனை செய்து கொள்வது மிக நன்று.

கடின வேலை செய்தல், விரைவாக நடத்தல், வேகமாக துவிச்சக்கர வண்டி ஓடுதல், படிகளில் ஏறுதல், மலைப்பகுதிகளில் ஏறுதல் போன்ற நேரங்களில் நடு நெஞ்சுப்பகுதியில் ஏதாவதொருவித வேதனை ஏற்படுத்தும். ஆறுதல் எடுக்கும் வேளையில் குறையும், இயல்பாக இருக்கும். இந்நிலையை மார்பு வலி என்றும், அஞ்சயனா (Angina) என்றும் அழைக்கப்படும். இந்த மார்பில் ஏற்படும் வலித்தன்மை அடைப்பது அல்லது இறுக்கிப்பிடிப்பது போன்றும், மூச்சு விடுவது கஸ்ட நிலையாகவும், அமுக்க நிலை போல் பாரமான நிலை, நெஞ்செரிவு போன்றவற்றில் எதாவது இருக்கக்கூடும். மார்பில் ஏற்படும் வேதனை பெரும்பாலும் இடது பக்க தோள் மூட்டு, இடது கை, கழுத்து, தொண்டைத்தாடை, காது போன்ற பகுதிக்கும் பரவும். இந்நிலையில் ஓய்வு எடுத்தால் குறைந்து காணப்படும். ஆனால், வியாதியில் மாற்றம் பெற வைத்தியர்களிடம் நாட வேண்டும். மேற்கூறப்பட்ட நிலை சிலருக்கு சாதாரண வேலை செய்யும்போதும், ஆறுதலாக இருக்கும்போதும், நித்திரை கொள்ளும்போதும்கூட ஏற்படலாம். இந்நிலையை நிலை மாறும் மார்பு வலி (Unstable Angina) இருதய நோயில் தீங்கை விளைவிக்கும் மாரடைப்பு, Myocardial Infarction பொதுவாக ஹாட் அற்றாக் (**Heart Attck**) எனக்கூறிக் கொள்வார்கள்.



மார்படைப்பில் மார்பு வலி போலவே வேதனை கூடி பொறுக்க முடியாமல் இருக்கும். அவ்வேளை வியர்வை, களைப்பு காணப்படும். மார்பு வலி உள்ளோருக்கு மாரடைப்பு வர வாய்ப்புண்டு. இது திடீரென நிகழும். இதனால் மரணமும் ஏற்பட்டு விடும். இருதயத்தசை நலிவடைந்து செயல் அற்று போய்விடும். இந்நிலையைக் காணுமிடத்து வைத்தியசாலைக்கு சென்று உடன் சிகிச்சை பெற்றுக் கொள்ளுங்கள்.




# அடுத்து அசத்த...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

அளவுக்கு அசாத்திய வேகம் இருந்தது.

ஸ்விங், பௌன்ஸர், அவுட்ஸ்விங், இன்ஸ்விங் என அவர் தான் நினைத்த இடத்தில் பந்தை செலுத்தும் திறமையைப் பெற்றிருந்தார். 1983-84-ல் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றார். மொத்தம் 70 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய லில்லி 355 விக்கெட்டுகளை வீழ்த்தி அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய பந்துவீச்சாளர் என்ற பெருமையைப் பெற்றார். பேட்டிங்கில் 905 ரன்கள் சேர்த்தார்.

63 ஒரு நாள் ஆட்டங்களில் விளையாடி 103 விக்கெட்டுகளையும் அவர் கைப்பற்றியுள்ளார். கிரிக்கெட்டில் உலகப் புகழ்பெற்ற லில்லி, இங்கிலாந்துக்கு எதிரான ஒரு போட்டியில் அலுமினியத்தால் ஆன மட்டையைப் பயன்படுத்தி சர்ச்சைக்கும் உள்ளானர்.

ஓய்வுக்குப் பின்னர் சென்னையிலுள்ள எம்ஆர்எ.்ப் வேகப்பந்து பௌண்டேஷனில் இளம் கிரிக்கெட் வீரர்களுக்கு வேகப்பந்து வீச்சு பயிற்சியை அவர் அளித்து வருகிறார். இதன்மூலம் ஏராளமான வேகப்பந்து வீரர்களை உருவாக்கிய பெருமை லில்லிக்கு உண்டு. வேகப்பந்து வீச்சாளர்களை உருவாக்கும் அவரது பணி இன்று வரை தொடர்கிறது.



யோகா சோதிடம்

• கிரகப்பொருத்தம் பார்த்தல்
• சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல்
• சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# பிள்ளையார்பட்டி - முழுமுதற் கடவுள்



## தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்- 71

விநாயகர் என்ற பெயருக்குத் தலைவனே இல்லாத முதல்வன் என்று பொருள் உண்டு. வி என்றால் இல்லாத, நாயகர் என்றால் தலைவன். தலைவனே இல்லாத முதல்வன், முழுமுதற் கடவுள். முதல்வனை, முழுமுதற் கடவுளை, விநாயகனைத் தொழுது ஆரம்பிக்கும் எந்தக் காரியத்தையும் இடையூறுகளின்றி நன்மைகளாகச் செய்வதே விநாயகரின் பெருமை. அவரைப் போற்றிய அனைவருக்கும், எந்தவிதமான தீங்கும் ஏற்படாமல் காக்கவே அவதார மெடுத்தவர் விநாயகர் என்பது ஐதீகம். அதனால்தான், விநாயகர் கோயில் இல்லாத ஊரையே பார்க்க முடியாது. தனிக்கோயில் இல்லாவிட்டாலும், எல்லாக் கோயில்களிலும் பிள்ளையாருக்கு ஒரு சன்னதி இருக்கும் அல்லது ஒரு மாடத்திலாவது பிள்ளையாரை அமர்த்தி இருப்பார்கள். வைணவக் கோயில் களிலும் விநாயகர் திருஉருவம் பிர திட்சை செய்யப்பட்டுள்ளது. இப்படி, பிள்ளையார் எல்லா ஊர்களிலும் இருந்தாலும், பிள்ளையார் பட்டி விநாயகரை தரிசிப்பது தனி அனுபவம்.

கேட்டதை கொடுக்கும் கற்பக விருட்சமாக பிள்ளையார்பட்டியில் அமர்ந்திருப்பவர் கற்பக விநாயகர். தேசி விநாயகர் என்ற வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பெயரும் இவருக்கு உண்டு. தேசி விநாயகர் என்ற பெயருக்கு ஒளிமிக்க விநாயகர், அழகுள்ள விநாயகர் என்று பொருள். தேசிகன் என்ற சொல் வணிகர் களைக் குறிப்பிடும் சொல். வணிகர் குலம் தழைக்க அருள் புரியும் விநாயகர், கற்பக விநாயகர்.

பிள்ளையார்பட்டி விநாயகர் கோயில், குன்றைக் குடைந்து அமைக்கப்பட்ட குடைவரைக் கோயில். சுமார் 1600 ஆண்டுகள் பழமையானது. கோயிலின் அமைப்பு இரு பகுதிகளாக அமைந்திருக்கிறது. கோயிலின் ஒரு பகுதி குடைவரைக் கோயிலாகவும், மற்றொரு பகுதி கற்றளி எனவும் அமைந்திருக்கிறது. குடைவரைக் கோயிலை அமைத்த பெருமை முற்கால பாண்டியர்களின் திருப்பணி. கற்றளியை அமைத்த பெருமை நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் பெரும்பணி. தமிழ்நாட்டுக் குடைவரைக் கோயில்களில் மிகவும் சிறப்பு வாய்ந்தது பிள்ளையார்பட்டி குடைவரைக் கோயில் என்கிறார்கள். அமைப்பிலும் அழகிலும் தனித்தன்மையுடன் அமைந்திருப்பதுதான் இதற்குக் காரணம். இது, மற்ற குடைவரைக் கோயில்களிலிருந்து மாறுபட்ட வடிவமுடையது. பெரும்பாலும் முகப்புத் தூண்களும் அரைத் தூண்களும் இல்லாத குடைவரைக் கோயில்கள் அமைந்ததில்லை, இது ஒன்றைத் தவிர.

பிள்ளையார்பட்டியில் இருப்பவர் வலம் சுழி விநாயகர். இது மிகவும் விசேசமானது. இரண்டு கைகள் கொண்ட விநாயகராக வடக்கு முகமாக இருக்கிறார். ஆறு அடி உயரம் கொண்ட கம்பீரமான மூலவர். இந்த விநாயகரின் திருஉருவம் காலத்தால் பழைமை வாய்ந்த வடிவமாகும். வலது கையில் ஒரு சின்ன லிங்கமும், இடது கரத்தைத் தனது தொந்தியைச் சுற்றியுள்ள வயிற்றுக் கச்சையின் மீது வைத்துக்கொண்டும் அமர்ந்திருக்கிறார். தும்பிக்கை வலமாக சுழித்துக் கொண்டிருக்கும். வலம்புரியாக வளைந்த தும்பிக்கையும் தந்தங்களின் அமைப்பும் அழகாக அமைந்திருக்கிறது. மார்பில் முப்புரி நூல் இல்லாமல், வயிற்றை முப்பட்டையாலான உதரபந்தம் அலங்கரிக்க தலையில் மகுடம் சூடி வடக்கு நோக்கி அமர்ந்திருக்கிறார். இது அபூர்வம். கயமுகாசுரனை விநாயகப் பெருமான் கொன்று விடுகிறார். பிறகு, இந்த பழி விலக்க சிவபெருமானை வடக்கு நோக்கி தவம் இருக்கிறார் விநாயகப் பெருமான் என்பது ஐதீகம்.

விநாயகர் சந்நிதிக்கு எதிர்புறம் அமைந்த வடக்கு கோபுர வாயில் வழியாகச் சென்று வழிபாடு முடித்து, கிழக்கு ராஜ கோபுர வாயில் வழியாக வெளியே வரவேண்டும். இதுவே மரபாகக் கொண்டுள்ளனர். வடக்கு கோபுர வாயிலின் வழியாக நுழைந்ததும், இரண்டு பக்கங்களிலும் அழகான மண்டபங்கள் வரும். உள்ளே குடைவரைக் கோயிலைக் குடைந்து அமைக்கப்பட்ட ஆறு அடி உயர கற்பக விநாயகர் அர்த்தச் சித்திரமாகக் காட்சி தருவார். அவருக்கு எதிர்புறமாக கொடிமரமும் பலி பீடமும் பெரிய மூஞ்சூறின் உருவமும் அமைக்கப்பட்டிருக்கின்றன. குடைவரைக் கோயிலினுள் நடுவே கிழக்கு முகமாக அமைக்கப்பட்டிருக்கும் மகாலிங்கம் மிகுந்த பொலிவுடன் காணப்படுகிறது. திருவீசர் எனப்படும் இப்பெருமானுக்கு திருவீங்கைக்குடி மகாதேவர் என்ற பெயரும் உண்டு. சற்று வடக்கில் வெளிப்புறச் சுவரில் லிங்கோத்பவர் காட்சியளிக்கிறார்.

குகைக்கோயிலிலிருந்து சிறிது தூரத்தில் கிழக்கு நோக்கிய சந்நிதியாக அமைந்திருக்கிறது மருதீசர் சந்நிதி. கற்றளி எனப்படும் இந்த மருதீசர் சந்நிதி நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் திருப்பணியால் சிறப்பிக்கப்பட்டது. சதுர வடிவ கருவறையின் நடுவே வட்ட வடிவமான ஆவுடையார் மீது லிங்க வடிவில் அமைந்துள்ள மருதீசர், அர்ஜுனவனேசர் என்ற பெயரிலும் வழங்கப்படுகிறார். (தென்னிந்தியாவில் உள்ள அர்ஜுன வன திருத்தலங்கள் நான்கில் பிள்ளையார்பட்டியும் ஒன்று. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள திருபுடைமருதூர், தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவுடை மருதூர், ஆந்திர மாநிலத்தில் உள்ள ஸ்ரீசைலம் ஆகியவை மற்ற மூன்றும்.) பிள்ளையார்பட்டியில் கருவறையைச் சுற்றியுள்ள புறச் சுவர்கள் சிற்பங்கள் எதுவுமின்றி நுட்பமான கட்டட வேலைப்பாடுகளுடன் மிக அழகாகவும் எளிமையாகவும் திகழ்கின்றன. மருதீசர் கோயில் 30 செப்புத் திருமேனிகளைக் கொண்டுள்ளது. காலத்தால் இவை கி.பி.10ஆம் நூற்றாண்டு முதல் 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி வரையிலானது என்கிறார்கள். மருதீசர் கோயிலை வலம் வருவதற்காக எழுப்பப்பட்டுள்ள திருச்சுற்றுப் பாதை நல்ல நீள, அகலத்தோடு அமைக்கப்பட்டிருக்கிறது. திருச்சுற்று மாளிகையின் தூண்களில் வடிக்கப்பட்டிருக்கும் சிற்பங்களையும் மாளிகைப்பத்தியில் இருக்கும் பரிவார தெய்வங்களையும் நேரில்தான் பார்க்க வேண்டும். அவ்வளவு அற்புதமாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

மருதீசர் கோயிலின் மேல்சுற்றுப் பிரகாரத்தின் வடகிழக்குப் பகுதியில் வாடாமலர் மங்கை வீற்றிருக்கிறார். இவருடைய சந்நிதி தெற்கு முகமாகக் காட்சியளிக்கிறது. கருவறை நடுவே அம்மனின் திருஉருவம் பத்ம பீடத்தின் மீது இரண்டு கைகளுடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறது. நகரத்தாரின் முதல் திருப்பணியின்போது இச்சந்நிதி அமைக்கப்பட்டு அம்மன் பிரதிட்சை செய்யப்பட்டுள்ளது. வடக்கு கோபுர வாயிலின் உள்ளே கிழக்குப் பகுதியில் சிவகாமியம்மன் சந்நிதி உள்ளது. மகா மண்டபத்தின் வடக்குப் பகுதியில் நடராசர் சபையுள்ளது. இங்கு அலங்கார மண்டபத்தில் வரையப்பட்டிருக்கும் ஓவியங்கள் ஓவியக் கலைக்குப் பெருமை சேர்க்கும் விதமாக அமைந்திருக்கிறது.

கோயில் திருமதிலின் கிழக்கு வாயிலில் ராஜகோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. ஏழு நிலைகளுடன் அமைந்த இக்கோபுரம் அதிட்டானம் முதல் கல்லாரம் வரை வெள்ளைக் கல்லாலும், அதற்கு மேற்பட்ட பகுதிகள் செங்கல் மற்றும் சுதை கொண்டும் எழுப்பப்பட்டுள்ளது. கற்பக விநாயகர் சந்நிதியின் முன்புறமாக இருக்கும் திருமதிலின் வடக்கு வாயிலில் விநாயகக் கோபுரம் உள்ளது. இது மூன்று நிலைகளுடன் காணப்படுகிறது. இக்கோபுரம் அதிட்டானம் முதல் கல்லாரம் வரை வெள்ளைக் கற்களைக் கொண்டும் அதன் மேல் எழுப்பப்பட்டுள்ள கோபுரத் தளங்கள் செங்கல்லைக் கொண்டும் எழுப்பப்பட்டிருக்கிறது. ராஜகோபுரத்தைவிட காலத்தால் பழைமை வாய்ந்தது விநாயகர் கோபுரம். இக் கோபுரத்திற்கு எதிரே வெளிப் பிரகாரத்தின் வட திசையில் விசாலமாக அமைந்த திருக்குளம் உள்ளது.

பிள்ளையார்பட்டி கோயிலை அமைத்ததன் மூலம், பல்லவர்களுக்கு முன்பே குடைவரைக் கோயில்களை அமைத்த பெருமையை முற்கால பாண்டியர்கள் பெறுகிறார்கள். பெருபரணன் என்ற மன்னனின் பெயர் கோயில் கல்வெட்டில் பொறிக்கப்பட்டிருக்கிறது. இதன் படி மகேந்திரவர்ம பல்லவன் காலத்துக்கும் முன்பு இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்தது இந்தக் குடைவரைக் கோயில் என ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. எருக்காட்டூர், மருதங்குடி, திருவீங்கைக்குடி, திருவீங்கைச்வரம், இராச நாராயணபுரம், மருதங்கூர், தென்மருதூர், கணேசபுரம், கணேச மாநகரம், பிள்ளைநகர் என்ற பெயர்களிலும் அக்காலங்களில் பிள்ளையார்பட்டி அழைக்கப்பட்டிருக்கிறது. கி.பி.12ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் செட்டிநாட்டு நகரத்தார்கள் வசம் இக்கோயில் வந்திருக்கிறது. நாட்டுக்கோட்டை நகரத்தார்கள், தங்களுக்கேயுரிய மிகச் சிறப்பான முறையில், ஆகம முறை தவறாமல் வழிபாடு செய்திருக்கிறார்கள். கோயிலையும் சுற்றியுள்ள வயல்வெளிகளையும்கூட நகரத்தார்கள் மிகச் சிறப்பாக நிர்வகித்து வருகின்றனர்.


**வழிப்போக்கன்**

தமிழகத்திலேயே உண்டியல் இல்லாத கோயில் இதுதான். இத்தலத்தில் வணங்கினால் கல்வி, கேள்வி ஞானம், திருமணம், குழந்தை பாக்கியம், குடும்ப நலம், உடல் பலம் உட்பட சகல பலன்களும் கிடைக்கும் என்பது நம்பிக்கை. புதிய கணக்கு தொடங்கல், வியாபார விருத்தி ஆகியவற்றுக்கும் பிள்ளையார்பட்டி மிகப் பிரசித்தமானது. வெளிநாடு செல்வதற்கு பாஸ்போர்ட் விசா வாங்குவது, அல்லது அதில் ஏதாவது சிக்கல் இருந்தால் கோவில் வாசலிலுள்ள பாஸ்போர்ட் விநாயகரிடம் வேண்டிக்கொண்டால் அவர் அனைத்தையும் தீர்த்து வைப்பார் என்ற விசேஷம் நம்பிக்கையுடனும் பிள்ளையார்பட்டிக்கு நிறைய பக்தர்கள் வருகிறார்கள்.

இங்கு நவகிரகங்கள் அமர்ந்த நிலையில் இருக்கிறார்கள். இவர்களிடம் வேண்டிக்கொண்டால் எந்த்வொரு பிரச்சனையிலிருந்தும் விடுபடலாம்.

பிள்ளையார்பட்டி சதுர்த்தி திருவிழா மிக விசேஷமானது. ஒவ்வொரு வருடமும் ஆவணி மாதம் 10 நாட்கள் நடைபெறும். சதுர்த்தியின் போது இரவு நேரத்தில் விநாயகர் மூஷிக வாகனத்தில் எழுந்தருளி கோயில் உட்பிரகாரத்தில் வலம் வருவார். பிள்ளையார்

தொடர்ச்சி 29ஆம் பக்கம்

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# HomeLife GTA Realty Inc., Brokerage*

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

## எமது நிறுவனம் பற்றிய சில தகவல்கள்

- *3 Brokers to Help*
- *2 Branches: Scarborough & Mississauga*
- *Open 7 days And After Hours Services Availlable*
- *Convenient Locations*
- *Regular Training Provided*
- *Private Room*
- *Exclusive Projects for HomeLife GTA Sales Agents Only (Better Prices And Deposit Structure for Buyers)*

எமது முகவர்களினூடாக ஆதனம் கொள்வனவு அல்லது விற்பனை செய்வதன் மூலம் BMW வாகனம் ஒன்றை பெற்றுக்கொள்ளும் அதிஷ்டசாலியாகலாம். *

* BMW some conditions may apply


Broker / Owner


Broker/Manager


Broker / Owner

**Pl. Call @ 416.321.6969 / 905.712.2666**

**1711 McCowan Rd. #206, Toronto / 145 Traders Blvd # 29, Mississauga**

# 'விளம்பரம்' ஒரு திறனாய்வு

ஜனவரி 02. 2010 அன்று நடைபெற்ற 'விளம்பரம்' இதழ் எழுத்தாளர்கள், அவர்கள் குடும்பத்தினர், நண்பர்களின் 20ஆம் ஆண்டுத் தொடக்க ஒன்று கூடும் விழாவில் ஆற்றிய உரையின் எழுத்துவடிவம்)

நான் 2006இல் ஒருமுறை ரொறொன்ரோவிற்கு வந்திருந்தேன். அப்போது நான் சென்ற தமிழ்க் கடைகள், இந்துக்கோவில்கள் ஆகியவற்றில் பல்வேறு தமிழ் இதழ்கள் இருந்தன. அவற்றை எல்லாம் நான் வீட்டிற்கு எடுத்துச் சென்று படித்தேன். இம்முறையும் அவ்வாறே பல இதழ்களைப் படித்தேன். 'விளம்பரம்' இதழ் எனக்கு அப்போதெல்லாம் கிடைக்கவில்லை.

நண்பர் பெரி. முத்துராமன் எனக்கு 'விளம்பரம்' இதழை அறிமுகப்படுத்திய தோடு, அவ்விதழின் இணைய தளத்தையும் அறிவித்தார். பிறகு நான் அந்த இணையதளத்தின் வாயிலாக 'விளம்பரம்' இதழின் மிகப்பல இதழ்களைப் படித்தேன். அப்போது ஏனைய இதழ்களுக்கும் இந்த இதழுக்கும் இடையே மிகச் சிறப்பான, குறிப்பிடத்தக்க ஒரு வேறுபாட்டைக் கண்டறிந்தேன்.

ஏனைய இதழ்களில் எல்லாம் 90 விழுக்காடு விளம்பரங்களும், 10 விழுக்காடு மட்டும் தகவல்கள், கட்டுரைகளும் இடம் பெற்றிருந்தன. ஆனால் 'விளம்பர' இதழில் மட்டும் விளம்பரம் குறைவாகவும் கட்டுரைகள் மிகுதியாகவும் இடம் பெற்றிருப்பதைப் பார்த்து வியந்தேன், மகிழ்ந்தேன். அப்போது நான் நினைத்தேன், இந்த இதழுக்குத் தமிழ் இலக்கணம் சுட்டும் மங்கல வழக்கில் பெயர் வைத்திருப்பார் களோ என்று? எது இல்லையோ அதை இருப்பதாகச் சொல்வது மங்கல வழக்கு ஆகும். எனக்குத் தெரிந்த ஒரு பேச்சாளரின் பெயர் 'சொல் விளங்கும் நாராயணன்' அவர் பேசினால் யாருக்கும் எதுவும் விளங்காது. எங்கள் நண்பர்கள் வட்டத்தில் அவர் பெயர் மங்கல வழக்கில் அமைந்துள்ளது என வேடிக்கையாகப் பேசிக் கொள்வோம். அப்படிக் கனடியத் தமிழ் இதழ்களுக்குள் குறைவான வீதத்தில் விளம்பரங்களைத் தாங்கி வரும் இதழுக்கு 'விளம்பரம்' எனப் பெயர் வைத்துள்ளனர் என நினைத்தேன்.

இன்றைக்கு இங்கே வந்த பிறகு பெயர்க்காரணத்தை குறித்து வினவினேன். அப்போது சொன்னார்கள் 1991இல் இந்த இதழைத் தொடங்கும் போது இதழ் முழுவதும் (100 விழுக்காடு) விளம்பரங்களே இடம்பெற்றதாகவும் எனவே 'விளம்பரம்' எனப்பெயர் வைத்ததாகவும், காலப்போக்கில் மாறி, தகவல், கட்டுரைகளின் விழுக்காடு கூடி, விளம்பரங்களின் வீதம் குறைந்த பின்னரும் தொடக்க காலப்பெயரை மாற்றாமல்




தொடர்வதாகவும் கூறினர். இதுதான் மரபு போற்றும் தமிழ்ப்பண்பாடு.

'விளம்பரம்' இதழில் இடம்பெறும் தகவல்கள், கட்டுரைகள் அனைத்தும் பயன்தருபவை. ஒவ்வொருதுறையிலும் வல்லுநர்கள் அந்தந்த துறைபற்றித் தொடர்ந்து எழுதிவரும் கட்டுரைகள் தனித்தனியாக, துறைவாரியாகத் தொகுக்கப் பெற்று, நூல்வடிவம் பெறுமானால் அவை மக்களுக்கு மிகவும் பயன்தரத்தக்க நூல்களாக அமையும் என்பதில் ஐயம் இல்லை.

வங்கியியல், முதலீட்டுத்துறை பற்றி அவர் எழுதுகிறார் என்றார். வீடு வாங்குதல், விற்றல், வீட்டுக்கடன் பெறுதல் முதலியவை பற்றி ராஜா மகேந்திரன் எழுதும் கட்டுரைகள் சிறப்பானவை. காப்புறுதி பற்றியும், கனடாவின் போக்குவரத்து விதிகள் பற்றியும் இங்கே ஓட்டுநர் உரிமம் பெறுவது எவ்வாறு? என்பது போன்ற செய்திகள் பற்றியும் 'கனடியத் தகவல் தொடர்' என்ற தலைப்பில் சிவ. பஞ்சலிங்கம் எழுதும் கட்டுரைகள் அன்றாட வாழ்வில் துணை நிற்பவை.

## முனைவர். கரு. முத்தையா

ஒரு மனிதன் இலக்கியத்தையும், இதழ்களையும் நாடுவதன் முதல் நோக்கம் மன அமைதி தேடித்தான் எனலாம். அமைதியைத் தருபவை ஆன்மீக எண்ணங்கள் என்பதை மறுக்க இயலாது. ஆன்மீகம் தொடர்பான கட்டுரைகளை, இந்தியாவிலிருந்து சத்குரு ஜக்கி வாசுதேவ் இடம் இருந்து பெற்று வெளியிடுகிறது 'விளம்பரம்'. மேலும் அனுபவ அறிவு முதிர்ந்த திருமதி. லலிதா புரூடி அவர்கள் உளவியல் செய்திகள் கலந்த ஆன்மீகக் கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதி வருகிறார்கள்.

மனிதனுக்கு அருள்நாட்டம் இருப்பது போலவே பொருள் நாட்டமும் மிகுதியாக அமைந்துள்ளது. பொருள் இல்லையேல் இவ்வுலகில் இன்புற்று வாழ இயலாது. தரையில் காலூன்றி நின்று கொண்டுதான் வானத்தைப் பார்க்க முயலவேண்டும். அவ்வாறான பொருளியல் நாட்டத்திற்குரிய கட்டுரைகளை என் நண்பர் பெரி. முத்துராமன் தொடர்ந்து எழுதி வருகிறார்.

அறிவியல், வரலாறு என்ற துறைகளை நோக்கிலால் கனி எழுதும் பேரண்டத்தின் கதை மிகப் பாராட்டத்தக்க தொடர் ஆகும். அறிவியல் செய்திகளையும், பிறகடினமான செய்திகளையும் மிகவும் எளிமைப் படுத்தி எழுதும் ஆற்றல் உடையவர் எனத் தமிழ் எழுத்தாளர் சுஜாதாவை நான் வியந்து பாராட்டுவேன். அது போலவே அண்டத்தின் தோற்றங் குறித்த செய்திகளை எளிமையாகப் புரிந்து கொள்ளும் வண்ணம் எழுதி வருகிறார் கனி. 'கனடாவின் கதை' என்ற தலைப்பில் துறையூரான் எழுதிவரும் தொடர், நாம் புலம் பெயர்ந்து குடியேறி வாழ்ந்து வரும் நாட்டின் வரலாற்றை விரிவாக விளக்கும் பயனுள்ள தொடராகும். இன்றைய வாழ்வின் எல்லாத் துறையினருக்கும் இன்றியமையாததாகிய கணினி பற்றிப் பாலா எழுதி வருவதும் சிறப்பு மிகும் தொடராகவே உள்ளது.

விளையாட்டுத் துறைச் செய்திகளை எஸ். கணேஷ் மிக நல்லமுறையில், உலகம் தழுவிய நிகழ்வுகள் அனைத்தையும் உணர்ந்து வியக்கும் வகையில் எழுதிவருகிறார். இலக்கியம் தொடர்பான, மொழி தொடர்பான கட்டுரைகளை கவிஞர் கந்தவனம் நா. க. சிவராமலிங்கம், ஈழத்துச் சிவானந்தன் போன்ற மூத்த தமிழறிஞர்கள் எழுதி வருகின்றனர்.

இன்றைய இதழியலில் பிரிக்கமுடியாத ஒரு கூறாக இடம்பெறுவது திரைபடத்துறை. அதுகுறித்தும் 'விளம்பரம்' இதழ் பயன்மிகு தகவல்களையும், கட்டுரைகளையும் தருகிறது. பிற இதழ்களைப் போல நடிகர் நடிகைகளின் புகைப்படங்களை வெளியிட்டு, வரப்போகும் படங்களைப்பற்றிய செய்தித் தொகுப்புக்களைத் தருவதாக இந்த இதழ் அமையவில்லை. மாறாக வெளியான தமிழ்ப் படங்களில் சிறப்புடைய படங்களைத் தெரிவு செய்து, அவை குறித்த விருப்பு வெறுப்பற்ற தரமான திறனாய்வுகளை வெளியிடுவதோடு, கலைஞர்களை நேர்கண்டு, கருத்தறிந்து எதிர்காலத்தில் தமிழ் திரைப்படத்துறை எவ்வாறெல்லாம் முன்னேறும், முன்னேற வேண்டும் என்ற ஆக்கப்பூர்வமான கருத்துக்களையும் தெரிவித்து வருகிறது. இப்பணிகளைத் தொடர்ந்து செய்து வருபவர்கள் பிலிம் நியூஸ் கிருஸ்ணனும், பாலு சத்யாவும் ஆவர்.

தமிழ்த்திரைப்படங்கள், தமிழத்திரை உலகுபற்றி எழுதுவதோடு நிறுத்திக் கொள்ளாமல் உலக அளவிலான திரைப்படங்களில் சிறந்த திரைப்படங்களைத் தமிழர்களுக்கு அறிமுகப்படுத்தும், சம காலத்தேவையை நிறைவு செய்யும் சுவையும் நயமும் நிறைந்த கட்டுரைகளை, 'தூறல்' எனும் தொடரில் தொடர்ந்து எழுதி வரும் வானரன் பாராட்டப்பட வேண்டியவர் ஆவார்.

இவ்வாறு பயனுள்ள கட்டுரைகளின் களஞ்சியமாகத் திகழும் 'விளம்பரம்' இதழ் இன்னும் சிறக்க, நான் நினைக்கும் சில ஆலோசனைகளைச் சொல்லித் திறனாய்வை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

1. 'விளம்பரம்' இதழின் எந்த இடத்திலும், இதன் ஆசிரியர் யார்? அச்சிடுபவர் யார்? வெளியிடுபவர் யார்? என்ற விவரங்கள் இல்லை. இந்தியாவின் இதழியல் சட்டம் என்னவென்றால் இம்மூன்று விவரங்களையும் வெளியிடாமல் எந்த இதழையும் யாரும் நடத்த முடியாது. ஆனால் கனடாவின் இதழியல் சட்டம் இவற்றை வெளியிட வேண்டும் எனக்கட்டாயப்படுத்தவில்லை எனத் தெரிந்துகொண்டேன். ஆனால் சட்டம் எப்படி இருப்பினும் 19 ஆண்டுகளாகச் சிறந்த இதழொன்றைத் திறம்பட நடத்தி வருபவர்கள் யார் என்பது, அந்த இதழில் பதிவு செய்யப்பட வேண்டியது அவசியம் இல்லையா? அவற்றை வெளியிடவேண்டும் என்பது என் முதல் கருத்து.

தொடர்ச்சி 21ஆம் பக்கம்



**COTTAGE / CAMPGROUND FOR SALE**
**Property and Business**

*10 River front cottages with 1-2-3 bedrooms fully equipped comfortable house keeping. 20 trailer homes. One bungalow house with double car garage. Big party hall. The property has own access to the front river. Motor boating, fishing and swimming, 3 boats. 1 Johndeer, 2 golf carts.* *1½ hours from Toronto*



**Sugu: 416.727.6525** **www.hickorygrovecottages.com** **www.troutwatercamping.com**

# எந்த எழுத்தாக இருந்தாலும் சுவாரஸ்யம்மா இருக்கணும்”

## சந்திப்பு: வசனகர்த்தா பாஸ்கர் சக்தி

நம் அன்றாட வாழ்க்கையில் புழக்கத்தில் இருக்கும் உரையாடல்களை இயல்பான, கச்சிதமான, வசனங்களாக எழுதி எத்தனையோ பேரின் மனம் கவர்ந்தவர், பாஸ்கர் சக்தி. 'எம்டன் மகன்', 'முனியாண்டி விலங்கியல் மூன்றாம் ஆண்டு', 'வெண்ணிலா கபடிக்குழு' ஆகிய படங்களில் இடம்பெற்ற இவருடைய வசனங்கள் தனி கவனம் பெற்றன. தமிழ்த் தொலைக்காட்சித் தொடர்களில் மக்களின் பேராதரவைப் பெற்ற 'மெட்டி ஒலி', 'கோலங்கள்' ஆகிய தொடர்களுக்கு வசனம் எழுதியவர். 'லட்சுமி', 'முகூர்த்தம்', 'மேகலா' ஆகிய நெடுந்தொடர்களுக்கும் இவர்தான் வசனகர்த்தா. கடந்து சென்ற 2009ஆம் ஆண்டின் சிறந்த திரைப்பட வசனகர்த்தாவுக்கான விகடன் விருது, தொலைக்காட்சித் தொடர்களில் சிறப்பான பங்களிப்புக்காக தமிழக அரசு வழங்கிய 'கலைமாமணி' விருது என இன்றைய தேதியில் பேசப்படும் வசனகர்த்தாவாக இருக்கிறார், பாஸ்கர் சக்தி. அடிப்படையில் சிறுகதை எழுத்தாளர். இந்தியா டுடே நடத்திய இளம் எழுத்தாளர்களுக்கான சிறுகதைப் போட்டியில் பரிசுபெற்ற 'சாதனம்' என்ற சிறுகதைதான் இவருடைய முதல் படைப்பு. இதுவரை 'பழுப்புநிறப் புகைப்படம்', 'அழகர்சாமியின் குதிரை', 'கனக துர்கா' என



மூன்று சிறுகதைத் தொகுதிகள் வெளியாகியுள்ளன. இனி அவருடன் நேர்காணல்...

கேள்வி: சிறுகதை எழுத்தாளரான நீங்கள் எப்படி காட்சி ஊடகத்துக்கு வந்தீர்கள்?

பாஸ்கர் சக்தி: ஆனந்த விகடன்ல ஒரு ஏழு வாரத் தொடர் எழுதினேன். 'ஏழு நாள் சூரியன், ஏழு நாள் சந்திரன்'னு. அப்போ பாலசந்தர் சாரோட 'மின்பிம்பங்கள்' நிறுவனம் மைக்ரோ தொடர் தயாரிச்சிக்கிட்டு இருந்தாங்க. ரெண்டு வாரத் தொடர். விகடன்ல வந்த என்னோட தொடரை தேர்ந்தெடுத்து, தயாரிச்சாங்க. அதை இயக்குநர் திருமுருகன்தான் டைரக்ட் பண்ணினார். அந்தத் தொடருக்கு முதல் முதலா திரைக்கதை, வசனம் எழுதற வாய்ப்புக் கிடைச்சுது. அதுல என்னோட ஒர்க் இயக்குநர் திருமுருகனுக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு. அடுத்ததா அவரே 'காவேரி'ன்னு ஐம்பத்தி ரெண்டு எபிசோட் வர்ற மாதிரி ஒரு குறுகிய காலத் தொடர் எடுத்தார். அதுலயும் நான் தான் வசனம் எழுதினேன். இப்பிடித்தான் நான் காட்சி ஊடகத்துக்கு வந்தேன். அதுக்கப்புறம் 'மெட்டி ஒலி', 'கோலங்கள்', 'லட்சுமி', 'முகூர்த்தம்', 'மேகலா'ன்னு பல நெடுந்தொடர்களுக்கு எழுதற வாய்ப்பு எனக்குக் கிடைச்சுது.

கேள்வி: பொதுவாக சீரியலோட பலமே அதில் இடம் பெறுகிற வசனங்களில்தான் இருக்கிறது என்று சொல்வார்கள். ஆனால், தொடர்ந்து எழுதும்போது ஒருவிதமான அலுப்பு ஏற்படும் வாய்ப்பும் இருக்கிறது. உங்களுக்கு எப்படி? உங்களுடைய ஒர்க்கிங் பேட்டர்ன் என்ன?

பாஸ்கர் சக்தி: ஒவ்வொரு மாசமும், அடுத்த மாசம் எடுக்க வேண்டிய காட்சிகளைப் பத்தி ஒரு டீமா உக்காந்து பேசுவோம். அந்த மாசக் கடைசியிலயே அடுத்த மாசத்துக்கான ஒன்லைனும், ஷெட்யூலும் என் கைக்கு வந்துடும். ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் அஞ்சு அல்லது ஆறு காட்சிகள் எழுத வேண்டியது வரும். நானும் ஷெட்யூலுக்கு ஏத்த மாதிரி எழுத ஆரம்பிச்சுடுவேன். பொதுவா நான் காலை ஆறுமணிக்கு எழுத ஆரம்பிச்சுடுவேன். நாளின் பெரும்பகுதியை தொலைக்காட்சித் தொடருக்கு எழுதற நேரம் சாப்பிட்டுடும்ங்கறது உண்மைதான். ஆனா, இதுல சலிச்சுக்கறதுக்கு ஒண்ணும் இல்ல. ஏன்னா, தொலைக்காட்சித் தொடருக்கு வசனம் எழுதறதுங்கற இந்த வேலையின் தன்மையே இப்படித்தான் இருக்கும். அதைத் தாண்டி வந்துதான் ஆகணும். இந்த வேலை மட்டுமில்ல, பேங்க்ல வேலை பாக்குற ஒருத்தருக்குக்கூட தொடர்ந்து ஒரே வேலையைச் செய்யும்போது சோர்வு வரத்தான் செய்யும்.

கேள்வி: 'வெண்ணிலா கபடிக்குழு'க்குப் பிறகு எந்தப் படத்துக்கு வசனம் எழுதுகிறீர்கள்?

பாஸ்கர் சக்தி: 'வெண்ணிலா கபடிக்குழு' படத்தின் இயக்குநர் சுசீந்திரன் இயக்கும் 'நான் மகான் அல்ல'ன்னு ஒரு படத்துக்கு எழுதறேன். படத்தோட டைட்டில் மாறினாலும் மாறலாம். 'பருத்திவீரன்' கார்த்திக்கும் காஜல் அகர்வாலும் நடிக்கிறாங்க.

கேள்வி: தொலைக்காட்சித் தொடர்களிலும், சினிமாவிலும் அப்பப்போ தலை காட்டியிருக்கிறீர்கள். தொடர்ந்து நடிப்பீர்களா?

பாஸ்கர் சக்தி: நண்பர்கள் வற்புறுத்தினதால ஜாலியா சில காட்சிகள்ல நடிச்சேன். தொடர்ந்து நடிக்கணுங்கற யோசனை எல்லாம் எனக்கு இல்ல.

கேள்வி: இப்போது எந்த நெடுந்தொடருக்கு வசனம் எழுதுகிறீர்கள்?

பாஸ்கர் சக்தி: இப்போ 'மேகலா' தொடருக்கு மட்டும்தான் எழுதிக்கிட்டு இருக்கேன். இயக்குநர் திருமுருகன் சீக்கிரமே ஒரு நெடுந்தொடர் இயக்கப் போறார். இன்னும் ரெண்டு மாசத்துல வந்துடும். அந்த தொடருக்கு நான் தான் வசனம் எழுதறேன். அதுக்கான டிஸ்கஷன் போய்க்கிட்டு இருக்கு.

கேள்வி: இவ்வளவு வேலைப் பளுக்கு மத்தியில் உங்களுக்கு சிறுகதைகள் எழுத எப்படி நேரம் கிடைக்கிறது?

பாஸ்கர் சக்தி: உண்மையைச் சொல்லணும்னா, முந்தியெல்லாம் எனக்கா தோணித் தோணி, பல சிறுகதைகளை எழுதியிருக்கேன். இப்போ இருக்கற நேரப் பற்றாக்குறைல அப்படி எழுத முடியல. பத்திரிகைகள்ல கதை வேணும்னு கேட்கும்போது, தவிர்க்க முடியாம, 'யப்பா இப்பயாவது கதை எழுத முடிஞ்சுதே!'ன்னு சந்தோஷமா எழுதிக் குடுத்துடுறேன். இதைவிட பெரிய உயரத்துக்கு போனாலும் சிறுகதை எழுதறதை நான் விட மாட்டேன். ஏன்னா, அதுதான் என்னோட எழுத்துக்கான அடிப்படையா இருக்கு.

கேள்வி: தொலைக்காட்சித் தொடருக்கு எழுதுவதற்கும் திரைப்படத்துக்கு எழுதுவதற்கும் உள்ள வித்தியாசம் என்ன?


பாஸ்கர் சக்தி: தொலைக்காட்சித் தொடர்ல நிறைய எழுதணும். ஒரு காட்சியை விரிவா சொல்லணும். உரையாடலை சுவாரஸ்யம் குறையாம விரிவா தரணும். சினிமாவுல அப்படி இல்ல. வசனங்கள் 'நறுக்'குன்னு இருக்கணும். சீரியல்ல எவ்வளவு வேணும்னாலும் எழுதலாங்கற சுதந்திரம் இருக்கு. சினிமாவுல அது முடியாது. ரெண்டுக்குமான பொதுத்தன்மை ஒண்ணு இருக்கு. சுவாரஸ்யம். அடிப்படைல எந்த எழுத்தா இருந்தாலும் சுவாரஸ்யம் இருக்கணும். அது ரொம்ப முக்கியம். அதுக்கு ஒரு பெரிய பயிற்சி வேணும். நான் சீரியல்லயே சுவாரஸ்யம் குறையாமதான் விரிவா வசனம் எழுதறேன். அதனாலதான் அந்த வசனம் ரசிக்கப்படுது.

கேள்வி: திரைத்துறையில் உங்களுடைய எதிர்காலத் திட்டம் என்ன?

பாஸ்கர் சக்தி: ரொம்ப நாளா எழுதிக்கிட்டு இருக்கேன். டைரக்ஷன் பண்ணணும்னு ஆசை. என்கிட்ட நிறைய கதைகள் இருக்கு. ஒரு புரொட்யூசர் கிடைச்சா படம் பண்ணிடலாம். ஏழு வருஷமா இந்த ஃபீல்டுல இருக்கேன். அந்த அனுபவமும், அப்சர்வேஷனும் திரைப்படத்தை இயக்குவதற்கு போதும்னு தோணுது.

கேள்வி: நீங்கள் வசனம் எழுதின திரைப்படங்களில் 'வெண்ணிலா கபடிக்குழு' ஒரு வித்தியாசமான படம். கடந்த நான்கு வருடங்களில் தமிழில் வெளியான திரைப்படங்களில் அதற்கு ஒரு முக்கியமான இடம் உண்டு. அந்தப் படத்தில் வசனம் எழுதும் வாய்ப்பு உங்களுக்கு எப்படிக் கிடைத்தது?

பாஸ்கர் சக்தி: அந்தப் படத்தோட இயக்குநர் சுசீந்திரன் என் நண்பர். அவர் இயக்குநர் எழில்கிட்ட 'தீபாவளி'ங்கற படத்துல உதவி இயக்குநரா வேலை பார்த்தப்போதான் எனக்கு அறிமுகமானார். லெனின்னு இன்னொரு நண்பர் மூலமா அறிமுகமானார். நாங்க எல்லாரும் கே.கே. நகர்ல இருக்குற ஒரு டீக்கடையில தினமும் காலையில மீட் பண்ணுவோம். அரட்டை அடிப்போம். அப்போதான் ஒரு நாள் திடீர்னு வந்து



**நேர்காணல்: பாலு சத்யா**

சுசீந்திரன் சொன்னார். 'எனக்கு ஒரு படம் கமிட் ஆயிடுச்சு. நீங்கதான் வசனம் எழுதணும்'னு சொன்னார். கதையைச் சொன்னார். ரொம்ப எஃபெக்டிவா இருந்துச்சு. அந்தக் கதை எனக்கு ரொம்பப் பிடிச்சுருந்துச்சு. நான் அதுக்கு வசனம் எழுதினேன். இப்பிடித்தான் எனக்கு அந்த வாய்ப்புக் கிடைச்சுது.

கேள்வி: எதிர்காலத்தில் தொலைக்காட்சி நெடுந்தொடர்களின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

பாஸ்கர் சக்தி: எந்த சீரியலை எடுத்துக்கிட்டாலும் அதோட மெயின் பிரச்னை பட்ஜெட், அப்புறம் பார்வையாளர்கள். பொதுவாவே, குறிப்பிட்ட கதைக்களன்கள்தான் திரும்பத் திரும்ப தொடர்களில் இடம் பெறுது. அதனாலதான் நிறையபேருக்கு அலுப்பாயிடுது. கதைக்களன்கள் மாறினால் நல்லா இருக்கும். இது என் அபிப்ராயம். ஆனா, சீரியலோட எதிர்காலம் எப்படி இருக்கும்னு என்னால கணிக்க முடியல.

கேள்வி: இன்றைய தமிழ் சினிமா எப்படி இருக்கிறது?

பாஸ்கர் சக்தி: ரொம்ப ஆரோக்கியமா இருக்கு. புதுப்புது களன், புதுக்கதை எல்லாம் வருது. ஒரு படம் நன்றாக எடுக்கப்பட்டிருக்கற பட்சத்துல அதை வரவேற்கிற போக்கு இருக்கு. இந்தப் போக்கின் காரணமா, நிறையா நல்ல படங்கள் வரும்னு நான் நம்பறேன்.



# 'விளம்பரம்' ஒரு...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

2. வாழ்வின் பல்வேறு துறை ஆர்வலர்களுக்கும் பயன்படும் பகுதிகள் இடம்பெறும் 'விளம்பரம்' இதழில் சிறுவர்களுக்குப் பயன்தரும்பகுதி எதுவும் இல்லாதது ஒரு குறையாக எனக்குத் தெரிகிறது. புலம்பெயர்ந்த மக்கள் தமிழைப்பேசவும், எழுதவும், படிக்கவும் நன்கு அறிந்தவர்கள். ஆனால் புலம்பெயர்ந்த பின், இங்கே பிறந்து வளரும் குழந்தைகள் தமிழைப் பேசமட்டும் அறிந்திருக்கின்றனரே தவிர, எழுத, படிக்க அறிந்தவர்கள் மிகச் சிலரே. அந்தச் சிலர் தங்களது எழுத்தறிவை வளர்த்துக்கொள்ள 'விளம்பரம்' இதழ் துணை செய்ய வேண்டாமா? 'சிறுவர் பகுதி' ஒன்றைத் (நகைச்சுவைக்கதைகள், உருவகக் கதைகள் போன்றவை இடம்பெறலாம்) தொடங்க வேண்டும் என்பது என் இரண்டாவது ஆலோசனை.

3. தகவல்களும், கட்டுரைகளும் ஏராளமாக இடம்பெறும் 'விளம்பரம்' இதழில் படைப்பிலக்கியம் பெறும் இடம் மிகமிகக்குறைவாக இருக்கிறது என ஓர் இலக்கிய வாதியாகிய நான் நினைக்கிறேன். தொடர்கதை, சிறுகதை, நாடகம், கவிதை என்ற படைப்பிலக்கிய வகைகளில் ஒன்றிரண்டு ஒவ்வோர் இதழிலும் இடம்பெறச் செய்ய வேண்டும் என்பது என் மூன்றாவது ஆலோசனை.

4. எப்படித் தமிழ்த்திரைப்படங்களை யும், உலகத் திரைப்படங்களையும் அறிமுகப்பத்துகின்றோமோ அதேபோலத் தமிழ் இலக்கியங்களையும் (முற்கால இலக்கியங்கள் மற்றும் சமகால இலக்கியங்களை) உலக இலக்கியங்களையும் அறிமுகமும், திறனாய்வும் செய்யும் கட்டுரைக-ளைத் தொடர்ந்து இடம்பெறச் செய்ய வேண்டும் என்பது என் நான்காவது ஆலோசனை.

இந்த ஆலோசனைகளைக் குறித்துச் சிந்தித்துப்பாருங்கள். இயன்றால் செயற்படுத்துங்கள்.

இந்தியாவிலிருந்து, என் மகன் வீட்டிற்கு வந்திருக்கும் என்னையும் அழைத்து, உங்களோடு சில பல கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பினை எனக்குத் தந்த நல்ல உள்ளங்களுக்கு நன்றி கூறி என் திறனாய்வை நிறைவு செய்கின்றேன்.

# ஒரு குயிலின் சோகம்



கூவி அழுதாலும் காக்க யாரும் இல்லையோ?

பல்லவி
கூகூகூ கூகூகூ என்று கூவிப் பார்க்கின்றேன்
கூவியழைத்த குரல்கேட்டும் காக்க
யாருமில்லையே!

அனுபல்லவி:
சொந்தமென்று சொல்லவாழ்வில் பந்தம் யாரும்
இல்லையா?
சோகக்கதை கேட்டறிந்து சுகம்தரவும் மாட்டீரா?

சரணம்:
இதுவரை நான் வாழ்ந்தவீடு எந்தனது இல்லையாம்
இரைதேடித் தந்தவரும் எந்தன் சொந்தமில்லையாம்
ஈவிரக்கம் இல்லாமல் என்னைக் கலைத்துக் கொத்தினால்
பாவிநானும் எங்கு போவேன் பரிவு காட்டமாட்டீரோ?

கூகூகூ கூகூகூ ....................................

எந்தன்கூட வாழ்ந்தவர்கள் சொந்தக் கூட்டில் வாழ்கையில்
துன்பச்சுமை சுமந்து நானும் தூரதேசம் அலைவதா?
சொந்தவீட்டில் வாழுமாப்போல் எந்தவீடும் அமையுமா?
சோகக்கதை கூவிக்கூறி சுகம் ஏதும் இல்லையே?

கூகூகூ கூகூகூ.................................................................

வாழும் காலம் சொற்பந்தானே வாழவேண்டுமல்லவா?
நாளும்பொழுதும் துன்பநிலை காண்பதுமோர் வாழ்க்கையா?
கூவிக்கூவி அழைத்தாலும் கொடுமை போக்க வாரீரோ?
பாவியெந்தன் சொந்தக் குரலில் பாடுவது குற்றமோ?

- ஆக்கம் அருட்கவி
arudkavi@gmail.com



# BASEMENT RENT

**FINCH & PHARMACY**
1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to ttc, school, Tamil stores, mall. Avail. Immediately. Non smokers preferred.
தொடர்புகளுக்கு: 416.759.2030

**MORNINGSIDE & OLD FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. Anytime.
416.286.8450/416.459.3006

**MORRISH RD. & ELLESMERE**
3 Bedroom bsmt apt. for rent. Sep. entrance. Parking, cable & laundry. Close to University, TTC & school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.617.4671

**ORTON PARK & LAWRENCE**
ஒரு படுக்கையறை கொண்ட bsmt வாடகைக்கு உண்டு. Kitchen, washroom, sep. entrance. Close to TTC, shopping, school. Avail. immediately. பெண்கள் or Young couples விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.320.6156

**BRIMLEY & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, 1 full bath, kitchen, high speed internet, cable. Close to TTC.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.604.0690

**TAPSCOTT & McLEVIN**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, laundry. Behind Malvern Mall. Doctors & TTC near by. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.754.8947

**BELLAMY & LAWRENCE**
Bsmt for rent. Sep.entrance, parking, laundry, cable. Close to TTC, mall. Avail. February 1, 2010.
தொடர்புகளுக்கு: 416.431.9567

**VICTORIA PARK & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, cable. Close to TTC, mall, shopping. Avail. Anytime. தொடர்புகளுக்கு:
416.754.0823 / 416.291.3153
( Please leave the message)

**MEDDLEFIELD & STEELES**
1 Bedroom bsmt apt. for rent. Sep.entrance, parking, laundry, cable. Close to TTC, YRT. Couple, old people or ladies preferred. Avail. March 01, 2010.
தொடர்புகளுக்கு: 416.399.5192

**MARKHAM & STEELES**
2 Bedroom bsmt apt. for rent. Sep.entrance. Close to TTC, YRT, Walmart, Nofrills. school. Very convenient location. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.566.2601 After 6:00pm

**BIRCHMOUNT & SHEPPARD**
1 Bedroom bsmt apt. for rent. Sep.entrance, parking, laundry, cable. Close to TTC, mall. Avail. February 01, 2010.
தொடர்புகளுக்கு: 416.873.0549

**EGLINTON & MIDLAND**
**DANFORTH RD. & MIDLAND**
2 Bedroom bsmt. apartment for rent. Sep. entrance. Living room, full bath, cable, parking, utilities included. 24 hours TTC near to subway. No smoke. No pets.
Avail. Feb. 01, 2010.
தொடர்புகளுக்கு: 647.342.5075

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom walkout bsmt apt. for rent. Sep.entrance, parking, laundry, cable, internet, utilities. Close to TTC, mall, library, U.F.T Scar., centennial college Tamil stores. Students, Small families, working ladies preferred. Avail.immediately.
416.830.0643/416.533.0768

**MCCOWAN & 14TH AVE. IN MARKHAM**
2 Bedroom bsmt apt. for rent. Sep.entrance, laundry. Close to markville mall, 407hwy, TTC, both catholic & public schools. Avail.immediately. தொடர்புகளுக்கு:
416.571.7529 / ponna24@gmail.com

**WARDEN & FINCH**
1 Bedroom bsmt for rent. Parking, laundry, cable. Close to TTC, bakery, mall, sneha college. Ladies preferred.
Avail. February 03, 2010.
தொடர்புகளுக்கு: 416.894.1187

**KENNEDY & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, cable. Close to kennedy subway, plaza. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.759.9859

**SCAR. GOLF CLUB & ELLSEMERE**
1 Large bedroom bsmt for rent. Living room, kitchen, washroom, sep. entrance, parking, laundry. Avail. immediately. Close to school, ttc & all amenities.
416.431.9428 / 416.878.7231

**MIDDLEFIELD & DENISON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, cable & laundry. Attached washroom. Meals if required. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately.
905.471.4777 / 416.505.9086

**NEILSON & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to TTC, mall, school, hwy 401. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.866.9464

**BRIMLEY & MCNICOLL**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.866.9464

**KENNEDY & FINCH**
2 Bedroom bsmt for rent. Parking, laundry, cable. Close to TTC, mall, school, temple. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.291.2796

**WARDEN & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, kitchen, living room. Close to TTC, hwy (401, DVP). பெண்கள், முதியோர், couple விரும்பத்தக்கது
தொடர்புகளுக்கு: 416.997.6575

**MAVIS & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.602.7873

**MEADOWVALE & SHEPPARD**
Brand new 2 bedroom bsmt for rent. Matheny home builders. Sep. entrance, parking, laundry. Close to TTC, hwy 401, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.287.0876

# BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
**ROUGH RIVER**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry, cable, stove, fridge, kitchen. Close to TTC, mall. Single couple or students preferred. Avail. immediately. ***416.629.4013 (Call after 6.00pm) /416.457.4921 / 416.286.4664***

# BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD** **Half Month Free**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry & other facilities. Students, small family, working ladies preferred. No smoking & No pets. Avail. immediately.
***416.724.9493 / 647.290.9635***

**MARKHAM & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry, cable. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.566.1918

**BELLAMY & BRIMORTON DR.**
3 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to TTC. Avail. Anytime. அறைகள் தனித்தனியாகவும் வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு:
416.938.6725 / 416.807.6977

**NEILSON & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, kitchen, laundry. Close to TTC, Malvern mall, school. No smoking. Avail. immediately.
416.724.8727 / 647.280.6163

**BELLAMY & ELLESMERE**
2 bedroom BSMT Apt. for rent. Sep. entrance. Parking, washer, dryer. Avail. February 01, 2010. Close to School,ttc, subway, scarborough centre, stores....
தொடர்புகளுக்கு: 416.289.6076

**LAWRENCE & MORNINGSIDE**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, school, mall & library. Avail.immediately
416.724.7595/416.998.2760

**MARKHAM & PAINTED POST DR.**
2 bedroom bsmt for rent. Sep. entrance, kitchen, laundry, cable. Close to school, mall. Avail. immediately. Single family preferred.
தொடர்புகளுக்கு: 416.400.8125

**MARKHAM & STEELES**
1 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Wal-Mart in front. Close to doctors, plaza, school & TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.427.2521

**TAPSCOTT &FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, mall, school. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.829.9797

***MORNINGSIDE/LAWRENCE/KINGSTON***
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. High ceiling. Parking, internet, laundry, utilities inclu. Couple or small family preferred. Very close to TTC - 3 bus routes, shopping mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.283.2124

**MIDDLEFIELD & DENISON**
1 Bedroom walkout bsmt for rent. Parking, cable, laundry. Close to TTC, mall.
தொடர்புகளுக்கு: 416.727.7550

**MARKHAM & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, library. Avail. January 01, 2010.
416.439.4054 / 416.899.4835

**MARKHAM & MCLEVIN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, mall, school. Avail. Anytime.
416.293.8327 / 647.308.8327

**MCCOWAN & 14TH AVE.**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.315.5375

**EGLINTON & MIDLAND**
2 Bedroom walk-out bsmt. for rent. Parking, cable & laundry. Close to kennedy subway. All facilities close by. Avail. immediately.
647.886.3920 / 416.759.9675

**MORNINGSIDE & STAINS**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.509.0102

**MORNINGSIDE & SEWELLS**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. February 01, 2010.
416.282.8585 / 416.801.8813

**WARDEN & LAWRENCE**
New 2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, cable & laundry. TV cable & High speed internet free. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.258.2138

**BRIMELY & DENISON**
2 Bedroom bsmt for rent. Parking, cable, laundry. Close to TTC, mall, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.604.0155

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com***

மேலும் பக்கங்கம் 23, 25

## BASEMETNT FOR RENT

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc. தொடர்புகளுக்கு: 416.551.8379

**McCOWAN & DENISON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Washer, dryer, internet, cable & parking. Close to mall, TTC, tamil stores & hospital. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.554.2496

**MORNINGSIDE & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, shopping mall & other all facilities. Avail. Anytime.
416.902.1758 / 416.724.4752

## CONDO FOR RENT

**MARKHAM & SHEPPARD**
2 Bedroom condo. for rent. 3rd floor. New building. Washer & dryer, parking, gas, water, heater included. Avail. immediately.
416.904.0842 / 416.831.2550
416.728.7580

## HOUSE FOR RENT

**MEDDLEFIELD & ELSON**
4 Bedroom house for rent. 2 Full washroom, indoor & outdoor parking, laundry. Close to TTC, school, mall & restaurants.
தொடர்புகளுக்கு: 647.822.7722

**NEILSON & FINCH**
3 Bedroom town house for rent. Parking, garage, laundry. Rent 1200 + utilities, including walkout bsmt . Close to TTC, Melvern mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.892.4474

**MORNINGSIDE & MCLEVIN**
2 Bedroom house or 1 bedroom bsmt available. Close to stores, schools, TTC. Avail. immediately. 416.286.3544 / 647.836.3440 ( Leave Mesage)

**PHARMACY & SHEPPARD**
3 Bedroom house for rent. Parking, laundry, weelchair Facilities. Close to TTC, mall, school, park. Avail. immediately.
416.756.1050/416.904.5904

**NEILSON & SHEPPARD**
3 Bedroom Main floor with 2 bedroom bsmt house for rent. 2 full washroom, garage parking. Close to bus, mall, library, school, etc. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.283.8275

**MORNINGSIDE & SHEPPARD**
4 Bedroom house for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.575.5055

**NEILSON & MCLEVIN**
4 Bedroom house for rent. Main floor 2½ washrooms, 4 parking. Close to TTC, school, mall etc. Avail. January 01, 2010. அறைகள் தனித்தனியாகவும் வாடகைக்கு கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 416.724.7603

மேலும் பக்கங்கம் 22, 25

## ROOM RENT

**MARKHAM & LAWRENCE**
1 Bedroom for rent. Sep.entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. January 15, 2010.
416.430.0097/647.280.7097

**TAPSCOTT & FINCH**
3 அறை கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Close to TTC, mall. Avail. Anytime. ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.727.7550

**McLEVIN & TAPSCOTT**
1 Master bedroom for rent. Attached washroom. Parking & cable.Close to TTC, mall, school. Backyard patio. Avail. immediately.
292 McLevin Avenue.
தொடர்புகளுக்கு: 905.683.5699

**VICTORIAPARK & ELLESMERE**
1 Room for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, hwy 401, DVP, mall, bank. Avail. January 15, 2010.
தொடர்புகளுக்கு: 416.816.3114

**KENNEDY & ELLESMERE**
தனி அறை ஒன்று வாடகைக்கு உண்டு. First floor. Sep. kitchen, washroom. Close to Kennedy road. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.830.5560

**2** நேரச் சாப்பாட்டுடன் (**2 meals)** நாலு அறைகள் கொண்ட **BSMT** இல் ஒரு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. **Free internet.** தொலைபேசி குறைந்த கட்டணத்துடன் செய்துதரப்படும். ***Close to all*** facilities.
**PHARMACY & LAWRENCE**
தொடர்புகளுக்கு: 416.288.0303

**LAWRENCE & BELLAMY**
Main floor இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Everything included. Rent $350. Avail. immediately.
416.289.3459 / 416.433.0491

**MARKHAM & LAWRENCE**
Room available for rent in main floor. Cable inclusive. Close to TTC & plaza. Room $275.
416.439.4076/416.728.0807

**McCOWAN & LAWRENCE**
Room for rent in bsmt. Sep. entrance.Parking. Close to hospital, tamil stores, 2 min. to bus. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.827.5529

**MCCOWAN & LAWERENCE**
1 Bedroom bsmt இல் வாடகைக்கு உண்டு. Sep. entrance, Parking, laundry, cable. Close to TTC, mall, hospital, bank. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.439.1373

**TAUNTON & BROCK STREET**
3 அறைகள் வாடகைக்கு உண்டு. Close to mall, TTC, shopping, Doctor Office. Old people Or Working ladies preferred.
வயோதிபர்களை பராமரிக்கப்படும்.
416.990.1887/ 647.863.3993

**MIDLAND & LAWRENCE**
**MARTINGROVE & REXDELE**
1 Room in an Aptartment for rent. Rent $ 400. Close to all facilities.
416.731.2833 / 416.615.0222

**MORNINGSIDE & McLEVIN**
2 அறைகள் உடன் வாடகைக்கு உண்டு. இணைந்த தனி குளியலறை. எல்லா வசதிகளும் அண்மையில் உண்டு. விபரங்களுக்கு:
416.732.6931/416.281.9888

**BRIMELY & EGLINTON**
1 Room in a bsmt for rent. Sep. Entrance. Parking, cable, laundry included.No smoking. Rent $350. தொடர்புகளுக்கு: 416.268.5014

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
416.335.5242 /416.820.1999

**FINCH & WARDEN**
One room for rent. Laundry, internet. Close to TTC, shopping mall. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.938.7510

**MARKHAM & STEELES**
1 Room for rent. Parking, laundry. Close to TTC, walmart, bank. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.951.0034

**MIDDLEFIELD & ELSON**
2 Rooms for rent. Attached washroom. Close to TTC, No Frills, school, tamil stores, Doctor. Avail. immediately. தொடர்புகளுக்கு:
905.471.5340 / 905.209.7359

**NEILSON & FINCH**
அறை உடன் வாடகைக்கு உண்டு. தனி குளியலறை. சமைக்கும் வசதி அல்லது உணவு தரலாம். வயதான பெண்கள் விரும்பத்தக்கது. குறைந்த வாடகை.
தொடர்புகளுக்கு: 416.554.4416

**FINCH & MIDDLEFIELD**
Bsmt இல் 2 அறைகள் தனித்தனியாக வாடகைக்கு உண்டு. Sep. entrance. Close to mall, ஐயப்பன் கோவில். No smoking. Ladies preffered. Avail. immediately.
416.493.0590/647.286.0590

**DANFORTH & EGLINTON**
Shared Room for rent in bsmt. Another room available for a lady in main floor. Close to bus, stores, 5 min. to Kennedy subway. Males only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.201.3111

**BIRCHMOUNT & MCNICOLL**
அறைகள் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் வாடகைக்குக் கொடுக்கப்படும். Attached washroom, Double garage. Close to everything.
Call: 416.335.8055/905.294.2674

## CARS FOR SALE

2002 Honda Accord Coupe - $4,900,
2005 Honda Accord - 2 door, $ 9,800,
2006 Ford fusion $5,900,
2007 Acura CSX, 5 speed $16,900.
தொடர்புகளுக்கு: 416.575.5055

## CARS FOR SALE PRIVATE SALE

1996 Toyota Camry -LE model, Gold colour, good condition, 203 km, new brake, extra winter tire. 1999 Dodge Caravan, one owner, fully loaded, 221 km
தொடர்புகளுக்கு: ***416-270.2677***

**THARANEE ELECTRICAL SERVICES**
அனைத்து மின் இணைப்பு தருத்த வேலைகளுக்கும், கனடிய அரசு அங்கீகாரம் பெற்றவர் மூலம் பாதுகாப்பான முறையில் உங்கள் அனைத்து மின்சார வேலைகளையும் செய்து கொள்ள அழையுங்கள்.
Big or Small Job
Licensed Electrician Bala : 647.284.6141

## CONDO FOR SALE

**MIDDLEFIELD & FINCH**
1+den condo. for sale. 1 Washroom. 3 Years old. Low raise condo. Maintenance fees. For sale immediately.
தொடர்புகளுக்கு: 416.894.1950

## HOUSE FOR SALE

**EGLINTON & DANFORTH NEW TOWN HOUSE**
4 Bedrooms house for sale. 1St owner.
தொடர்புகளுக்கு: 647.201.3111

## TUTION CLASSES

Maths, English, Science, Art & Tamil.
(JK – Gr. 3) Preparation for next grade.
• Homework help • Flexible time.
1 to 1 or group classes.
Call: 905.554.2496

## தமிழ் வகுப்பு

பல வருடகாலம் பட்டறிவுள்ள ஆசிரியையால் தரம் 1 - தரம் 12 வரை உள்ள மாணவர்களுக்கு தமிழ் கற்பிக்கப்படும். உங்கள் பிள்ளைகளும் தமிழில் எழுத வாசிக்க அழையுங்கள். 905.554.2496

## WANTED

Used Toyota Corolla 1993 - 1997 தேவை. AC, Airbag.
Raj - 647.269.6552

## SPACE FOR RENT

**KENNEDY & FINCH**
Commercial Place for rent. Out of 6 rooms 4 rooms avail. for rent. Close to TTC, all facilities. Close by immediately.
contact: 416.288.8701

## SCHOOL TRANSPORTATION

***BRIMLEY & HUNTINGWOOD***
பகுதியில் அமைந்துள்ள பாடசாலைக்கு உங்கள் பிள்ளைகளைக் கூட்டிவர வேண்டுமா?
தொடர்புகளுக்கு: 416.274.9726

**ஆடைகள் விற்பனைக்கு**
**2010க்கான புதிய வரவுகள்**
நவீன Design wedding sarees, heavy work sarees, calcutta designer sarees, hand work banarasi sarees, masakali hand work pattiyala, fancy hand work choli set. என பல வகையான தெரிவுகள். ஒரு முறை நேரில் வந்து பார்த்தால் புரியும்.
416.400.7398/905.201.6791

## JOB JOB JOB

***MARKHAM & STEELES***
பகுதியில் அமைந்திருக்கும் முடி திருத்தும் நிலையத்திற்கு வேலைக்கு ஆள் தேவை. நியாயமான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 416.879.1476

**BUS DRIVERS WANTED**
School bus drivers wanted.
தொடர்புகளுக்கு: 416.609.2542

# The Pope's Toilet

## தூறல்

**வானரன்**

எங்களது வாழ்க்கையில் பல எல்லைகளை கடந்துள்ளோம். எமக்கருகில் உள்ள கனடா-அமெரிக்க எல்லையை பல தடவைகள் கடந்துள்ளோம். ஒவ்வொரு தடவை கடக்கும் பொழுதும் பல வித்தியாசமான அனுபவங்கள், பல கதைகள் உண்டு. அவ்வாறே பல எல்லைகளை நாம் கடந்திருப்போம். மெக்சிக்கோ - அமெரிக்க எல்லை, இந்தியா - நேபாள எல்லை, ஐரோப்பிய நாட்டு எல்லைகள் என பல எல்லைகளை கடந்த அனுபவங்கள் உண்டு. இந்திய - நேபாள எல்லையை சைக்கிள் ரிக்சாவில் கடக்கலாம். ஒரு தடவை போட் எரி எல்லையில் ஒருவர் சைக்கிளில் கடப்பதை கடந்ததை கண்டுள்ளேன்.



இவ்வாறான ஒரு எல்லைதான் பிரேசில் - உருகுவே எல்லை. இதனருகில் உள்ள ஊரின் பெயர் மெலோ (Melo). மெலோ உருகுவே நாட்டில் உள்ள ஊர். உருகுவே பெருமளவு ஐரோப்பியரைக் கொண்ட லத்தீன் அமெரிக்காவின் இரண்டாவது சிறிய நாடு. லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஊழல் குறைந்த நாடு. நீண்ட காலம் இராணுவ ஆட்சியில் இருந்த நாடு. விவசாயத்தை பிர-தானமாக கொண்ட நாடு. உருகுவே வெளிநாட்டு பொருட்களுக்கு தடை விதித்தது. இதன் காரணமாக பெருமளவு பொருட்கள் பிரேசிலில் இருந்து கடத்திவரப்படுகின்றன. இந்த மெலோவிற்கு ஒரு நாள் பெரும் அதிர்ச்சி. போப்பாண்டவர் இங்கு வரப்போகின்றார் என்பதே. அந்த மக்களுக்கு என்ன செய்வதே என்றே தெரியவில்லை. குழம்பியிருந்தார்கள்.

அவ் ஊர் மக்களில் சில ஆண்கள் பிரேசில் எல்லையை சைக்கிளில் கடந்து வெளிநாட்டு பொருட்களை கொண்டு வந்து மெலோ வியாபாரிகளுக்கு கொடுப்பார்கள். சுமார் 60 கிலோ மீட்டர்களை ஒவ்வொரு தடவையும் இவர்கள் கடக்க வேண்டும். அப்படி கடந்து பொருட்களை வீதி வழியாக கொண்டு வரமுடியாது. எல்லையில் இராணுவ சோதனை முகாமுண்டு. வயல் வழியாகத்தான் கொண்டு வரவேண்டும். அப்படிக் கொண்டுவரும் பொழுது, வழமைபோல் கடத்தல் காரர்களது எதிரி சுங்க இலாகா அதிகாரி மறித்து பல பொருட்களை எடுத்து விடுவார். சில சமயங்களில் இதனால் வியாபாரிகளுக்கு இலவசமாக ஒரு பயணத்தை இந்த கடத்தல்காரர்கள் செல்ல வேண்டி வரும்.

இந்த கடத்தல்காரர்களில் ஒருவன் பீற்றோ. இவன் தனது மனைவி, மகளுடன் ஒரு சிறு வீட்டில் வாழ்ந்து வருகின்றான். எந்த பெரிய ஆசையோ, எதிர்பார்ப்புகளோ இன்றி மிகவும் அமைதியாக கழிகின்றது இவர்களது வாழ்க்கை. இவர்களிடம் ஒரு சிறு தொலைக்காட்சிப் பெட்டி உண்டு. இவ் ஊர் மக்கள் பெரும்பாலும் வானொலியையே தங்கியுள்ளார்கள். பீற்றோவின் மகளுக்கு வானொலி அறிவிப்பாளராக வரவேண்டும் என்ற ஆசை. இதற்காக அவ்வப்போது மைக்முன்னால் நிற்பது போல் நினைத்துக் கொண்டு பயிற்சி எடுப்பாள்.

போப்பாண்டவர் வருகின்றார் என்ற அறிவ-ித்தலுடன் ஊடகங்கள் நிறுத்தவில்லை. சுமார் இருபதினாயிரம் பேர் மட்டில் பிரேசில், மற்றும் சுற்றுப்புற நகரங்களில் இருந்து வருவார்கள் எனக் கூறியது. ஊர் மக்கள் இத்தருணத்தை எப்படி சாதகமாக மாற்றுவது என யோசிக்கத் தொடங்கினார்கள். இருபதினாயிரம் பேருக்கு என்ன என்ன தேவை என பட்டியலிட்டு ஆயத்தங்களை மேற்கொள்ளத் தொடங்கினார்கள். தேநீர், கோப்பி, பலகாரங்கள் (கொட் டோக், பேகர்) டோனட், நினைவுப் பொருட்கள், போப்பாண்டவரின் உருவப் படங்கள் என தயாரிப்புக்கள் அமர்க்களப் படத்தொடங்கின. பீற்றோவின் குடும்பமும் இதனை சாதகமாக்க யோசனைகளில் ஈடுபட்டது. பீற்றோவின் மனைவி யேசுவின் உருவ சிலை அடங்கிய நினைவுச் சின்னத்தை விற்கலாம் என யோசனை கூறினார். இதனை பீற்றோ ஏற்கவில்லை. இறுதியில் பீற்றோவிற்கு ஒரு வித்தியாமான யோசனை தோன்றியது. இங்கு வருபவர்கள் மலசலம் கழிக்க சரியான இடமில்லலை. எனவே ஒரு மலசல கூடத்தை கட்டினால் என்ன என்பதே அது. ஆனால் இதற்கு பணம் தேவை. ஒரேயொரு வழி கடத்தலை கூட்டுவதே. அதாவது ஒரு நாளைக்கு இரண்டு தடவை செல்வது. ஒரு நாளைக்கு சுமார் 100 கி. மீற்றர் சைக்கிள் மிதிக்க வேண்டும்.

பீற்றோ தனது முயற்சியை தொடங்கி விட்டான். கடத்தல்காரர்களில் பீற்றோவிற்கு ஒரு பிரச்சினையும் உண்டு. ஒரு தடவை ஒரு வியாபாரி சொன்ன பொருட்களை கொண்டு வரும் பொழுது, இராணுவ சோதனைச் சாவ-டியில் சோதனை இட்ட பொழுது மாபையினுள் பற்றிரி இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அதற்கு பின் சுங்க அதிகாரிகள் பீற்றோ மேல் ஒரு கண்வைத்திருந்தார்கள். இதற்கிடையில் ஒரு சுங்க அதிகாரி ஒருவரிடமிருந்து கடன் பெற்றான். இது மலசல கூடம் கட்டவும், அவனது கனவான மோட்டார் சைக்கிளுக்கு முற்பணம் கட்டவும் காணுமாக இருந்தது. இதற்கு மாற்றாக சுங்க அதிகாரிக்கு பல கடத்தல் பொருட்களை கொண்டுவந்து கொடுக்க வேண்டும். பீற்றோவின் மனைவி, பீற்றோவிற்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்தார். மகளுக்கு தகப்பன் கடத்தல் செய்வதே அவமானம். இதனால் மகளுக்கும், தந்தைக்குமிடையில் ஒரு அகப்போரே நடந்து கொண்டிருந்தது. தனது ஊடகவியல் படிப்பிற்கு பல்கலைக்கழகம் செல்ல பீற்றோ தடைசொல்வதுடன், பணமில்லை என்பதும் மகளுக்கு அவமானமாகவும், கோபமாகவுமாக இருந்தது.

பீற்றோ மட்டுமல்ல அவ்வூர் மக்கள் அனைவரும் தம் சக்தியை மீறி முதலிட்டு மூலப் பொருட்களை வாங்கி தயாரிப்புக்களில் ஈடுபடத் தொடங்கினார்கள். பீற்றோ தகரத்தில் அமைப்பதற்கு பதிலாக, சிமெண்டில் கட்டத் தொடங்கி விட்டான். இதற்காக இவனது கடத்தல் பயணங்கள் அதிகரிக்கத் தொடங்கின. நாள் நெருங்க, நெருங்க பதட்டமும், எதிர்பார்ப்பும் அதி-கரிக்கத் தொடங்கியது. மலசல கூடத்திற்கு கதவு மட்டும் தான் போடவேண்டும். அதனைக் கூட மரத்தில் கவர்ச்சியாக போட பீற்றோ முடிவெடுத்தான். மனைவி, மகளை எப்படி வருவோரிடம் கதைக்க வேண்டும் என பயிற்சியும் கொடுத்தான். சகல தயாரிப்புக்களும் முடிந்து கதவும் போட்டு தயாராக காத்து நின்றார்கள் மகளும், தாயும்.

அவ்வூரில் பொருட்கள், பட்சணங்கள் குவிந்திருந்தன. பீற்றோ அன்று காலையும் சைக்கிளில் பிரேசில் எல்லையைக் கடந்து கடத்தல் பொருட்களுடன் வரும் பொழுது, இராணுவ சோதனை முகாமில் ஏற்பட்ட தகராறில் சைக்கிள் உடைக்கப்பட்ட விட்டது. மகளும், தாயும் அவ்வூர் மக்களும் இருபதாயிரம் விருந்தினர்களை எதிர்பார்த்து காத்து நின்றார்கள். வீதியெங்கும் கடைகள். வியாபாரிகள் ஆவலுடன் தங்களை தாங்களே உற்சாகப்படுத்தி நின்றார்கள்.

அந்த நாளும் வந்தது. பெருமளவு ஊடகவியலாளர்களும், சிறிதளவு பக்தர்களும் வந்திருந்தார்கள். பல கடைக-ளில் எவருமே காணப்படவில்லை. யேசுவின் உருவம் பொதித்த உருவச் சின்னங்களே பெருமளவு விற்கப்பட்டன. பீற்றோவின் மலசல கூடத்தை எட்டிப்பார்ப்பார்கள் எவருமே இல்லை. பல உணவுப் பொருட்கள் பெருமளவு வீணாகிவிட்டன. மிகுதி நாய்களுக்கும், பூனைகளுக்கும் பன்றிகளுக்குமே வீசப்படும். வீணானவற்றை சாப்பிடுமளவிற்கு அவ்வூரில் மிருகங்கள் இல்லை.

பீற்றோ சைக்கிளுமின்றி மலசல கூட வருமானமுமின்றி எதுவுமற்றவனாகிவிட்டான். அவ்வூர் மக்கள் பலரின் கதியும் அதுவே. பீற்றோ இப்போ நடந்து கடத்தல் பொருட்களை கொண்டுவரத் தொடங்கிவிட்டான்.

இப்படத்தின் இயக்குனர் César Charlone ஏற்கனவே சிற்றி ஒப் கொட் என்ற தொலைக்காட்சி தொடரின் ஒளிப்பதிவாளர்.

பல காட்சிகள் இயற்கை ஒளியில் படமாக்கப்பட்டுள்ளன. பச்சைப் பசேல் என்ற வயல்கள், பச்சையை மீறி வெளிப்படும் வறுமை. மஞ்சள் வெயில் பிரகாச ஒளி வெளிப்படுகின்றது. பெரும்பாலான காட்சிகள் பகலிலேயே படமாக்கப்பட்டுள்ளன. மிகக் குறைந்த செலவில் முக்கியமான ஒளிக் கருவியாக சூரியனையே கொண்டு படமாக்கப்பட்டுள்ள முறை குறிப்பிடத்தக்கது.

திரைக்கதையாசிரியர்கள் தமது நோக்கத்திலிருந்து சற்றும் மாறாமல் இறுதி வரை கதையை நகர்த்துகின்றார்கள். கதாசிரியர்கள் மத்தியில் எழுந்துள்ள உண்மை சார் கேள்விகளும், மனச்சாட்சியின் வெளிப்பாடும் பாத்திரங்களில் பதிவாகியுள்ளன. பீற்றோவும், அவனது மகளும் சமூகத்தை வெவ்வேறு கோணங்களில் பார்க்கின்றார்கள். அவர்களது உணர்வுகள், சமூகம் மீதான பார்வைகள், கோபங்கள் இயல்பாக வெளிப்படுகின்றன. இறுதியில் வறுமை காரணமாக ஒரே போட்டில் பயணிக்கின்றனர்.

படத்தின் களம் புதியது. மனிதர்கள் எம்முடன் அன்றாடம் சந்திக்கும் மனிதர்கள். இவர்களது இயல்பு மாறாமல் பதிவாக்கியுள்ளார்கள். பீற்றோவுக்கும், மனைவிக்குமான உறவு, பிற்றோவுக்கும் மகளுக்குமான காட்சிகள் பெரும்பாலும் வசனமற்று, இயல்பாக காட்சியமைக்கப்பட்டுள்ளது. கவித்துவமான காட்சிகள். இது லத்தீன் அமெரிக்க படங்களுக்குரிய தனிச் சிறப்பு.

ஊடகங்களின் அதீத கற்பனையும் அதீத விளம்பரமும் ஒரு சிறு கிராமத்தையே சூறையாடிவிட்டது. 20,000 பேர் என்ற கணிப்பு எந்த அடிப்படையில்? பொறுப்பு வாய்ந்த ஊடகத்தின் பொறுப்பின்மையும் விளம்பர மோகத்தின் எதிர்விளைவையும் இச்சிறு சமூகம் பரிசாகப் பெற்றுள்ளது. தமது வாழ்நாள் முழுவதும் உழைத்து வட்டி கட்ட வேண்டிய நிலையை ஊடகங்கள் ஏற்படுத்திவிட்டன. இங்கு பீற்றோ மட்டுமல்ல தோல்வியாளர். முழுச் சமூகமுமே.

ஒரு சிறு சமூகத்தை சுரண்டும் ஊழல் அதிகாரிகள், அதனைச் சுற்றியுள்ள அரசு ஆகியவற்றை படம் கடுமையாக சாடுகின்றது. இதற்கு யார் காரணம் அரசா? மத நிறுவனமா? என்ற கேள்வி எழுகின்றது.

போப்பாண்டவர் ஒரு ஊருக்கு வரும் பொழுது அவ்வூர் மக்கள் அவரது தரிசனத்தையே தேடி நிற்பார்கள். இங்கு மாறாக இவ்வூர் மக்கள் இதனால் தாங்கள் எவ்வாறு சிறிது பணம் பெறலாம் என நினைக்கின்றார்கள். வறுமையில் வாழபவர்களுக்கு வயிறு முக்கியம். 'எத்தனை முறை தோல்வியடைந்தாலும் தொடர்ந்து வாழ்வுக்காக போராடும் மக்கள்.

தொடர்ச்சி 25ஆம் பக்கம்

## JOB AVAILABLE

Travel Agency நிறுவனத்தில் தொழில் புரிவதற்கு ஆள் தேவை. முன் அனுபவம் தேவையில்லை. பயிற்சி வழங்கப்படும். ஆங்கிலம், தமிழ் சரளமாக பேசக்கூடியவர்கள் விரும்பத்தக்கது.

Fax - 416.323.1316

E - mail - Mansukhvilla@hotmail.com.

## Commercial Basement For Rent

### MARKHAM & ELLESMERE

Smart Baby's Diaper Factory Outlet இன் நில அறை வாடகைக்கு உண்டு. Very Busy area.

தொடர்புகளுக்கு: **416.499.8517 / 647.321.7575**

## வீடு விற்பனைக்கு

நல்லூர், யாழ்ப்பாணத்தில் 4.5 பரப்புக்கொண்ட தென்னைமரங்கள் உள்ள காணி விற்பனைக்கு உண்டு. நல்லூர் கோயிலிற்கு ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இந்நிலம் பழைய கல்வித் திணைக்களத்திற்கு (Old Education Department) முன்பாக உள்ளது.

மேலதிக விவரங்களுக்கு: **416.315.9397**

## Room For Rent

தனிப்பட்டவர் ஆண், பெண், தங்குவதற்கான Room உண்டு. Norht York, Etobicoke பகுதிகளில் சகல வசதிகளும் கொண்டது. Bus Stopற்கு முன்னால் Shopping mallக்கு அருகில்.

தொடர்புகளுக்கு: 416.744.4357

## மணமகன் தேவை

யாழ். இந்து மதத்தைச் சேர்ந்த நன்கு படித்து பட்டதாரியான( M.A பொது நிர்வாகம்) தற்பொழுது நூலகராக பணிபுரியும் 1981 ஆம் ஆண்டு பிறந்த செவ்வாய் குற்றம் உள்ள அழகிய பெண்ணுக்கு தகுந்த நல்ல வரனை பெற்றோர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தேடுகின்றார்கள். (வெளிநாடு விரும்பத்தக்கது)

உள்நாட்டில் - 011.94.021.3214223

வெளிநாட்டில் - 416.710.2686


மேலும் பக்கங்கம் 22, 23


வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## வீடு வாடகைக்கு

இந்தியா தமிழ் நாடு சென்னையில் மிகவும் வசதியான 2 Bedroom கொண்ட furnished apt. வாடகைக்கு உண்டு. கனடாவில் இருந்து செல்பவர்கள் தங்குவதற்கான சகல வசதிகளும் கொண்டது. தண்ணீர் பிரச்சனையல்ல. மிகவும் பாதுகாப்பான இடம்.

தொடர்புகளுக்கு: 416.744.4357

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தில் 29.11.1969 ஆம் ஆண்டு பிறந்த கொழும்பில் பொறியியலாளராக பணிபுரியும் ஆணுக்கு Canada Or America வில் Sponsor செய்யக்கூடிய மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு: 416.759.3597

## மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட யாழ். பல்கலைகழகத்தில் Physical Science 4th year இல் படித்துக் கொண்டிருக்கும் 21.08.1984 ஆம் ஆண்டில் பிறந்த பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடுகின்றோம். Sponsor செய்யக் கூடிய வரனாக இருக்க வேண்டும்.

தொடர்புகளுக்கு: 416.284.8757

## JOB JOB JOB



Roti செய்யத் தெரிந்தவர்கள் முழுநேர வேலைக்குத் தேவை.

**416.799.4528 /416.276.8168 / 289.400.3434**

Cook position also available.


# The Pope' s ...

சைக்கிளை இழந்த போதும். நடந்து கடத்தலை தொடங்கும் பீற்றோ. இங்கு சட்ட விரோதம் என்பது அவர்களது வாழ்வு. பார்வையாளர்களுக்கும் பீற்றோ குழவினர் அவ்வாறு தெரியவில்லை. மாறாக அங்கு செயல்படும் அதிகாரிகளே சட்டவிரோதிகளாக

இப் படம் உண்மைச் சம்பவங்களைக் கொண்டது. போப்பாண்டவர் 1998ல் லத்தீன் அமெரிக்க சுற்றுப் பயணத்தின் போதே இது நடைபெற்றது. இதனை பார்த்த பின்னர் சீனாவில் இருந்து பெருமளவு சுற்றுலாப் பயணிகள் தைவானுக்கு வருவார்கள் என்ற சீன அரசாங்கத்தின் அறிவிப்பை தைவான் பெரிதாக எடுக்கவில்லை. இப்படத்தின் எதிர்விளைவு இது என தைவான் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.



தெரிகின்றனர். லத்தீன் அமெரிக்க படங்களின் சிறப்பே இந்த யதார்த்தமே.

நிலம் உண்டு. வளம் உண்டு. வறுமையும், ஊழலும் எங்கிருந்து வருகின்றன? என்ற கேள்வி இப்படத்தைப் பார்க்கும் பொழுது எழுகின்றது. இவ் ஊர் மக்களின் வில்லனாக போப்பாண்டவர் வருகை அமைந்துவிட்டது. இப் படம் ஒஸ்கார் பட்டியலில் இடம் பெறாமைக்கு காரணம் படத்தின் தலைப்பு. மேற்கத்தியம் தமது வாழ்வு முறை என எதிர்பார்க்கும் அமைதியும், நேர் கோட்டு வாழ்வு முறைக்கும் எதிரான திரைப்படங்கள் நிராகரிக்கப்படுகின்றன.

Cast: César Troncoso, Mario Silva, Virginia Méndez and Virginia Ruiz
Directors/Screenwriters: Enrique Fernández and César Charlone

பிற்குறிப்பு
உருகுவே ஒரு சில படங்களையே அவ்வப்போது தயாரிக்கின்றது. ஒவ்வொரு படமும் வித்தியசமானவை. உலக திரைப்பட விமர்சகர்களை கவர்ந்துள்ளன.

இப்படத்தை காலம் செல்வம் '416-712-0372' த்திடமும், மார்க்கம் நூலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.


## Tutoring

# 416 997 2384

(Location: Scarborough)

High School: Physics, Chemistry, Math (Data Management, Calculus, Advanced Functions)

College (all Years): Math, Physics, Chemistry, & Engineering Subjects

University (1st Year): Math, Physics, Chemistry, & Engineering Subjects

Coaching: PPE Exam for Professional Engineers Ontario (PEO), PPE for Ontario Association of Technicians and Technologists (OACETT)

## REAL ESTATE வகுப்புகள்

றொறொன்ரோவில் இலவச ஆதனவியல் (***Real Estate***) வகுப்பு நடைபெறுகின்றது.

தொடர்புகளுக்கு: ***Vanessa - 416.321.6969***



# ரஜினிகாந்த்: ஒன்றிலிருந்து அறுபது வரை

சூப்பர் ஸ்டாரு யாருன்னு கேட்டால், சின்னக் குழந்தையும் சொல்லும்! மட்டுமல்ல, கைகளை வீசி ஸ்டைலாக நடக்கவும் செய்யும். ஆம், திக்கெட்டும் தமிழர்களுக்கு சூப்பர் ஸ்டார் என்றால், அது ரஜினிகாந்த்தான். பேருந்துகளில் டிக்கெட் கிழித்துக் கொடுத்த இவரைப் பார்க்க, இன்று திரையரங்குகளில் டிக்கெட் வாங்க அலைமோதுகிறார்கள் மக்கள். அவர்களுக்கு, 'ரஜினி' என்பது மூன்றெழுத்தில் மூடிக்கிடக்கும் மகத்துவம். தமிழர்களின் இந்த 'அன்புள்ள ரஜினிகாந்த்'துக்கு இப்போது அறுபது வயது. இந்த அறுபது வருட ரஜினி வாழ்க்கை, ஒரு திறந்த புத்தகம். அதிலிருந்து அறுபது விஷயங்கள்.



- பிலிம் நியூஸ் கிருஷ்ணன் -

1. ரஜினிகாந்தின் இயற்பெயர் சிவாஜிராவ். அதை சினிமாவுக்காக ரஜினிகாந்த் என்று மாற்றி வைத்தவர் இயக்குநர் கே.பாலசந்தர். ரஜினி, தமிழ் சினிமா உலகிற்கு 1975ஆம் ஆண்டு பாலச்சந்தரின் 'அபூர்வ ராகங்கள்' திரைப்படம் மூலம் அறிமுகமானார். அந்தப் படம் 1975ஆம் ஆண்டில் சிறந்த மாநில மொழி திரைப்படத்துக்கான தேசிய விருதைப் பெற்றது. 'இந்த படத்தில் அறிமுகமாகும் ரஜினிகாந்திடம் நல்ல எதிர்காலத்தை எதிர்பார்க்கலாம்' என்று 'அபூர்வ ராகங்கள்' வெளியாவதற்கு முன்பு அளித்த பேட்டியில் இயக்குநர் கே.பாலசந்தர் கூறியிருக்கிறார்.

2. ரஜினிகாந்தின் தந்தை பெயர் ரானோஜிராவ் கெய்க்வாட், தாயார் பெயர் ராம்பாய். 'கெய்க்வாட்' என்பது குடும்பப் பெயர். மராட்டிய மாமன்னர் சிவாஜியின் பரம்பரையில் வந்தவர்கள் 'கெய்க்வாட்' என்று அழைக்கப்பட்டார்கள். ரஜினியின் முன்னோர்கள் சிவாஜியின் மெய்க்காப்பாளர்களாக பணிபுரிந்துள்ளனர். இவர்களில் சிலர் கர்நாடக மாநிலத்திற்குக் குடிபெயர்ந்தனர். மற்றும் சிலர், தமிழ்நாட்டில் கிருஷ்ணகிரியில் இருந்து மூன்று கிலோமீட்டர் தூரத்தில் உள்ள நாச்சிக்குப்பம் என்ற கிராமத்தில் குடியேறினர். நாச்சிக்குப்பத்தில் குடியேறியவர்கள் வழிவந்தவர் ரஜினிகாந்த்.

3. ரஜினியின் தந்தை ரானோஜிராவ் கெய்க்வாட் நாச்சிக்குப்பத்தில் பிறந்தவர், தாயார் ராம்பாய்க்கு கோவை மாவட்டத்தில் கொள்ளேகால் அருகில் ஒரு கிராமம். ரானோஜிராவுக்கு இளம் வயதில் கர்நாடக மாநில காவல்துறையில் காவலர் உத்தியோகம் கிடைத்தது. எனவே, குடும்பத்தோடு அவர் கர்நாடகாவில் குடியேறினார்.

4. ரஜினியுடன் உடன்பிறந்தவர்கள் இருவர். சத்திய நாராயணராவ், நாகேஸ்வரராவ் என்ற இரு அண்ணன்கள் மற்றும் அஸ்வத் பாலுபாய் என்ற அக்காள் ஆகியோருக்குப் பிறகு நான்காவதாக பிறந்தவர் ரஜினிகாந்த். 1950ஆம் ஆண்டு டிசம்பர் 12ஆம் தேதி இரவு 11.45 மணிக்கு ரஜினிகாந்த் பிறந்தார். திருவோணம் நட்சத்திரம், மகர ராசி. ரஜினிகாந்துக்கு ஒன்பது வயது இருக்கும் போது, அவரது தாயார் ராம்பாய் காலமானார்.

5. கர்நாடகத்தில் பிறந்து வளர்ந்தாலும் ரஜினிகாந்தின் தாய்மொழி மராத்தி தான். குழந்தையாக இருக்கும் போதே துறுதுறுப்பும் புத்திசாலித்தனமும் ரஜினியிடம் இருந்திருக்கிறது. ஐந்தாவது வயதில் பசவன்குடியில் உள்ள பிரிமியர் மாடல் ஸ்கூல் என்ற பள்ளியில் ரஜினி சேர்க்கப்பட்டார். பள்ளி ஆவணங்களில் இருந்து, படிப்பிலும் விளையாட்டிலும் கெட்டிக்காரராக ரஜினி விளங்கியிருக்கிறார் என்று தெரிகிறது.

6. சென்னை திரைப்படக் கல்லூரியில் ரஜினி படித்துக் கொண்டிருந்தபோது, கல்விக் கட்டணம் கட்ட முடியாத பல தருணங்கள் இருந்திருக்கிறது. அப்போதெல்லாம் கல்லூரி முதல்வர் ராஜாராம்தாஸே பணத்தைக் கட்டினாராம்.

7. ரஜினிகாந்த் முதன் முதலில் பார்த்த வேலை, ஆபிஸ் பியூன் வேலை. முதல் சம்பளம், அறுபது ரூபாய். முதல் சம்பளத்தில் பிரியமாக வாங்கிய பொருள், சிகரெட் பாக்கெட். 'அபூர்வ ராகங்கள்' படத்தில் ரஜினி வாங்கிய முதல் சினிமா சம்பளம் 500 ரூபாய். சினிமாவில் பிரபலமடைந்த பின்னால் ரஜினி முதலில் வாங்கியது, ஃபியட் கார். எண்: டி.எம்.யு. 5004.

8. வில்லனாக அல்லாமல் ரஜினி முதன் முதலாக குணச்சித்திர வேடத்தில் நடித்த படம் 'கவிக்குயில்.' வில்லனாக திரையுலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருவர், தொடர்ந்து வில்லனாகத்தான் இருக்க முடியும் என்ற தமிழ் சினிமா வழக்கத்தை முதலில் உடைத்தவர் ரஜினிகாந்துதான்.

9. நகைகள் அணிவது ரஜினிக்கு பிடிக்காது, மோதிரங்கள் அணிவது ராசிக்காக மட்டும்தான். தனது மனம் கவர்ந்தவர்களுக்கு பரிசு கொடுப்பதாக இருந்தால் ரஜினியின் தேர்வு தங்கச் சங்கிலி தான்.

10. தன்னைப் பார்க்க வருபவர்கள் மற்றும் ரசிகர்களில் ஏழையானாலும் செல்வந்தர்களானாலும் எழுந்து நின்று வரவேற்பதுதான் ரஜினிகாந்த் சுபாவம். அதேபோன்று விருந்தினர் புறப்படும்போதும் எழுந்து நின்று விடைகொடுப்பார்.

11. ரஜினிகாந்த், வாழ்க்கையில் மறக்காமல் இருக்க விரும்பும் மனிதர், இயக்குநர் கே.பாலசந்தர். 'முள்ளும் மலரும்' திரைப்படத்தைப் பார்த்துவிட்டு தன் குருநாதர் பாலசந்தர் எழுதிய பாராட்டுக் கடிதத்தை ஒரு பொக்கிஷம் போல் இன்னமும் பாதுகாத்து வருகிறார், ரஜினிகாந்த்.

12. இமேஜைப் பற்றிக் கவலைப்படாமல் உள்ளபடியே தோற்றம் தரும் மனத்துணிவு நடிப்புத் துறையில் மிகச் சிலரிடம் மட்டுமே காணக்கிடைக்கும் அபூர்வம். அவர்களில் ரஜினிகாந்தும் ஒருவர். தனக்குத்தானே 'இமேஜ்' என்ற வட்டத்தைப் போட்டுக்கொள்ள விரும்பாத ரஜினி வெள்ளைத் தாடி, மீசை, வழுக்கைத் தலையுடன் பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வார்.

13. 'எவன் ஒருவனும் ஒன்றை விரும்பிவிட்டால், அதை அடைவதில் இருந்து அவனை உலகில் எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது.' - இது ரஜினிகாந்த் போயஸ்கார்டன் வீட்டு வரவேற்பறையில் பளிச்சிடும் விவேகானந்தரின் பொன்மொழி.

14. ரஜினியின் திரைப்பட வளர்ச்சி படு வேகமானது. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, வங்காளம், ஆங்கிலம் என ஏழு மொழிகளில் ரஜினி நடித்துள்ளார். ஏ.வி.எம். தயாரித்து ஷங்கர் இயக்கிய 'சிவாஜி' திரைப்படம் ரஜினியின் 100-வது நேரடி தமிழ் திரைப்படம். ரஜினியின் நட்சத்திர அந்தஸ்தையும் அவரது சம்பளத்தையும் உயர்த்திய நிறுவனம் ஏ.வி.எம். எனலாம். 'முரட்டுக்காளை' தொடங்கி 'சிவாஜி' வரை ஏ.வி.எம். தயாரித்த ரஜினி படங்கள் எல்லாம் பெரிய வெற்றி பெற்றவை, வசூலில் அள்ளியவை.

15. திரைப்படங்களில் ரஜினிகாந்தின் பேச்சில், நடையில், சண்டைக் காட்சியில், பாடல் காட்சியில், நகைச்சுவைக் காட்சியில் ஒரு வேகம் இருக்கும். நேரிலும் ரஜினி அப்படித்தான். ரஜினிகாந்த் புகைப்படங்களுக்கு 'போஸ்' கொடுப்பதிலும் ஒரு வேகம் இருக்கும். அவர் வேகத்துக்கு ஈடுகொடுக்கும் புகைப்படக் கலைஞரால், ரஜினியிடம் இருந்து நல்ல 'ஸ்டைலான போஸ்'களைப் பெற முடியும்.

16. படப்பிடிப்புத் தளத்தில் அவ்வப்போது கிடைக்கும் சிறு ஓய்வுகளில் ஒரு குட்டித் தூக்கம் போடுவது ரஜினிகாந்த் வழக்கம். காட்சிகளுக்கு நடுவே, கைக்குட்டையை விரித்து முகத்தின் மீது போட்டு மூடிவிட்டு, பக்கத்தில் புல் தரையில் படுத்து குட்டித் தூக்கம் போடுவார். இந்தக் குட்டித் தூக்கங்களால், அடுத்த காட்சியில் நடிப்பதற்கு தேவையான சுறுசுறுப்பு உடலில் சுரக்கும் என்பது ரஜினி நம்பிக்கை.

17. மிகச் சாதாரண சராசரி மனிதர்களைப் போல் இருக்க வேண்டும், சுதந்திரமாக பொது இடங்களில் நடமாட வேண்டும் என விரும்புவார், ரஜினி. இன்றும் பெங்களூர் சென்றால், தன் பழங்கால நண்பர்களின் வீட்டுக்கு அட்டோவில் ஏறிச்சென்று பார்ப்பார். அதுபோல், தனியாக கார் ஓட்டுவதும் ரஜினிக்கு மிகவும் பிடிக்கும். இப்போதும் சில நேரங்களில் தனியாக காரை எடுத்துக்கொண்டு செல்வார்.

18. எதையும் நேருக்கு நேர் பேசுவதுதான் ரஜினிக்கு பிடிக்கும். உண்டு, இல்லை - இதுதான் ரஜினியின் சுபாவம். சும்மா ஜவ்வு மாதிரி இழுப்பவர்களையும், ஜால்ரா போடுபவர்களையும், வியாபார நோக்கத்தோடு பழகுபவர்களையும், ஒரு முறைக்கு மேல் உதவி என்று வருபவர்களையும்,

தொடர்ச்சி 28ஆம் பக்கம்

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

* INDEPENDENTLY OWNED AND OPERATED
HOMELIFE HIGHER STANDARDS
HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969
145 Traders Blvd # 28, Mississauga -905.712.2666

SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL

# 10TH ANNIVERSARY SPECIAL!



# BREAD MASTER BAKERY

XMAS SPECIAL

## SPECIAL STARTING FROM DECEMBER 01, 2009

**TAKE - OUT AND CATERING FOR ANY OCCASIONS**

SPECIAL
SAMOSA
Vegi.
5 FOR $1.00
Mutton, Chicken Or Fish 4 FOR 1.00

SPECIAL
RICE & CURRY Vegi.
(வடை, பாயசம், அப்பளம், மிளகாய், ரசம்) 6 கறியுடன்
$4.99 (Tuesday & Friday)

SPECIAL
கொத்து ரொட்டி
Kotthu Rotti
(Chicken, Mutton, Beef)
$3.99

SPECIAL
25 இடியப்பம்
25 String Hopper
(with Potato Curry)
சம்பல், சொதி, கிழங்கு - குளம்பு $2.99

SPECIAL
பிட்டு / Pittu
(with Potato Curry)
கிழங்கு குளம்பு
$2.99

SPECIAL
இடியப்ப மிக்ஸ்
String Hopper Mix
$1.99
பிட்டு மிக்ஸ்
Pittu Mix $2.99

SPECIAL
நூடில்ஸ்
NOODLES
(Chicken & Shrimp)
with Coke
$2.49
Special for Students

SPECIAL
ரொட்டி
(Plain) 0.60¢
வீச்சு ரொட்டி
0.75¢

SPECIAL
Lunch Special for Students
2 Rolls
+ Can Juice
$1.99

10வது வருடத்தில் கால் பதிக்கும் முகமாக வாடிக்கையாளர்களுக்கு **BREAD MASTER** தரும் சிறப்பு விலை



FRESH FROM THE OVEN

திருமணம், பூப்புனித நீராட்டு விழா, பிறந்தநாள் வைபவம், ஒன்றுகூடல்கள், அந்தியேட்டிக் கிரியைகள் மற்றும் எந்த வைபவங்களானாலும் சுத்தமான முறையில் எத்தனை பேர்களுக்கும் கேற்றறிங் செய்து தரப்படும்

SPECIAL
CROISSANT
3 FOR
$1.00




OPEN 7 DAYS A WEEK! 7.00 A.M - 9.00 P.M

MANY MORE ITEMS FOR SPECIAL

## 31 TAPSCOTT ROAD, UNIT #B3

LOWER LEVEL, MALVERN TOWN CENTRE - SCARBOROUGH

## TEL: (416) 299-5083




SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL

SELVA GRAPHICS 416-724-8315

# கருந்துளைகள் - 8

பேரண்டம் - 56

அனைவருக்கும் பொங்கல், புதுவருட நல் வாழ்த்துகள். வருங்காலம் இனியதாக அமையட்டும், எல்லோருக்கும். சென்ற தடவை கருந்துளைகளின் அமைப்பிற்கான விளக்கத்தினைப் பார்த்தோம். அதன்படியே கருந்துளைகள் தமக்கு அண்மையில் உள்ளவற்றையெல்லாம் தம்முள் இழுத்துக் கொள்ளுவதையும் அறிந்து கொண்டோம். இவ்விளைவின் முக்கியமான கருதுகோளை இனிப் பார்ப்போம்.

கருந்துளைகள் ஆபத்தானவையா?

கருந்துளைகள் வலிமையான ஈர்ப்புப்புலத்தினைக் கொண்டுள்ளன என்பது எங்கள் எல்லோருக்கும் தெரியும். அதன் வலிமையான ஈர்ப்பு வல்லமையானது அதன் அருகில் உள்ள பொருட்களைத் தன்னுள் இழுத்துக் கொள்ளும் என்பதும் உண்மைதான். இதனால் இந்தக் கருந்துளைகளை 'வான் துப்பரவாக்கி'கள் எனச் சிலர் எண்ணுவதுண்டு. சிறிது சிறிதாக எல்லாவற்றினையுமே தன்னுள்ளே இழுத்து ஏப்பமிட்டுவிடும் எனக் கருதுபவர்கள் இருக்கின்றார்கள். இதனால் கருந்துளைகள் மிகவும் ஆபத்தானவை எனக் கூறுபவர்கள் பலர். உண்மையில் இவை ஆபத்தானவையா இல்லையா என்பதனை பின்வரும் பகுதியை வாசித்துவிட்டு நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

கருந்துளைகள் தம்மைச் சூழவுள்ள பொருட்களை எல்லாம் தம்முள் இழுத்து இல்லாமற் செய்கின்றன என்பது என்னவோ உண்மைதான். ஆனால் இந்தச் சூழவுள்ள என்பதில்தான் சிறு மயக்கம். சூழவுள்ள என்பது எவ்வளவு தூரத்தினை கருதுகின்றது என்பதில் தெளிவு பெறுவோமேயாயின் விடை கிடைத்துவிடும். இதற்கு எடுத்துக் காட்டாக எமது கதிரவனையே நான் எடுக்கின்றேன். நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன், எமது கதிரவன் ஒருபொழுதும் ஒரு கருந்துளையாக மாற முடியாது. இதனை ஞாபகத்திற் கொள்ளுங்கள்.

கதிரவனின் ஈர்ப்பினால்தான் கதிரவனைச் சுற்றிக் கதிரவக் குடும்பத்தின் அத்தனையுமே இயங்குகின்றன என்பது நம் அனைவருக்குமே தெரியும். ஏதோ காரணத்தால் கதிரவன் சடுதியில் ஒரு கருந்துளையாக மாறிவிட்டது என்போம். இது எப்படி இருக்குமெனில் எமது பூமியைப் போல் பத்து இலச்சம் மடங்கு பிரதேசத்தில் இருந்த கதிரவனின் திணிவு அவ்வளவும் (மொத்தச் சடங்களும்) கிட்டத்தட்ட எமது யாழ்ப்பாணத்தினையும் விடச் சிறியதான குறுக்கு வெட்டுப் பரப்பினைக் கொண்ட கோளப் பகுதிக்குள் அடக்கப்பட வேண்டும். இப்போது எமது கதிரவக் கருந்துளையின் மேற்பரப்பின் ஈர்ப்பு வலிமையானது முன்னர் இருந்ததை விடப் பன்மடங்கு அதிகம்தான். அதனால் கதிரவத் தொகுதியின் இயக்கத்தில், அல்லது கதிரவத் தொகுதியில் உள்ள பொருட்களில் ஏதேனும் மாற்றம் ஏற்படுமாவெனக் கேட்டால், பதில் இல்லை என்றேதான் வரும்.

சிறிய கதிரவக் கருந்துளையானது தமது மேற்பரப்பிற்கு அருகில் உள்ள பொருட்களைத்தான் வலிமையாகத் தன்னுள் இழுத்துக் கொள்ளும். அதில் இருந்து வெப்பமோ, வெளிச்சமோ அல்லது வேறும் கதிரியக்கங்களோ வெளியே செல்லாது. ஆனாலும் இந்தக் கதிரவக் கருந்துளையின் மொத்தத் திணிவின் வலிமையானது இன்னமும் முன்னர் இருந்த அளவிலும், முன்னர் இருந்த இடத்திலும் இருப்பதனால் அதன் ஈர்ப்பினாலான, அதனது கோள்களின் மீதான தாக்கங்கள் அதே அளவினதாகவே இருக்கும். எனவே கதிரவனின் முதலாவது கோளாகிய புதன் முதலாக எல்லாக் கோள்களும் இப்போதும் முன்னர் கதிரவனை வலம் வந்து கொண்டிருந்த பாதைகளிலேயே கதிரவக் கருந்துளையை வலம் வந்து கொண்டிருக்கப் போகின்றன. எமது பூமியை சந்திரன் இன்னமும் அதே பாதையில்தான் வலம் வந்து கொண்டிருக்கும். ஆனால் ஒன்று எமது பூமியும் மற்றக் கோள்களும் எப்பொழுதும் இருளிலேயே இருக்க வேண்டியிருக்கும். மேலும் நல்ல குளிருக்குள் அவை இருக்க நேரிடும். பூமியில் எந்தவொரு உயிரியமும் இருக்க முடியாது. இது ஒரு எடுத்துக் காட்டிற்காகக் கூறினேன். நமது கதிரவன் ஒரு போதுமே ஒரு கருந்துளையாக வரமுடியாது என்பது எமக்குத் தெரியும்.

ஆக, கருந்துளைகள் விண்வெளியின் வெற்றிடமாக்கிகள் அல்லது துப்பரவாக்கிகள் எனக் கூறினால் அது அவ்வளவு பொருத்தமானதல்ல. ஆனாலும் சில சிக்கல்களும் இல்லாமல் இல்லை. எங்களுக்குத் தெரியும் வான்பரப்பில் எந்தவொரு பொருளுமே ஓய்வில் இல்லை, இயங்கிய வண்ணமே இருக்கின்றன. இப்படியாக இவை இயங்கிக் கொண்டு வருகையில் சில சமயங்களில் இந்தக் கருந்துளைகள், சில வான் பொருட்களுக்கு அருகிலும் வரநேரிடுகின்றது. பெரும் தூசுக் கூட்டங்களாகிய வான்வெளி ஊடகங்கள், நெபுலா, இன்னொரு விண்மீன் என்பவற்றிற்கு அருகாமையில் இவை வந்து விட்டால், தமது ஈர்ப்பின் வல்லமையைக் காட்டத்தான் செய்கின்றன, அப்பொருட்களில் இருந்து சடங்களை உறிஞ்சத்தான் செய்கின்றன. ஆனாலும் அது கூட எங்களுக்கு ஒருவகையில் நன்மையாகத்தான் இருக்கின்றது. அதனை அடுத்த பகுதியில் பார்ப்போம்.

அதற்கு முன்பதாக இன்னொரு விடயத்தினையும் தெரிந்து கொள்வோம். எங்களது பேரண்டம் தோன்றியது 'பிக் பாங்'கில் இருந்து என்பது தற்காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருதுகோள். இந்தப் பிக் பாங்கானது, கருந்துளைகளின் மத்தியில் உள்ள ஒருமம் போன்ற ஒன்றில் இருந்துதான் வந்தது என்கின்றார்கள். பிக் பாங்கிற்குட்பட்ட ஒருமமானது கருந்துளைகளின் மத்தியில் உள்ள ஒருமங்களையும் விடப் மிக மிகப் பெருந் திணிவினைக் கொண்டதாக இருந்திருக்க வேண்டும். கருந்துளைகள் இயங்கிக் கொண்டே இருப்பதனால் சில சமயங்களில் இரண்டு கருந்துளைகள் அருகருகே வந்து விடக் கூடிய சந்தர்ப்பங்களும் உண்டு. இப்படியாக அருகருகே வரும் கருந்துளைகள் இரண்டு ஒன்றிணைந்து பெரிய கருந்துளையாகிவிடும். அதற்கென்ன ஒன்றிணைந்து ஒன்றாகட்டுமே, நமக்கென்ன என்கின்றீர்களா? விசயமிருக்கு.! இப்படிக் கருந்துளைகளின் ஒன்றிணைவானது நாளாவட்டத்தில் பெரும் பிரச்சனையாக மாறிவிடும். கருந்துளைகள் ஒன்றிணைந்து, ஒன்றிணைந்து பெரியதான கருந்துளைகள் உருவாகிக் கொண்டு வருகையில் இப்பெரிய கருந்துளைகள் பேரண்டத்தின் உள்ளே உள்ள சடங்களை எல்லாம் உறிஞ்சி தமது ஒருமத்துடன் இணைத்துக் கொள்ளுகின்றன. அதுமாத்திரமல்லாது அக் கருந்துளைகள் எல்லாமும் ஒன்றிணைந்து ஈற்றில் தனியொரு கருந்துளையாகவும், தனியொரு ஒருமமாகவும் மாறிவிடப் போகின்றன. அதாவது இந்தத் தொடர் நிகழ்வின் காரணமாக, ஒருநிலையில், பேரண்டத்தினுள் உள்ள அத்தனையுமே மிகப் பிரமாடண்டமான கருந்துளை ஒன்றின் ஒருமத்துடன் ஒன்றாகிவிட, பேரண்டம் முழுவதுமே இருண்டு, பேரண்டத்தின் முடிவுக் காலமாகிவிடும்.

கொள்கையளவில் சிலரால் கருதப்படும் இந்நிலைக்கு பேரண்டமானது வருவதற்குப் பல பில்லியன், பில்லியன் வருடங்களாவது எடுக்கும் என்கின்றார்கள், இதன்படி பார்த்தால் உண்மையில் இக்கருந்துளைகள் ஆபத்தானவைதான். ஆனால் இது எங்களது காலத்திலோ அல்லது எமது பூமியின் காலத்திலோ நிகழப் போகின்ற ஒன்றல்ல. அத்துடன் இது சரியானதுதானா என்ற கேள்வியும் ஒன்று உண்டு. அதுபற்றிப் பின்னர் பார்ப்போம். அடுத்த தடவையில் கருந்துளைகளை எவ்விதம் விஞ்ஞானிகள் இனம் காணுகின்றார்கள் என்பதனைப் பார்ப்போம்.



- கனி -

# ரஜினிகாந்...

26ஆம் பக்கத்தொடர்ச்சி

பெரியவர்கள் முன்னால் கால் மேல் கால் போட்டு அமர்ந்திருக்கும் சிறியவர்களையும், சொன்னதையே திரும்பத் திரும்ப சொல்பவர்களையும், ஜோசியக்காரர் களையும், பந்தா பண்ணுகிறவர்களையும் ரஜினிக்குப் பிடிக்காது.



19. தன் சொந்த வாழ்க்கையில் அளவுக்கு மீறி தலையிடும் பத்திரிகையாளர்களையும், பேட்டியில் சொன்னதை மாற்றி எழுதும் நிருபர்களையும் ரஜினிக்குப் பிடிக்காது. ஆனால், தன் நடிப்புத் தொழிலைப் பாதிக்காத வகையில் பத்திரிகைகளில் தன்னைப் பற்றி வரும் கிசுகிசுக்களை ரஜினி ரசிப்பார்.

20. தரையில் அமர்ந்து வாழை இலையில் சாப்பிடுவதுதான் ரஜினிக்கு மிகவும் பிடிக்கும். பெரும்பாலும் வீட்டில் இப்படித்தான் சாப்பிடுவார். காரமான சூடான சிக்கன் - மட்டன் வகைகள் ரஜினிக்கு பிடித்த உணவுகள். காஷ்மீரின் மேத்தா மெந்தீஸ் வகை உணவும் ரஜினிக்கு பிடித்தமானது.

அடுத்த இதழிலும் தொடரும்....




# "வந்து பாருங்கோ..."

புதிய விநாடி, புதிய நிமிடம் என்று ஆரம்பித்திருக்கிறது 2010! இன்னுமொரு புதிய பக்கம், அதில் என்ன எழுதப்போகிறோம்?

2009, கனேடிய தமிழ்த் திரைப்படத்துறைக்கு மிக முக்கிய வருடம். "1999" தமிழ்த் திரைப்படம் வெளியான ஆண்டு!
Local கனேடிய தமிழ் மக்கள் பார்க்கும் முன்னே, 'Vancouver International Film Festvial', நாங்க தான் முதல்ல "இன்டர்நேஷனல்" மக்களுக்கு காட்டுவோம் என்று முரண்டு பண்ணியது, சரி என்று பெரிய மனது வைத்து விட்டுக்கொடுத்தார் இயக்குனர் லெனின் சிவம்! 99 cans of Milo Drink குடித்தது போல சினிமா ஆர்வலர்கள் சிலிர்த்து நின்றார்கள். இதெல்லாம் old news, புதுசா சொல்லுங்கப்பா என்று சொல்வீர்கள்...

**- கிறிஸ்ரி-**

"Life can only be understood backward. It must be lived forward', என்று சொன்னது "The Curious Case of Benjamin Button" என்ற திரைப்படத்தின் Movie poster! நான் அண்மையில் பார்த்த "சர்வர் சுந்தரம்" திரைப்படத்தில் கூட நாகேஷ் இதே வரிகளை சொல்கிறார். (ஏறக்குறைய!)
English Movie poster இல் இருந்த வரிகளை கவனமாகப் பார்த்த நான், நாகேஷ் சொல்லும் போது ஏன் தவற விட்டேன் அல்லது கவனிக்கவில்லை? நம்ப நாகேஷ் தானே, என்ன புதுசா சொல்லிடப் போறார் என்ற "அன்பான அசட்டை" காரணமாக இருக்கலாம்!




அண்மையில் இயக்குனர் லெனினிடம் உரையாடிய போது அவர் சொன்னது, நான் மேலே சொன்னதையே உறுதிப்படுத்தியது. "1999" "வந்து போன" இன்னுமொரு படமாகி விடக்கூடாது என்ற அக்கறையே இந்தக் கட்டுரை.

Financial Support என்ற பதமே தெரியாமல் வளர்ந்து வருவது நம் கனேடிய திரைப்படத்துறை. சொந்த நேரம், சொந்தப் பணம், ஆர்வமுள்ளவர்களின் இலவசப் பங்களிப்பு என வருடக்கணக்காக வளரும் படங்கள் திரைக்கு வரும் போது, அவர்கள் எதிர்பார்ப்பெல்லாம் ஒன்றே ஒன்று - நம் மக்கள் வந்து பார்ப்பார்கள், உற்சாகம் அளிப்பார்கள் என்பதுதான். (படம் மட்டும் இலவசமாவா போடுறாங்க என்ற கேள்வி நிச்சயம் வரும்!)
படு bore ... என்னய்யா படம் எடுக்குறாங்க... cinema ஆரம்பித்து சில நிமிடங்களிலேயே "ஓடிப் போயிரலாமா" comments... முதல்ல படம் ஒழுங்கா எடுங்க, பிறகு நாங்க வருவோம் பார்க்க.. என்ற பல்வேறு "எள்ளி நகையாடல்களைக்" கடந்து முறுக்காக வந்து நின்றது "1999".

படத்தின் மிகப்பெரிய பலம் திரைக்கதை. ஒவ்வொரு கதாபாத்திரமும் கவனத்தோடு கையாளப்பட்டிருந்தது. எல்லோருமே நம்மை நெருங்கி வந்தார்கள். பாடல்கள் சிலர் பார்த்த போது இல்லாவிட்டாலும், (படத்தின் விறுவிறுப்பு குறைந்து விடக்கூடாது என்று ஒரு சில படக் காட்சிகளில் நீக்கப்பட்டிருந்ததாம்!) கேட்பதுக்கும், பார்ப்பதுக்கும் படு இனிமை, குளுமை! அதிலும் அந்த SPB பாட்டு - "மொழியின்றி விரிகின்ற என் கீதம்" - ஒரு குட்டிச் சொர்க்கம்! ("கொஞ்சம் நில்லுங்க...மெல்லக் கேளுங்க.. Type!!)

எல்லா பத்திரிகைகளும் படத்தைப் பற்றி சிறப்பாகவே எழுதின. (விளம்பரம் உட்பட!). (பொது ஜன ஊடகங்கள் நிரம்பவே உதவி செய்தன, என்று அன்புடன் நினைவு கூர்ந்தார் லெனின். அதைக் கவனிக்கவும் முடிந்தது.) 'Vancouver ' சாதனை வானொலிகளில் தலைப்புச் செய்திகளாயின!
முதன் முதலாக Premier Show வாக, ஒரு கனேடிய தமிழ்த் திரைப்படம், Famous Players திரையரங்கில் திரையிடப்பட்டது!
இதுவரை 25 காட்சிகள் திரையிடப்பட்டுள்ளன. மேலே குறிப்பிட்டதெல்லாம் சந்தோச சமாச்சாரங்கள், இனி வருது Anti-Climax.

படத்தை பார்க்க எத்தனை பேர் வந்தார்கள் - அங்குதான் "1999" திரைப்படக் குழு தடுமாறி நிற்கிறது!
ஒவ்வொரு காட்சிக்கும், ok எப்படியும் அடுத்த காட்சிக்கு வந்துவிடுவார்கள், என்று காத்திருந்து காத்திருந்து, காலங்கள் தான் போய் விட்டன. எல்லோருமே படத்தைப் பற்றி சிறப்பாகச் சொல்லுகிறார்களே (குறைகள் இல்லாமலில்லை!) ஏன் சினிமா ரசிகர்கள் வரத் தயங்குகிறார்கள்? குழம்பி இருக்கிறார்கள்
"1999" படத்தோடு சம்பந்தப்பட்டவர்கள்! பலத்த சிரமங்களுக்கு மத்தியில் ஒரு நல்ல படம் தந்தோம் என்ற நம்பிக்கை வந்தது, ஆனால் வந்து பார்த்தவர்கள் போதாதே, என்று கவலைப்பட்டார் லெனின். வெற்றி என்ற சொல் வராமல் DVD இல் வெளியிடுவதும், மேலும் தம்மையும் தன் குழுவினரையுமே பாதிக்கும் என்கிறார். அதிலும் நிறைய உண்மை இருக்கிறது!

Always One more try is worth வை, என்று சொல்வார்கள். மார்ச் மாதம் மீண்டும் திரைக்கு வர இருக்கிறது "1999", என்று இயக்குனர் லெனின் கூறினார்.

நம் வீட்டை எடுத்துக்கொள்வோம், பல வேளைகளிலே "ரூ மை வடிவா Clean பண்ணி வையுங்கோ, கட்டாயம் வந்து பார்ப்பேன்" என்று குழந்தைகளுக்கு சொல்லி இருப்பீர்கள். அவர்களும் (நல்ல mood இல் இருக்கும் பட்சத்தில்..) அடித்துப் புடித்து வடிவா clean பண்ணி விட்டு வந்து, பிஸியாக இருக்கும் உங்களின் கை பிடித்து "வாங்க, வந்து பாருங்கோ" என்று அன்புடன் அழைப்பார்கள் (இழுப்பார்கள்!) அப்போது உங்கள் பதில் அவர்களுக்கு என்னவாக இருக்கும்?


"1999" திரைப்படக்குழு உங்களை அண்ணாந்து பார்த்து உரிமையுடன் "வந்து பாருங்கோ" என்று அழைக்கிறார்கள்? உங்கள் பதில் என்ன?

# பிள்ளையார்...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

சதுர்த்திக்கு ஒன்பது நாள்கள் முன்பாக காப்புக் கட்டி, கொடியேற்றம் செய்து திருவிழா தொடங்குகிறது. இரண்டாம் நாளில் இருந்து எட்டாம் நாள் வரை பிள்ளையார் பல்வேறு வாகனங்களில் வலம் வருவார். ஒன்பதாம் நாள் தேர்த்திருவிழா மிக விமரிசையாக நடைபெறும். விநாயகருக்குத் தேர்த் திருவிழா நடைபெறுவது மிக அபூர்வம். பிள்ளையார்பட்டியில், விநாயகருக்கும் சண்டிகேசுவரருக்குமாக இரண்டு தேர்கள் இழுக்கப்படும். பிள்ளையார் தேரில் இரண்டு வடங்களில் ஒன்றை பெண்களும் மற்றொரு வடத்தை ஆண்களும் இழுத்துச் செல்வார்கள். சண்டிகேசுவரருக்கான தேரை பெண்களும் குழந்தைகளும் மட்டுமே இழுத்துச் செல்வர். தேரோடும் வீதியில் வேண்டுதல் நிமித்தமாக பக்தர்கள் அங்கப்பிரதட்சணம் செய்வர். பத்தாம் நாள் காலையில் தீர்த்தவாரி நிகழும். பிள்ளையார், மருதங்குடி நாயனார் சன்னதிகளில் சொக்கப்பனை கொளுத்தப்படும். சதுர்த்தி அன்று இரவு விநாயகப் பெருமான் வெள்ளி மூஷிக வாகனத்தில் எழுந்தருளுவது விசேசம். மிக விமரிசையாக நடக்கும் இத்திருவிழாவின் போது பிள்ளையார்பட்டியில் பக்தர்கள் கூட்டம் அலைமோதும்.

ஆண்டு தோறும் விநாயகர் சதுர்த்தியன்று உச்சிகால பூஜையின் போது விநாயகருக்கு முக்குறுணி அரிசியால் செய்யப்பட்ட பெரிய அளவிலான ஒரே கொழுக்கட்டை தயாரித்து நைவேத்யம் செய்வர். இது மிகவும் சிறப்பு பெற்றதாகும். 18 படி அரிசியை மாவாக்கி, எள் 2 படி, கடலைப்பருப்பு 6 படி, தேங்காய் 50, பசுநெய் 1 படி, ஏலம் 100 கிராம், வெல்லம் 40 கிலோ ஆகியவற்றை சேர்த்து ஒரே கலவையாக்கி, உருண்டை சேர்த்து அதனை துணியால் கட்டி, மடப்பள்ளியில் அன்னக் கூடையில் வைத்து கட்டுவார்கள். தண்ணீர் நிரப்பப்பட்ட அண்டாவினுள் இறக்கி அதன் அடிப்பகுதியில் படாதவாறு தொங்கவிட்டு மடப்பள்ளி முகட்டில் கயிற்றால் கட்டி விடுவர். பின்னர் அது, அந்த பெரிய அளவிலான பாத்திரத்தில் 2 நாள் தொடர்ச்சியாக



வேக வைக்கப்படும். பின்னர் இது உலக்கை போன்ற கம்பில் கட்டி பலர் சேர்ந்து காவடி போல தூக்கி வந்து மூலவருக்கு உச்சிகால பூஜையில் நிவேதனம் செய்வர். மறுநாள் கொழுக்கட்டை சூடு ஆறிய பின்னர் நகரத்தார், ஊரார்கள் மற்றும் பணியாளர்களுக்கு பிரித்து உண்ணக்கொடுக்கப்படும்.

சதுர்த்திக்கு அடுத்து, மார்கழி திருவாதிரை பிள்ளையார்பட்டியில் விமரிசையாகக் கொண்டாடப்படும். அன்று சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமான் திருவீதி பவனி வருவார். இந்த இரண்டு தினங்கள் தவிர தமிழ், ஆங்கில புத்தாண்டு தினங்கள், தீபாவளி, பொங்கல் போன்ற விசேச நாட்களிலும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பிள்ளையார்பட்டியில் கூடுவார்கள். தினம்தோறும் நூற்றுக்கணக்கான பக்தர்கள் வந்து செல்வதும் சாதாரணமாக நடக்கும்.

பிள்ளையார்பட்டி விநாயகரைப் பற்றி கண்ணதாசன் எழுதிய ஒரு பாடல்:
அற்புத கீர்த்தி வேண்டின்
ஆனந்த வாழ்க்கை வேண்டின்
நற்பொருள் குவிதல் வேண்டின்
நலமெலாம் பெருக வேண்டின்
கற்பக மூர்த்தி தெய்வக் களஞ்சியத்
திருக்கைச் சென்று பொற்பதம்
பணிந்து பாரீர் பொய்யிலை கண்ட உண்மை.

நீங்களும் சென்று பாருங்கள்.

## எப்படிச் செல்வது? எங்கே செல்வது?

சிவகங்கையில் இருந்து 44 கி.மீ. தூரத்திலும், காரைக்குடியில் இருந்து 16 கி.மீ. தூரத்திலும் மதுரையில் இருந்து 74 கி.மீ. தூரத்திலும், திருப்பத்தூரில் இருந்து 9 கி.மீ. தூரத்திலும் பிள்ளையார்பட்டி இருக்கிறது. இந்த எல்லா நகரங்களில் இருந்தும் பிள்ளையார்பட்டிக்கு அடிக்கடி பேருந்துகள் உள்ளன. இந்த நகரங்களுக்கு தமிழகத்தின் மற்ற எல்லாப் பகுதிகளில் இருந்தும் பேருந்து போக்குவரத்து உள்ளது. காரைக்குடிக்கும் மதுரைக்கும் ரயில் போக்குவரத்து உள்ளது.

பி.கே.என்.கே.விடுதி என்ற தங்கும்விடுதியை பிள்ளையார்பட்டியில் கோயில் நிர்வாகத்தினரே நடத்தி வருகிறார்கள். இங்கோ அல்லது திருப்பத்தூர், காரைக்குடி நகரில் உள்ள தனியார் விடுதிகளிலோ தங்கிக்கொண்டு கோயிலுக்கு செல்லலாம். காரைக்குடி பகுதிகளில், சிறிய உணவகம் உள்பட உள்ள எல்லா உணவகங்களிலும் நம்பிக்கையுடன் சாப்பிடலாம். அவ்வளவு சுவையாக இருக்கும்.

# முல்லைக் கவிஞனின் உயிர்மொழி

## சேரனின் சொற்கள்

முல்லை முஸ்ரி.ஃ.பாவின் கவிதைகள் முல்லைத்தீவில் அவருக்கு மறுக்கப்பட்ட வாழ்வையும் கனவையும் மட்டுமே பேசுவன அல்ல. அந்த வாழ்வும் அந்த மண்ணிலே ஆழ வேரோடியிருந்த அவரதும் அவர் போன்ற ஆயிரக்கணக்கான முஸ்லிம் மக்களின் வரலாறும் அவர்கள் தங்களுடைய சொந்த நிலங்களில் இருந்து தூக்கி வீசப்பட்டாலும் முஸ்ரி.ஃ.பாவினதும் அவரது தேசிய இனத்தின தும் உயிர் மூச்சையும் புது வரலாற்றையும் இலக்கியமும் கவிதையும் அணையாமல் முன்னெடுக்கின்றன.

முல்லை முஸ்ரி.ஃ.பாவின் கவிதைகளுக்கு முன்னுரையாகச் சில வார்த்தைகள் எழுதுகிறபோது வலி ஒருபுறம் வெட்கம் மறுபுறம் முன்னுரைக்கான அழைப்பை அவர் தந்தபோது எழுந்த அடக்கத்துடன் கூடிய பெருமிதம் இன்னொருபுறம் என உணர்வின் அலைகள் என்னைச் சூழ்கின்றன.

கவிதைத் தொகுதிகளுக்கு முன்னுரைகள் தேவையில்லை என்பதே என்னுடைய கருத்தாக இருந்து வருகிறது. எனினும், பல்வேறு கவிஞர்களின் தொகுதிகளுக்கு முன்னுரை எழுத நேர்ந்திருக்கிறது. அப்படி எழுதுகிறபோது இலக்கிய விமரிசகர் அல்லது கவிதையின் உபாசகன் என்ற ஒளிவட்டத்தைத் தவிர்த்து விடுவது பொருத்தமானதும் நியாயமானதும் என்று நான் கருதுகிறேன்.

அப்படியானால் ஒரு முன்னுரைக்கு எத்தகைய இணக்கப்பாடு இருக்க முடியும் என்ற கேள்வி பெரிதாக எழுகிறது.

இலக்கிய வரலாற்றிலும் அரசியல் வரலாற்றிலும் அரசியல் இலக்கிய வரலாற்றிலும் பல தளங்களிலும் சிறப்புத் தனித் தன்மையும் வரலாற்று முக்கியத்துவம் வாய்க்கப்பெற்ற தொகுதிகளை எதிர்கொள்கிற போது அவை பற்றிய சில வார்த்தைகள் எழுதிக் கோடிட்டுக் காட்டுவது பொருத்தமானது. கூடவே, முல்லை முஸ்ரி.ஃ.பாவின் கவிதைக் குரலுடனும் உழவுக் குரலுடனும் உணர்வுத் தோழமையைக் காட்டுவதற்காகவும் இந்த முன்னுரை மிக இயல்பான ஒரு பாலமாகவும் மாறிவிடுகிறது.

அரசியல்வாதிகளும் தமிழ் இயக்கங்களும் செய்யாத அவர்களால் செய்ய முடியாத அல்லது அவர்கள் செய்ய மறுத்த உணர்வுத் தோழமையையும் அரசியல் இணக்கத்தையும் பல முஸ்லிம், தமிழ்க் கவிஞர்கள் முன்னெடுத்து வருவது நமது நெடுங்கால நல்லுறவுக்கும் அரசியல் சமத்துவத்துடன் கூடிய தனித்துவம் பேணுகிற ஒருங்கிணைவுக்கும் வளமான அடித்தளத்தை ஏற்படுத்துகிறது. அந்த வகையில் கவிஞனாக இருப்பது என்பது இன்றைய ஆறாத் துயரிலும் மகிழ்ச்சியையும் நம்பிக்கைச் சுடரையும் தருகிறது.

முல்லை முஸ்ரி.ஃ.பாவின் கவிதைகளில் தாகம், ஏக்கம், அதிருப்தி, துயர் மண்டிய வாழ்வு பற்றிய கோலங்கள் கவிதா இழைகளாக இருந்தாலும், வாழ்வின் மீதான ஈரக் காதலையும் நளினத்துடனும் நம்பிக்கையுடன் அவர் எங்களுக்குத் தருகிறார். அவருக்குரிய மிகவும் அழகான கவிதைக் கோலம் எதுவென்றால், பாரதி கூறியது போல 'விட்டு விடுதலையாகி நிற்கும் ஒரு சிட்டுக் குருவி' முகம்தான்.

அவருடைய இனிய மொழியில் சொல்வதானால் அவர் ஒரு எதிர்ப்பிசைக் கருவி. நல்ல கவிஞனின் எதிர்ப்பிசைக் கருவியாக அன்றி ஒத்தோடிக் குருவியாகவா இருக்க முடியும்?

'கோலமிழக்கும் தெருவின் வரைபடங்களும்', மழைக் கவிதையும் முஸ்லிம் தமிழ் உறவின் கவிதைக் கண்ணிகளும் இடையறாது விரவிக் கிடக்கும் இந்தக் கவிதைகள் அவலத்தையும் இசையையும் கோபத்தையும் நம்பிக்கையையும் மாறி மாறித் தருகின்றன. எங்களுடைய காலத்தில் கவிதையின் பணி இவ்வாறு மாறி விட்டமை இன்னொரு சோகம்தான்.
'உயிர்மொழி மறுக்கப்படுகையில் முகமூடி மொழி அணியும் அவாவற்றவன்' என்று எழுதுகிற முல்லை முஸ்ரி.ஃ.பாவின் வீரம் செழுமை வாய்ந்தது மறுத்தோடுவது. இடையறாது தேடுவது அவாவுறுவது. உயர்ந்த கவிதைக்கு இவையனைத்தும் தேவையல்லவா?

சேரன்
07.12.2009

## அவாவுறும் நிலம்
## (மண்ணின் சிறகுகளால் பறத்தல் பற்றியதான கவிதை)

**- முல்லை முஸ்ரிஃபா**

நரம்பு சுண்டிய யாழ்

நரம்பறுந்த யாழின் இசையென
உன் இரத்தல் பா
செவி படர்ந்திற்று

பசியை இசையாய் நீ இறக்கிய
வெய்யிற் பொழுதில்
அத்தனை சோடிக் காதுகளாலும்
முழுச் செவிடாய்
உன்னைக் கடக்கும் பெரும் வீதி

என் செவியிற் படர்ந்திற்று
உன் இரவுப் பா

உன் அருகு நின்ற கணங்களில்
என் நரம்புகள் மொத்தமும் உருகி
மன யாழின் கவி
காற்று வெளியும் கடந்து போயிற்று

உன் இரங்கற் பா
செவியாதோரைக் காணவொண்ணா
விழிகளுக்குள்
என்னை மட்டுமாய் அழைத்தாய்
குரல் கம்மிய யாழின் இசையாய்

என் நரம்பு சுண்டிய
நரை மண்டிய யாழே
அறுந்து போயிற்று அக்கணம்
என் மனம்

உன் செவியுறு யாழின் கனவுகள்
இனி எவரெவர் வசம்

ஓர் இசையிழந்த காற்றின் மரிப்பில்
ஒப்பாரி கேட்டபடியிருக்கிறது
நெஞ்சுள்
அப்பக்கம் நான் போகுந் தோறும்
எப்போதும்

என் நரம்பு சுண்டிய
நரை மண்டிய யாழே
நீ
காற்றில் எதை எழுதிச் சென்றனை

*விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு*

**www.vlambaram.com**

**"ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்"**




எனும் அரிய நூல்
மனதை கட்டுப்படுத்தி நல்வழியில் செலுத்த, ஆளுமையை வளர்க்க, மனதில் நின்மதியை பெற வாசிக்க வேண்டிய
அருமையான நூல்

**கிடைக்குமிடம்: விளம்பரம் பத்திரிகை காரியாலயம்**
**தொலைபேசி இலக்கம்: 416.282.8059**
**GTA Square - 5215 Finch Ave. E., #201**
**Middlefield & Finch**

*விற்பனையாகின்றன!*
*கனி விமலநாதனின்*
*மூன்று நாவல்கள்*

**❶ வேற்றுக்கிரக மனிதர்கள்**



யார் இந்த வேற்றுக்கிரக மனிதர்கள்? அவர்களின் பின்னணி என்ன? வேற்றுக்கிரக மனிதர்களை சந்தித்தவர்கள் உண்டா? வேற்றுக்கிரக மனிதர்களுக்கும் எங்களுக்கும் என்ன தொடர்பு?

**❷ பிரபஞ்சம் பற்றிய வியப்பான செய்திகள்**

எமது பிரபஞ்சம் எப்போது தோன்றியது? தோன்றியபோது எப்படி இருந்தது? எவ்விதம் இவ்வளவு பெரிதாக ஆகியது? பிரபஞ்சத்தின் முதல் நட்சத்திரம் எவ்வாறு தோன்றியது?

**❸ இனம்தெரியாத பறக்கும் தட்டுகள்**

பறக்கும் தட்டுகள் என்பது உண்மைதானா? அவை எங்கிருந்து வருகின்றன? பறக்கும் தட்டுகளை கண்டவர்கள் உண்டா?

**பிரபஞ்ச இரகசியங்களை தெளிவு படுத்தும் நூல்கள்**

**கிடைக்குமிடம்: முருகன் புத்தகசாலை**
**1241 Ellesmerer Road - Midland & Ellesmere**
**GTA Square - 5215 Finch Ave. E., Middlefield & Finch**

# வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர் அனைவருக்கும் உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்




தமிழர் மத்தியில் என்றும் தரமானதாகவும் ருசியானதாகவும் சுகாதாரமுறைக்கேற்ப உணவுப்பொருட்களை வழங்குவது

**நிரு பிராண்ட் தயாரிப்புக்களே.**

# அழகே உன்னை ஆராதிக்கிறேன்

அழகு என்பதற்கு இதுவரை எல்லோராலும் ஏற்றுக்கொள்ளும் தன்மையில் வரைவிலக்கணமோ அன்றி விளக்கமோ கொடுக்கப்படவில்லை என்பதே உண்மை. ஆனால் அழகுள்ள பெருள் என்றும் இன்பம் தருவது, அதன் கவர்ச்சி நாளுக்கு நாள் வளர்வது, என்றும் இல்லையென்னும் படி அழிந்து போகாதது" எனக் கீட்ஸ் என்னும் அறிஞர் வரைவிலக்கணம் தருகின்றார்.



பெண் என்றால் அழகு. பெண் அழகைப் பார்த்து. . ."பெண் அழகு எந்தப் பருவத்திற்கு உரியது என்பது, சற்றுச் சிந்திக்க வேண்டியது. குழந்தைகளின் அழகு அலாதியானது. குமரிப்பருவம் அதனிலும் அழகு. அழகு என்றால் பெண் என்பது கவிஞர்கள் முதல் கதா ஆசிரியர்கள் வரை தங்கள் எழுத்துக்குள் அகப்படுத்தாமல் விட்டபாடில்லை. பண்டைக்காலந்தொட்டு இன்றுவரை பெண்கள் பற்றிப் பாடிய பாடல்கள், எழுதிய கதைகள் வர்ணித்த வர்ணனைகள் எண்ணிலடங்கா. இவை அனைத்தும் பெண்களின் அழகை வெளிக்காட்டுபவையே. ஆண் என்றால் கட்டுடல், வீரம், துணிவு எ ன் ப ன வ ற் றை யே கண்டுகொள்கின்றார்கள். மேலைத்தேய வரலாற்றில் கிளியோபத்ரா, மர்லின்மன்றோ, எலிசபெத் டெயிலர் போன்றவர்கள் அழகின் சின்னங்களாக கருதப்பட்டார்கள். சிறந்த அழகிகளாகக் கருதப்பட்டதற்கு அவர்களின் உடல் கட்டும், கவர்ச்சியுமே காரணம் எனக் கொள்ளப்படுகின்றது.

மன்னமதன் அழகின் திரு உருவம் எனக்கருதப்படுகின்றான். எந்தக்குறையும் இல்லாமல் மனித உருவம் எதுவுமே இருக்கமுடியாது என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. அப்படியானால் மன்னமதனின் சிருஷ்டி அப்படியான ஒன்றாக இருந்திருக்கலாமா என்று எண்ணத்தோன்றுகின்றது. ரதியும், மன்மதனும் அழகில் சிறந்தவர்கள் எனப்படுகின்றது. அதாவது அப்பழுக்கற்ற அழகு. மங்கையரை மட்டுமல்ல ஆடவரையே மயக்கும் அழகுநிறைந்தவன் மன்மதன் எனப் புராணக்கதைகள் கூறுகின்றன.

அழகின் பிற்புலத்தில் பெரும் பெரும் வரலாறுகள் புதையுண்டு போயுள்ளன. பெரும் அரசுகளே அழகின் பொருட்டு போரிட்டு அழிந்துபோயுள்ளன. எனது இளமைக்காலத்தில் பார்த்த நினைவு "பூதத்தம்பி நாடகம்" கதையின் நாயகன் பூதத்தம்பி அவரின் மனைவியோ பேரழகி. புதத்தம்பியன் மேலதிகாரி அவனது வீட்டிற்கு வந்து மறைவில் நிண்ட பூதத்தம்பியின் மனைவியின் கால்களைக் கண்டு அதன் அழகில் மயங்கிவிட்டான். அதனால் அவன் அவளைக் கவர்ந்து செல்லத்திட்டமிடுகின்றான். தனது எண்ணத்திற்கு குறுக்கே நிற்கக்கூடிய அந்த அழகியன் கணவனைத் தீர்த்துக்கட்ட திட்டம் தீட்டுகின்றான். இதனால் பூதத்தம்பி கொலையுண்டான். யாருக்காக அழகிற்காக. இவ்விதமான கதைகள் பல உள. அதிக அழகு இருக்கும் இடத்தில் ஆபத்தும் உண்டு என்பார்கள். தங்க நகைகள் அழகானவை. ஆனால் அவை ஆபத்தையும் விலைக்கு வாங்கிவிடுகின்றன. அழகு மதுவினும் கொடியதே, உடையவர், பார்ப்பவர் இருவருக்கும் வெறியூட்டும் சக்தி வாய்ந்தது' என ஜிம்மர் மென் என்னும் அறிஞர் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளத்தில் பூரிப்பை ஏற்படுத்தத்தக்க உணர்வினை அசைக்கவல்லது அழகு. நறுமலராக இருக்கலாம், இயற்கை காட்டும் இன்பக் காட்சியாக இருக்கலாம் அல்லது மனித உடலழகாக இருக்கலாம் எல்லாமே மனதைக் கவருந்தன்மை பொருந்தியதாக மனித உணர்வில் இடம்பிடிக்கும் போதுதான் அழகின் நுட்பம், சிறப்பு, அந்தரங்கம் புரிகின்றது. இந்தப் புரிகை என்பது ஒவ்வொருவரதும் தனித்துவத்திற்கேற்ப மாறுபாடு கொண்டதாக அமைகின்றது.

''காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்று சொன்னதில் எவ்வளவு உண்மை உண்டு என்பதனை நாம் ஒவ்வொருவரும் அறிந்திருக்கின்றோம். ஆனால் பொதுவாக அழகு என்பது



- த. சிவபாலு-

பெரும்பான்மையானவர்களைக் கவரும் தன்மை கொண்டதாக அமைவதே. கூந்தல் அழகு, கண் அழகு, இதழ் அழகு, பார்வை அழகு, நடை அழகு என அழகினைப் பி ரி த் து ப் பா ர் க் கி ன் றா ர் க ள் . மொட்டையடித்து அதற்குக் கரும்புள்ளி செம்புள்ளி குத்துவது பண்டைக்காலத்தில் கணவனை இழந்தபெண்ணின் அழகைப் பறிப்பதற்காக. ஆனால் இன்று மொட்டையடித்து தலைக்கு வண்ணந்தீட்டி அழகு பார்க்கும் மொட்டை அழகும் அழகு எனக் கொள்ளுகின்றார்கள் மேலைத்தேய நாகரிக நங்கையர்.

---

209

நகைச்சுவைத் தொடர்

## ராசம்மா ராச்சியம்


கலகலப்பு தீசன்



பொங்கலோ ..பொங்கல்.. பொங்கலோ பொங்கல்..
பொங்கலோ பொங்கல்..
அந்தநாளும் வந்திடாதோ
பாட்டு ரேடியோவில் யாரோ நேயர் விருப்பத்தின் பேரில் ஒலித்துக்கொண்டிருந்தது.. உலகர்.. ராசம்மா.. செக்கண்ட்புளொர் செல்லம்மா உண்ட களை தொண்டருக்கும் உண்டென்பதுபோல அரைகுறைத் தூக்கத்திலிருந்தனர். ஜனவரி 1ம் திகதி லீவுநாள். ஹலோ ஹப்பி நியூ இயர் என்ற குரலெல்லாம் வேலை... பிரேக்குக்கு எடுத்து பொங்கல் வாழ்த்துக்கள் சொல்லுவார்கள் என எதிர்பார்த்த உலகருக்கு ஏமாற்றம்தான்.. ரூபன் வாங்கிக்கொடுத்த ரெலிபோன் காட்டில் ஜேர்மனி பிரான்ஸ் இத்தாலி இந்தியா அவுஸ்திரேலியா.. எல்லா நாடுகளுக்கும் அரைகுறைத் தூக்கத்திலுள்ளவர்களுக்குச் சொல்லியாகி விட்டது.



அந்தநாளும் வந்திடாதோ...
அந்தப்பாட்டு உலகர் மனதை விட்டுப்போகவில்லை.. ரெலிபோன் அடிக்க உலகண்ணை உலகண்ணை என உலகரைத் திடுக்கிட்டெழச்செய்தா செக்கண்ட்புளோர் செல்லம்மா. ஏனென்றால் செல்லம்மாவின் ரெலிகொமினிக்கேசன் சென்ரரே உலகர் வீடுதான். சிலவேளை வரும்கோல் தனக்காக இருந்தாலுமென்று.. ஓ. .சொல்லு தாமோதரம்.. என்றபடி சோபாவில் இருந்து கதைக்கத் தொடங்கினார் உலகர்.. எட இண்டைக்கு மகரஜோதி.




நீ குடுத்து வைச்சனி உன்ரை பிள்ளையள் உன்னைக் கூட்டிக்கொண்டு சபரி-மலைக்குப்போகுதுகள். இஞ்சை சில தாய்தேப்பனைப் பக்கத்துக் கோவிலுக்கே கூட்டிக்கொண்டு போகாத பிள்ளையளுமிருக்கு என்றபடி நீண்ட பெருமூச்சுவிட்டார் உலகர்.




இஞ்சை சரியான குளிர். நான் வெளியிலை போகேல்லை. ஆர் கூட்டிக்கொண்டுபோறது.. செல்லம்மா அன்ரி சக்கரைச்சாதம் சாப்பிடுங்கோ. அன்னம்மா அன்ரி மோதகம் சாப்பிடுங்கோ. மாமா உங்களுக்கு வெண்சாதமும் கத்தரிக்காய் வெள்ளைக்கறியும் கிடக்குச்சாப்பிடுங்கோ.



நாளைக்க உங்களுக்கு மெடிக்கல்செக்கப். போனமுறையும் சுகரும் பிறசரும் கூடவெண்டு ரூபனிட்டை டொக்டர் சொன்னவரெண்டு ரூபி சொல்ல ஓம்பிள்ளை நீதான் உவருக்குச்சரி. அதுசரி மாமி பாயாசம் காச்சினவ கலக்காமல் எனக்குக்கொஞ்சம் கொண்டுவா மேனை. எனக்கு பிளம்ஸ் கொஞ்சம் அலேர்ஜிக் என்றபடி மூன்றாவது மோதகத்தைச் சாப்பிடத்தொடங்கினா...

விளம்பரம் பத்திரிகையை
இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com

# சிரிப்பு வாழும் வழி, வாழ வைக்கும் வழி




**என் இனிய நண்பர்களே! புத்தாண்டு, பொங்கள் வாழ்த்துக்கள்!**

நலம்பெறப் பிரார்த்திக்கிறேன். முந்தைய முடங்கலில் (கடிதம்) எழுதிய சிரிப்புத் தொடராக பழைய ஞாபகங்கள் எழுந்தன. எழுதுகிறேன். நண்பா! இப்பொழுது மனம் விட்டுச் சிரித்தல் வாய்விட்டுச்சிரித்தல் என்பவை குறைந்து விட்டது. சொண்டுக்குள் சிரிப்பது. குறுமுறுவல். குமுண் சிரிப்பு. புன்முறுவல் எல்லாம் காணாமல் போய் விட்டன. அந்தச் சிரிப்பு வகைகளும் மறந்து போய் விட்டது. சாப்பிடவே நேரமில்லை. சிரிக்க எங்கே நேரம் இருக்கிறது என்று கேட்கிறார் ஒரு நண்பர். முன்பு ஒரு காலத்தில் வாழ்க்கையில் பிரச்சினைகள் இருந்தன. இன்று பிரச்சினையை வாழ்க்கையாகி விட்டது. என்செய்வோம் நம்ம தலைவிதி இது. நித்திரையில் கனவில் சிரிக்கிறவர்களும் இருக்கிறார்கள். அந்தக் கனவை நினைத்து நனவில் சிரிப்பவர்களும் இருக்கிறார்கள். எப்படியாவது சிரிப்பு வருவது நல்லது தான். தமக்குப் பயன்கருதி சிரிப்பவர்கள் பலர் இருக்கிறார்கள். ஒரு நகைச்சுவைத் துளியும் இல்லாதபோதும் பயன்கருதி சிரிப்பவர்கள் எப்படித் தான் சிரிக்கிறார்களோ! சிரிக்கட்டும் வாழட்டும். தங்களின் பலவீனங்களை மறைப்பதற்கும் பிறரைப் பலவீனப்படுத்து வதற்கும் சிரிப்பவர்கள் உண்டு. கொஞ்சம் கழன்றவர்களும் வாய்விட்டுச் சிரிப்பார்கள். சிலர் சிக்கனவார்த்தை சிக்கனச் சிரிப்பு என்று வாழ்வார்கள். இவர்கள் அதிகம் சிரித்தால் வாய்க்குள் இருக்கும் முத்துக்கள் கொட்டி விடும் என்று பயம் போலும்.

கவிஞர் கண்ணதாசனின் பாடல் ஒன்று நகைச்சுவை நடிகர் சந்திரபாபு பாடியது. ‘பிறக்கும் போதும் அழுகின்றாய் இறக்கும் போதும் அழுகின்றாய் ஒரு நாளேனும் கவலை இல்லாமல் சிரிக்க மறந்தாய் மானிடனே’ என்பது அது. கலகல எனச் சிரித்தால் கவலைகள் பொல பொலவெனப் போய்விடும். கை வயித்தியம், பாட்டிவயித்தியம் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். சிரிப்பு இயற்கை தந்திருக்கும் கைமருந்து. வாய் வைத்தியம் சிரிப்பு அழகை தருகிறது. ஆயுளைக் கூட்டுகிறது.

சிரிப்பு ஆகாசச் சிரிப்பு என்று ஏதோ ஒரு படத்தில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் சிரிப்பின் வகைகளைச் சொல்லி சிரித்துக் காட்டுவார். நினைவிருக்கிறக்கிறதா? ஞாபகங்கள் தாலாட்டும், ஞாபகங்கள் நிரூற்றும் என்றதே சேரனின் ஆட்டகிராப் படம். இது சங்கீதச்சிரிப்பு. இது ஆணவச்சிரிப்பு. இது அகங்காரச் சிரிப்பு என்று பலவகைகளைச் சொல்லி சிரித்தும் காட்டுவார். அவர் கலைவாணர் என்ற பட்டத்துக்குப் பொருத்தமான மனிதர். பரோபகாரி - பண்பாளர் என்றும் நினைவு கூரத்தக்கவர்.

ஈழத்தவர்களை சிரிக்கவைப்பதற்காகவே ‘சிரித்திரன்’, ‘கலகலப்பு’ என்று நகைச் சுவையூட்டும் இதழ்கள் அங்குவெளியாகின. சிரித்திரன் சுந்தரின் சவாரித்தம்பர் இன்னும் சாகவில்லை. சுந்தர் காலமாகி விட்டார். கலகலப்பு தீசன் கனடாவில் வாழ்கிறார். இவரைக் காணும்போது ஈழத்தமிழியம் நினைவுக்கு வருவதையும் குறிப்பிட வேண்டும்.

நிற்க! இந்தியத்தமிழகத்தில் ஆனந்தவிகடன், குமுதம், கல்கி முதலியன சிரிப்பு துணுக்குகளால் மக்களைச் சிரிக்க வைக்கின்றன. சிரிப்பவர் சிலபேர் அழுபவர் பலபேராகிவிட்ட காலம் இது. ‘சிலர் சிரிப்பார், சிலர் அழுவார், நான் சிரித்துக்கொண்டே அழுகின்றேன்’ என்றார். கவிஞர் கண்ணதாசன். சிரிப்பும் அழுகையும் ஒரே நேரத்தில் வருவது ஒரு அதிசயமான அனுபவம். பாம்பு செட்டையை கழற்றிவிட்டு போவது போல் துன்பதுயரங்களைக் கழற்றி விட்டுச் சிரித்தால் பாம்புக்குப் புதிய செட்டை வளர்வது போன்று உள்ளத்திற்கு புதிய உணர்ச்சி தோன்றி வளரும். யாருக்குத்துன்பம் இல்லை? யாருக்கு துயர் இல்லை?

வாழ்க்கைத்துன்பங்கள் புதிதில்லை. பழையது தான். இந்த துன்பத்தில் ஒரு மனிதனின் வாழ்வு குறித்து ஒரு சங்ககாலப் புலவன் அருமையான கதை சொல்லியிருக்கிறான். ஒரு மனிதன் வழியால் சந்தோஷமாக நடந்து கொண்டிருந்தான். திடீர் எனக் காட்டு மிருகங்கள் அவனைத் துரத்தியது. அவன் அதிலிருந்து தப்புவதற்காய் ஓடினான். மிருகங்களும் விடவில்லை. அவனும் நிற்க வில்லை. களைக்க களைக்க ஓடினான். புற்கள் மண்டிக் கிடக்கும் பக்கமாய் ஓடிய பொழுது திடீர் என்று ஒரு பள்ளத்துள் விழுந்தான். அது பள்ளமல்ல பாழும் கிணறு. அந்தக் கிணற்றுக்குள் விழும் போதே அந்தரத்தில் புல்லுக்கத்தையை பிடித்துக் கொண்டான்.

சற்று மூச்சைவிட்டு சுதாகரித்துக் கொண்டு கீழே குனிந்து பார்த்தான். கிணற்றுக்குள் கொடிய பாம்புகள் படம் எடுத்துக் கொண்டிருந்தன. கிணற்றுக்கு மேலே சிங்கம், புலி, கரடி. கிணற்றுக்கு கீழே நச்சுப் பாம்புகள். இதற்குள் அவன் ஆதரவாய் பிடித்துக் கொண்டிருந்த புல்லுக்கத்தையை எலிகள் நறுக்கிக் கொண்டிருந்தன. இன்னும் சொற்பநேரத்தில் எலிகள் வெட்டிய புல்லுப் பிடியோடு கிணற்றுக்குள் போகவேண்டும். இது நடக்கத்தான் போகிறது. இதே நேரத்தில் இவன் பிடித்திருந்த புல்லுக் கத்தைக்குள் இருந்த தேன் கூட்டிலிருந்து தேன் துளிகள் சிந்துகின்றன. இவன் நாக்கை நீட்டி அத்துளிகளை சுவைத்தானாம். வாழ்க்கை இப்படித்தான் இருக்கும். சிந்தும் தேன் துளிகளை ஏந்துங்கள் என்கிறான் அப்புலவன்.

நமது வாழ்வில் சிரிப்பையும் இப்படியே ஏந்த வேண்டியதுதான். ஆட்களுக்காய், தமது தேவைகளுக்காய் சிரிப்பவர்கள் பலர் என்றேன். 1962ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். ஒரு வள்ளுவர் விழாவுக்குச் சென்றிருந்தேன். யாழ்ப்பாணத்தில் விழா நடந்தது. என்னோடு முன்வரிசையில் ஒரு பத்திரிகைத்துறை நண்பரும் கூட இருந்தார். யாழ். ஈழநாடு இதழில் பணியாற்றியவர். பெயர் வேண்டாம். நாகரிகம் இல்லை. மேடையில் ஒருவர் பேசத் தொடங்கினார். ஆரம்பத்தி லேயே திருக்குறளை எழுதியவர் திருவள்ளுவ நாயனார் என்று அவர் பேசினார். உடனே பத்திரிகை நண்பர் ஸ்சு..ஸ்சு..ஸ்சு..கொட்டி பல்லைக்காட்டி தலையை ஆட்டிச் சிரித்தார். சபையோர் அசையாமல் இருந்தனர். அவர் பேசி முடிய வேறு ஒருவர் வந்து, திருக்குறளை சமுதாயப்பிரச்சனைகளோடு தாடர்படுத்தி நகைச்சுவை ததும்பப் பேசினார். எல்லோரும் சிரித்தனர். ஈழநாடு எழுத்தாளர் சிரிக்கவேயில்லை.

கூட்டம் முடிந்தது நான் அவரைக் கேட்டேன் ஆரம்பத்தில் பொருட்சுவையோ, நகைச் சுவையோ இல்லாமல் பேசியவருக்கு வரிக்குவரி வாய்விட்டு ச்சு..ச்சு..ச்சு.. என்று சப்புக்கொட்டியும் நீ சிரித்தாயே. சபையில் கூட ஒருவரும் சிரிக்கவில்லை. அடுத்து வந்து பேசியவர் நல்ல நகைச்சுவையோடு பொருட் சுவையும் கலந்து பேசினார். சபையோர் சிரித்தனர். கைதட்டி வரவேற்றனர். நீ ஏன் சிரிக்காமல் இருந்தாய்? நண்பர் சொன்ன பதில் என்னை ஆச்சரியப்படுத்தியது. முதல் பேசியவர் எங்கள் பத்திரிகையின் பணிப்பாளர். அடுத்துப் பேசியவர் எங்கள் பத்திரிகை ஆசிரியர் குழுவில் ஒருவர். பணிப்பாளர் என்றால் அர்த்தமில்லாமல் சிரிக்க வேண்டுமா? என்று கேட்டேன். சம்பளம்



தாறது அவர். அடுத்தமாதம் சம்பளத்தைக் கூட்டிக் கேட்கவும் இது உதவும் என்று சொல்லிய படியும் சிரித்தார். நல்ல தருணமடா இததை நழுவவிடுவாயோ என்று பாடியபடி சோழியன் குடுமி சும்மா ஆடாது என்றும் சொன்னார். இத்தனைக்கும் அவர் மொட்டைபொஸ்.

உன்னோடு வேலை செய்பவர் நன்றாகப் பேசினாரே என்றேன். அவரைத் தனியாகக் கண்டு பாராட்டுவேன். அவருக்கும் இது ஏன் என்று புரியும். என் சிரிப்பு என் நண்பருக்கும் சம்பளவிடயத்தில் உதவும். இது வாழும்வழி. வயிற்றுக்குச் சோறிட வேண்டும் என்றார். இப்படி நகைச்சுவை சிரிப்பு, அரங்க நிகழ்வுகள் எத்தனையோ இருபதாம் நூற்றாண்டில் நடந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் நடந்திருக்குமோ? இருபத்தோராம் நூற்றாண்டிலும் நடக்கின்றன. நடக்கட்டும்.

உடல் ஆரோக்கியத்திற்கு மனம்விட்டுச் சிரிப்பதை நாம் சிந்தையில் கொள்ள வேண்டும்.


*இதுவாழும் வழி,*
*வாழவைக்கும் வழி.*



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

A1 கொழும்பு
போட்டோ ஸ்ருடியோ & விடியோ
அனைத்து போட்டோ, விடியோ படப்பிடிப்புகள்
எல்லா வகையான போட்டோ விடியோ வேலைகள்
2 பாஸ்போட் $5.00 2 லான்டட் காட் $5.00
2 சிற்றிசன் $5.00 - 2 அனைத்துவிதமான ஐ. டி.$5.00
3 - 5X7 ஸ்ருடியோ போட்டோ $15.00
From: அல்பத்துடன் போட்டோ PACKAGES
25 - 5X7 பிறந்த நாள் போட்டோக்கள் $75.00
50 - 5x7 பூப்புனித நீராட்டு விழா $150.00
100 - 5x7 திருமணவிழா $300.00
2296 EGLINTON AVE. EAST @ BIRCHMOUNT ROAD
UNIT 3 LOWER LEVEL, Web: www.tamilsyellowpeages.com
Mobile: 416-752-4444 Tel: 416-755-2333

# வாழ்க பல்லாண்டு!



விளம்பரம் எடுக்கும் ஒன்றிணைவு விழாவதில் விளக்கமுற கலந்திருக்கும் இனிய உறவுகளே
விளக்கொளி போல் அறிவொளி வீசும் உங்களுக்கு
விளம்பிட விரும்புகிறேன் புத்தாண்டு
வாழ்த்துடன் வணக்கத்தினையும்

வணக்கம்

இமை மூடித் திறப்பது போல் இருபது வருடங்கள்
விதை பல ஊன்றி விரைந்தோடித் கழிந்தது
கதையதில் மரபணு தாங்கிய உயிர்கள் உறவுகள்
சுமை பல தாங்கிய போதிலும்
கொணர்ந்தனர் விளம்பரம்

விளம்பரம் பற்றி விளம்பிடல் எளிதன்று
களம் பல அமைத்து செறிவுடை கருத்துக்கள் பல பொறித்து
நலமுடை தமிழர் குமுகம் நலிந்திடாவண்ணம் காக்க
குலமுறை பேணி இந்தக் குழாம் செயும் கொடை இது எனில் அது மிகையன்று

விருந்தினைப் பேணி மருந்தையும் பகிர்ந்துண்ட பரம்பரையினர்
கருந்துளை தாண்டியும் கணக்கற்ற ஆராய்ச்சி கண்டிடும் மதியினர்
மருந்தினை வேண்டிடா மகத்தான உடல் பேணவழிகூறும் அறிவினர்
வருந்தாத வாழ்வு தமிழர் பெற்றிட வருந்தி உழைக்கும் விளம்பரக் குடும்பத்தினர் வாழ்க பல்லாண்டு!

தாயக நிலைமை உலகின் தனித்துவ நிலைமை
மாய வாழ்வில் மறைந்துள்ள உண்மை
ஆய்வுகள் தந்திடும் அன்றாட நிலைமை
காய்தல் உவத்தலின்றி கனதிமிகு தகவல்களையும் தந்திடும்
விளம்பரக் குடும்பத்தினரே நீவிர் வாழ்க பல்லாண்டு!

சேமிப்பின் தேவையையும் செல்வம் பெருகும் வழிகளையும்
வாசிப்போர் தரமுயர்ந்த வரலாற்றுத் தகவல்களையும்
நேசித்து இறையன்பைப் பெற்றுய்யும் வழி கூறி
பிரபஞ்சமதில் பொதிந்துள்ள பேருண்மை பல தந்து

திரையுலகச் செய்திகளைத் தித்திப்பாய் தீட்டியும்
விரைவாக வீட்டுச்சந்தை விபரங்கள் கூறியும்
தரை வாழ்வு இனித்திட கவி, சிறுகதை, இலக்கியங்கள் தாங்கியும்
பரம்பரை பாவித்த இயற்கை மூலிகையின் தனித்துவம் கூறியும்
ஆயுள் வாகனக் காப்புறுதித் தகவலுடன்
களம் ஆடும் விளையாட்டுச் செய்திகள் கூறி
ஆளுமை வளர்ச்சிக்கும் அறிவுரைகள் பல தந்தும்
ஆற்றல் பல பெறும் வகை மாணவர்க்குக் கணிதப் பயிற்சியளித்தும்

தமிழ் நாட்டின் சுற்றுலா இடங்களைச் சுட்டிக் காட்டியும்
தமிழன் தன் இராசம்மா இராச்சியத்தைக் கட்டிக்காத்தும்
தங்கி வாழ வாடகை வீடு தேடுவோர்க்கு வழிகாட்டியும்
சமூக விளம்பரங்களைத் தாங்கியும்

கனடாவின் கதை சொல்லி காபன்ஹேகன் கருத்துக்கூறி
மனதுக்கு மகிழ்வூட்டும் அழகுக்கும் விளக்கம் தந்து
தினந்தினம் காண்பவற்றை சக்கர ஊர்த்திப் பயணங்களாக்கி
கனதிநிறை விடயங்களை எளிதாக்கித் தரும் விளம்பரம் குழுவினரே நீவிர் வாழ்க பல்லாண்டு!

நன்றி
மீரா

# நீதன் சண் தொகுதி 42இன் நகரசபை உறுப்பினருக்கான வேட்பாளராக அறிவிக்கின்றார்

ஸ்காபரோ, ஒன்ராரியோ ஒரு நீண்டகால குமுக செயற்பாட்டாளரும், பொதுப்பாடசாலை அறங்காவலருமான நீதன் சண், தொகுதி 42இன் நகரசபை உறுப்பினருக்கான வேட்புமனுவை நகர மண்டபத்தில் தாக்கல் செய்தார்.

ரொறன்ரோ மாநகரில் நன்கு அறிமுகமான குமுகத் தலைவரான நீதன் சண், ஸ்காபரோ ரூச் றிவர் வதிவாளர்களை தான் நகரசபையில் திறம்பட பிரதிநிதித்துவப் படுத்துவேன் என நம்புகின்றார். வேட்பாளராக அறிவித்த, நீதன் சண், "42ஆம் தொகுதிக்கு தேவையான அங்கிகாரத்தையும், வளங்களை கொண்டு சேர்ப்பதற்காகவும், வதிவோரிடையேயும், நகரசபையிடையேயும் உரிய தொடர்பாடலை ஏற்படுத்தவுமே, நான் இத்தொகுதியில் போட்டியிடுகின்றேன்" எனச் சுறுசுறுப்புடன் குறிப்பிட்டார்.

நீதன் சண் ஸ்காபரோவில் கடந்த பத்தாண்டுகளாக கல்வி, குழந்தைகள், இளையோர் வேலை, வேலை வாய்ப்பு, குடிவரவு, வறுமைக் குறைப்பு உள்ளடங்கிய பல துறைகளிற் பணியாற்றியுள்ளார். இருபதுக்கும் கூடிய பாடசாலைகளில் மாலை நேர நிகழ்ச்சித்திட்டத்தை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றியுள்ளார். அவரது குமுகத்தில் அவர் ஆற்றிய சேவை பல திட்டங்களும் அமைப்புக்களும் தொடக்கப்படுவதற்கும், வலுப்பெறுவதற்கும் வழியமைத்தது.

அவர் தேர்வாகியதும், நகரசபை அரசை இன்னமும் அணுகவும், விளங்கவும், நம்பவும், அனைவரும் அணுகவும் கூடியதாக அமைப்பார். நீதன் தனது பத்தாண்டுக்கு மேலான குமுக மேம்பட்டுப் பட்டறிவைக் கொண்டு நகரசபை, தொகுதி 42இன் ஒவ்வொரு வதிவாளருக்குமாக உழைப்பதை செய்வதை ஆவன செய்வார். நீதன் 21ஆம் நூற்றாண்டில் எமது தலைமைத்துவத்துக்குத் தேவையான சமநிலையைக் வழங்குபவர். அவர் நான்கு ஆண்டுகள் தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலராக அரசியற் பட்டறிவையும், அத்தோடு புதிய தலைமுறைக்கு உரித்தான புதுமை, ஆக்கம், மற்றும் உற்சாகத்தையும் கொண்டுள்ளார்.



நீதன் சண்ணுக்கு ஆதரவு வழங்கி வந்த நீண்டகால மல்வேர்ன் வதிவாளரான திரு. நடா விஜயபாலன் குறிப்பிடுகையில், "இச்சுற்றாடலுக்குத் தலைமை மாற்றம் தேவையானது, தொகுதி 42இன் வதிவாளர்கள், நகரம் எவ்வாறு செயற்படுகின்றது என்பதில் ஈடுபாடு காட்ட உரிய வாய்ப்புக் கிடைப்பதற்கு இப்போதாவது காலம் கனியவேண்டும்." எனத் தெரிவித்தார்.

தெற்காசிய குமுகங்கள் நீதன் சண், ஒக்டோபர் 25, 2010இல், ரொறன்ரோ மாநகரில், இளைய தெற்காசிய நகரசபை உறுப்பினராகி ஒரு வரலாறு படைப்பார் என்று எதிர்பார்க்கின்றார்கள். தற்போதைய நகரசபையில் உள்ள 44 உறுப்பினர்களில் ஒருவர் கூட தெற்காசியர் இல்லை. நீதன் தேர்வாகிய பின், ரொறன்ரோ நகரசபைக்குத் தேர்வாகும் முதற் தமிழரும் ஆவார்.

நீதன் சண் ரொறன்ரோப் பல்கலைக்கழகத்தில் அறிவியல் (science) மற்றும் கல்வியில் (education) என இரண்டு இளங்கலைப் பட்டங்களைப் பெற்றுள்ளார். தற்போது அவர் குமுகவியலில் (sociology) மற்றும் ஒப்புரவில் (equity) கலை முதுகலைப் பட்டத்தை நிறைவுசெய்கின்றார். தெற்காசிய குமுகங்களுக்குச் சேவையாற்றும் CASSA எனும் அமைப்பில் நிறைவேற்று இயக்குநராகப் பணியாற்றுகின்றார். நீதன் சண் ஆசிரியர், குமுக சேவை அமைப்பின் நிறைவேற்று இயக்குநர், வானொலி - தொலைக்காட்சி ஒலிபரப்பாளர் மற்றும் குமுகத் தேவை மற்றும் பாதிப்புப் பற்றிய ஒரு நிகழ்ச்சித் தொகுப்பாளர் என்று பல சவாலான பாத்திரங்கள் ஏற்றுள்ளார். அவர் பல ரொறன்ரோ குமுக அமைப்பின் முக்கிய நபர் விருது, நகரகக் கூட்டமைபின் இனத் தொடர்பாடல் விருது முதலான விருதுகளால் சிறப்பிக்கபட்டுள்ளார். மேய்றீ நிறுவனமும் மற்றத்துக்கான தலைவர்கள் நிகழ்ச்சித்திட்டத்தை நிறைவு செய்ததற்காக சிறப்பித்தது.

கூடுதல் விவரங்களுக்கோ, நீதனுடனான ஊடக நேர்காணலுக்கோ, ஊடக ஒருங்கிணைப்பாளர் பிரகால் திருவைத் 416-727-3034 என்ற எண்ணூடாகவோ நீதன் சண்ணை 416-824-3399 என்ற எண்ணூடாகவோ அல்லது info@neethanshan.ca என்ற மின்னஞ்சலூடாகவோ தொடர்புகொள்ளலாம்.

ஒரு கூரையின் கீழ் அனைத்துவகை வணிக நிறுவனங்களும், அலுவலகங்களும்

நவீனம் | மலிவு | பல் தெரிவு | தாயக வாசனை | வட அமெரிக்காவின் முதல் தென்னாசிய வணிக மையம்




Jewellery Shops
Textiles & Fashion Clothing
Tailoring Shops
Dollar Shop
Grocery & Convenience Store
Book Store
Video Store
Gift Store
Computer Stores
Internet Service
Cellphone Centre
Lotto Centre
Online Store
Radio TV repair Shop
Kitchen Ware
Ink & Toner Store
Electronic Shop
Satellite Shop
Printing & Design
Café

Cake House
Beauty Parlor/Skin Care
Hair Salon
Party Supplies
Money Transfer
Charted Bus Services
Dry Cleaning
Airconditioning & Heating

Medical Office
Pharmacy
Physiotherapy
Law Offices
Real Estate Office
Mortgage Office
Accountant Office
Insurance Office
Newspaper Office
Astrology

Open 7 days
Mon - Sat : 9am - 9pm
Sundays & Holidays : 10am - 8pm
More than 50 Stores and Offices

GTA Square
INDOOR MALL
5215 Finch Ave. East, Scarborough, ON
(Middlefield & Finch)

# இறைவன் எமக்குள் உறைகின்றார்

இறைசக்தி சிறு பொறியாய் எமக்குள் உறைகின்றது எனும் காலத்தை வென்ற உண்மையை சகல மதங்களும் தவறாமல் இயம்புகின்றன.

காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி லிங்கமாக
நேயமே நெய்யும் பாலாய் நிறைய நீர் அமைய ஆட்
பூசனை ஈசனார்க்கு போற்றவிக் காட்டினோமே!
என அன்று அருளிச் சென்றார் அப்பர் பிரான்.

யேசு கிறிஸ்துவின் சிஷ்யர் பவுல் ***(Paul)*** ‘இறைவனின் சக்தி உறையும் கோயில் நீங்கள் தான் என்பது உங்களுக்குத் தெரியாதா?’ என புனித வேதாகமத்தில் வினவுகிறார். இறைசக்தி எமது உள்ளுணர்வாய், மனச்சாட்சியாய் தகுந்த நேரத்தில் எமக்கு வழிகாட்டி அருள்வதனை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்திருக்கின்றோம். ‘இறைவன் எப்பொழுதும் எமக்குள் இருக்கிறார்’ எனும் உண்மை எமக்குப் புரிந்தவுடன் எமது பயம் பறந்தோடி விடும். ‘எனைநோக்கி நீ ஓரடி வைத்தால் நான் உனக்கு உதவ ஓடோடி வருவேன்’ எனும் கலியுக அவதாரபுருஷர்களாகிய ஷிர்டி சாயிபாபாவும், பகவான் சத்யசாயிபாபாவும் வலியுறுத்துகிறனர். இறைவன் என்னை வழிநடத்துவது ஒவ்வொரு கணத்திலும் எனக்குப்புரிகின்றது. ஆதி அந்தமற்ற, எங்கும் நிறை இறைவன் உறையும் கோவில் எனது உடல் எனும் உண்மையை இன்று நான் மனப்பூர்வமாக நன்கு உணர்கின்றேன். அன்பானவர்களே! நாம் உண்மையில் தெய்வீகமானவர்கள், இறைஸ்வரூபத்தின் வடிவத்தினர் எனும் கருத்தினைச் சரிவரப் புரிந்து கொள்ளாது எம்மில் பலர் தடுமாறிப் போராடிக் கொண்டிருக்கின்றோம். இறை நியதி நித்யமே எமது சுய அறிவு என்பதை நாம் புரிந்து கொள்வதில்லை.

இறைவனின் ஆலயம் நாம் என்பதனால் எமக்கு விளங்குவது என்ன? நாம் உண்மையில் புனிதமானவர்கள் - தெய்வீகமானவர்கள். இறைவனின் சக்தியும் தார்மீக நோக்கமும் எமக்குள் நிறைந்திருக்கின்றன. இது எமக்குத் தெரியும் என்று பலர் கூறினாலும் அன்றாட வாழ்க்கைப் பிரச்சனைகளின் போது அதை மறந்து விடுகின்றனர். எமது ஆன்மீக சக்தியினால் சாதிக்க வேண்டியவற்றை உடல் ரீதியாக மட்டுமே சமாளிக்க முயல்வதனால், எமது இறைசக்தி பூரணமாக வெளிப்பட இடம் கொடுக்க நாம் மறந்து விடுகிறோம். உடலெனும் ஆலயத்தில் எமது ஆன்மீக சக்தி ஒருபோதும் உபயோகிக்கப்படாமலே வீணாகித் தேங்கி நின்று விடுகின்றது. ஆண்டவனை நினைவு கூர்ந்து, அவர் சொல்வதைச் செவிமடுத்து அவரைப் போற்றித் துதிக்காது, எமக்குள்ளிருக்கும் இறைசக்தியைச் சரிவர உபயோகிக்காது விரயமாக்கி விடுகிறோம்.


உனைப்படைத்த இறைவனின் மனம்தான் உனது மனம். இறைவனின் சக்தி தான் உனது சக்தி. இந்த உண்மையை அறிந்து அங்கீகரிப்பதன் மூலம் கடவுளின் கருவியே நீ என்பதனைத் தெரிந்து கொள்கிறாய். இறைவன் ஒருபோதும் நேரில் தரிசனம் கொடுப்பதில்லை. உன் மூலமாகத் தான் தெய்வம் செயற்படுகின்றது. அண்டசராசரங்களையும், கோடானுகோடி ஜீவராசிகளையும் ஆட்டிப் படைத்திடும் அப்பேரருட் சக்தி உனது உறவுகள், பிள்ளைகள் பல்வேறு லௌகீகப் பிரச்சனைகள் போன்ற சிறு விடயங்களைச் சமாளித்திட உனக்கு உதவாதா? உனக்குள்ளிருக்கும் ஆன்மீக சக்திதான் உனது உண்மையான ஸ்வரூபம், உனது தெய்வீகத்தின் அத்திவாரம் என்பதை உணர்ந்து நீ அதனை ஏற்றுக்கொண்டவுடன் உனது வாழ்வு நிச்சயம் மாறும். நீயே வணங்கக்கூடிய ஆலயமாக மாறி தெய்வமாக நீ மேம்படுவாய்.

உனக்குள் நீக்கமற நிறையும் இறைசக்தி தான் உனது உண்மை ஸ்வரூபம் என்பதனை இன்றுவரை அங்கீகரிக்காமல் இருந்திருக்கலாம். இன்றுமுதல், ஏன், இந்தக்கணம் முதல் சக்தி மிகுந்த நன்மை, அமைதி, பேரின்பம் போன்றவற்றால் உன்னை நிரப்பிக்கொள். சற்று நிதானித்து இறைஸ்வரூபமாகவே நீ மாறிவிட உனக்கு நீயே அனுமதிகொடு.

**இன்றுமுதல் பேரருட் சக்தியாகிய இறைவன் எனக்குள் உறைகின்றான் எனும் உண்மையை உணர்ந்து அதை அனுபவித்து இன்புற ஆரம்பிக்கின்றேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 162

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி

NuTek COMPUTERS
www.nuTechComputer.com
- Virus Removal
- Internet Sharing
- Computer Tune Up
- Computer Repair
அனைத்து கணனி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES




வீடு, வியாபார நிலையங்கள் வாங்க - விற்க
எந்தவித அடமானக் கடன்களும் பெற
Direct - 416.575.5055
Anton Jeeva
Real Estate / Principal Mortgage Broker
RE/MAX
* எனது சேவையைப் பெற்றவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மனம் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்கள் *

FOR SALE $358,000

- 27 Brimstone Cres
- Middlefiels & Finch
- 3+1 bedroom
- 3 washrooms
- 1 kitchen
- Detached house 2-Storey

For Sale $284,900

- Markham/ Lawrence
- Semi-Detached Bungalow
- 4 bedrooms • 3 washrooms
- 2 Stoves, Fridge, All Window Coverings, All Electric Light Fixtures. Gas Burner ...

FOR SALE $569,900

- 2411 Canal Rd E
- Simcoe Rd To Canal E
- 2 + 2 Bedrooms
- 2 Washrooms
- 2 Fridges, 2 Stoves, Washer, Dryer, All Elf, All Window Coverings. Farm Equipments Are Available At Reduced Cost.

Condo. for Sale $334,900

- Midland & Lawrence
- Bedroom : 3+1
- Washroom : 3
- All Elfs, Fridge, Stove, Washer&Dryer, B/I Dishwasher, All Window Coverings.

FOR SALE $6.5 Million

- HWY 401& Markham
- Height #189-16' To Joists , #195-14' To Joists , Truck Loading Docks And Grade Level Docks Available. Tons Of Parkings Available.

For Sale $654,900

- Islington & Rutherford
- Detached, 2-Storey
- Bedroom : 4 + 1
- Washroom : 5 • All Window Coverings , Gas Stove, Fridge , Washer , Dryer , B/I Dishwasher

NEW TORONTO ICE CONDO. PHASE II



For Sale $327,500

- Markham/Eglinton
- 3-Storey
- Att/ Row/ Twnhouse
- Bedroom : 3
- Washroom :3
- Finished Walk-Out Basment With Full Fenced Backyard.Fridge & Stove, Dishwasher, Washer/Dryer

Mortgages & Mortgages Inc.
Authorize Brokerage by FSCO
REMAX VISION REALTY INC.
Speciallized in Power of Sale Homes





AVM MAX 2000
Charter and Tour Bus Company

Get Ready for March Break Tour to Florida!
(Leaving Midnight Friday March 12th and Returning Sunday Night March 21st)
(9 Days and Nights Trip) You will see the following:

1. Virginia: வேர்ஜீனியா Luray Caverns (Largest in the East)
2. Georgia: ஜோர்ஜியா Georgia Aquarium (Largest in the World)
3. Florida: புளோரிடா Disney World, Universal Studios, Sea World, Orlando Premium Outlets (Shopping), Daytona Beach

RATES:
- 4 Individuals/Room ... $550.00
- 2 Individuals/Room ... $730.00
- 3 Individuals/Room ... $640.00
- Children 9 and Under ... $350.00 (individuals are responsible for their own children)
- Price includes return bus fare to Florida, Hotel Accommodations for 7 Nights and 7 Continental Breakfasts!
- Individuals are responsible for all Entrance Fees, Driver's and Tour Guide's Tips

UPCOMING TRIPS:
June, July and August (East and West Coast Tours)

- பாடசாலை விடுமுறையை முன்னிட்டு பிள்ளைகளுக்கான சுவாரசியமான சொகுசு பயணம்.
- பெற்றோர் பிள்ளைகளுடன் மகிழ்ச்சியுடன் சென்று வர ஓர் அருமையான பயணம்.
- பயணத்தில் பயணிகளை மகிழ்ச்சிப்படுத்தி மகிழ்விப்பவருக்கு தகுந்த பரிசும் வழங்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு: AVM MAX 2000 Pl. Call: 416-609-2542